ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி" "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு" "நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—கூ. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஹு ஆடிமீ கஉ (28-7-35) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—ச.

### தோத்திரம்

இகபரமு முயிர்க்குயிரை யானெனதற் றவருறவை எந்த நாளுஞ்
சுகபரிபூ ரணமான நிராலம்ப கோசரத்தைத் துரிய வாழ்வை
அகமகிழ வருந்தேனை முக்கனியைக் கற்கண்டை அமிர்தை நாடி
மொகுமொகென இருவிழிநீர் முத்திறைப்பக் கரமலர்கள் முகிழ்த்து நிற்பாம்.

—தாயுமானசுவாமிகள்.

மாணவர் பாடல்] 4 [உரிமை ஆக்கியோற் குரியது

## வெறுங் கல்வி.

(கொழும்பு—சகிருக்கல்லூரித் தமிழ்ப்பண்டிதர்
திரு. மு. நல்லதம்பி அவர்கள்)

கும்மி

1. கல்விகற் றேமெனச் சொல்லிப் பிழைப்பின்றிக்
காலங் கழித்துத் தெருத்தெரு வாய்ப்
பல்வித வீணுரை பேசித் திரிவார்
பயன்தெரி யாரன்றோ கண்மணியே —(கல்)

2. காணி வளவுக ளீடுவைத் தார்கையிற்
காசு தொலைத்தனர் கற்பதற் காய்
வீணி விறைத்தன ரங்கிலங் கற்றென்ன
வீறுபெற் றார்சொல்லாய் கண்மணியே —(கல்)

3. வேலை கிடைத்திட வில்லையென் றின்னவர்
வீட்டுக்குப் பட்டடை யாயிருந் தால்
ஓல மிடும்பெற்ற தாய்தந்தை யர்கடன்
ஓங்கி வருத்தாதோ கண்மணியே —(கல்)

4. அந்தநாள் போன்றெழுத் தாளரென் றேயரா
சாட்சி யலுவ லகப்படு மோ
இந்தநா ளில்வெறுங் கல்வியி னாற்பயன்
எய்த விலைக்கண்டாய் கண்மணியே —(கல்)

5. மன்றத்து வாதிகள் மெத்தவுண் டுமேல்
மருத்துவர் கூட்டமும் மெத்த வுண்டு
இன்றைக்கு மக்களை கற்ப தெதற்கென
எண்ணிநீ பாரெங்கள் கண்மணியே —(கல்)

6. வேற்றுநா டேகிப் பலப்பல கைத்தொழில்
வித்தை படித்திவர் மீண்டுவந் தே
ஆற்றல் மிகுந்திடக் கூட்டுற வுத்தொழில்
ஆற்றிடல் நன்றன்றோ கண்மணியே —(கல்)

7. இலங்கையிற் காடுகள் மெத்தவுண்டு பயிர்
இன்பொடு செய்யும் வகைக ளுண்டு
கலங்குத லின்றி நயந்து திருத்திடிற்
காணலாம் நற்பயன் கண்மணியே —(கல்)

8. பருத்தி விதைத்துநற் பஞ்செடுத் தூர்தோறும்
பள்ளிகள் வீடுக ளிற்பரிந் தே
அருத்திகொள் மாணவ ரன்னையர் நூற்றிடி
லாயிரம் மிஞ்சாதோ கண்மணியே —(கல்)

9. நூற்றநூல் கொண்டு தறிகளி லேபல
நுண்ணிய சீலைகள் நெய்துகொண் டால்
ஆற்றலுங் கூடிடும் சோம்பலு மோடிடும்
ஆருக்கும் நன்றன்றோ கண்மணியே —(கல்)

10. தாய்மொழிக் கல்வியைக் கற்பதற் குப்பணம்
தான்மிக வேண்டிய தில்லைநன் றாய்த்
தாய்மொழி நாடிப் பலப்பல நற்றொழில்
தாம்புரிந் துய்குவை கண்மணியே —(கல்)

11. தீப்பெட்டி யோடு சவர்க்கா ரந்திரி
தீதறு காகிதஞ் சீர்விளக் கே
வாய்ப்புறு பின்ன லெனப்பல செய்து
வறுமை தொலைத்திடு கண்மணியே —(கல்)

12. என்னையா னெந்தப் பொழுதினுங் காக்க
வியன்றவ னென்னக் கலைபடிப் பாய்
பின்னை யொருவ ருதவி யிலாது
பிழைக்க வலகைதெரி கண்மணியே —(கல்)

"எவ்வுயிர்க்கும் அன்பாயிரு." "நடமாடுங் கோயில்களை வழிபடு."

# கொலைக்குற்றஞ் சாட்டப்பட்ட ஆசிரியர்

## இறந்த மாணவனின் உடம்பில் 37 காயங்களும் 4 அங்குல அகலமுள்ள சூடும்

### அரசாங்க வைத்தியரின் சாட்சியம்

கண்டிப் பொலிஸ்கோட்டில் பதில் நீதிபதி திரு. வி. எச். விஜயரத்தின அவர்கள் முன்பாக பீ. ஐ. வாறியன் என்னும் ஆசிரியர் சந்திரப்பிரேமா என்னும் சிறுவனைக் கொலைசெய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கில் அரசினர் வைத்தியர் சாட்சியங் கூறினர். டிஸ்திறிக் பரிசோதகர் ஆர். ஒ. டி. சில்வா வழக்கை நடத்தினர். திரு. கே. குமாரசுவாமி எதிரிசார்பாக வாதித்தார்.

டக்டர் ரீ. வான்டேசல் கொடுத்த சாட்சியம்:—"37 காயங்கள் உடம்பில் வெளியாகக் காணப்பட்டன. 4 காயங்கள் உடம்புக்கு உள்ளாகக் காணப்பட்டன. வெளியாகக் காணப்பட்டதில் 8 சூட்டுக்காயங்களாகவிருந்தன. அதிற் சில 4 அங்குல அகலமுள்ளனவாகவிருந்தன. இருதயத்தி விரத்தம் அதிகமாயிருந்தது. சுவாசப்பையிலிருந்து அச்சிறுவன் கயரோகமுள்ளவனுகக் காணப்பட்டான். சூட்டினலேயே இறந்திருக்கவேண்டும். அடி, உதை காயங்களும் காணப்பட்டன. எதிரியினுடையகைகளிலும் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன. சூடான ஆயுதங்களைக் கையினுற் பிடித்தால் அப்படிக் காயங்கள் ஏற்படக்கூடும். இக்காயங்கள் எல்லாம் சிறுவன் இறப்பதற்கு முன்னரே சம்பவித்திருக்கிறது. நீதிபதி இவ்வளவில் எதிரியைப் பிணையில் விடமுடியாதெனக் கூறி ஆவணி மாதம் 2-ந் தேதிக்குத் தவணையிட்டார்.

---

## புத்தூரில் அநாதைப் பிணம்.

### கழுத்தில் கல்லுக்கட்டியபடி கிணற்றுள் காணப்பட்டது

சென்ற 23-7-35 செவ்வாய்க்கிழமை காலையில் புத்தூர்கிழக்கு மட்டுவில் தெருவிலுள்ள ஓர் கிணற்றுள் 40-45 வயதுவரையுள்ள ஒருவரின் பிரேதம் காணப்பட்டதாம். அப்பிரேதத்தில் துலாவுக்குப் போடப்பட்டிருந்த கல்லுக் கழுத்தில் கோர்த்துக் கட்டப்பட்டிருந்தது. அரையில் கோவணம்மாத்திரமேயிருந்தது. நடுத்தரமான உயரம். கறுவல் நிறம். தலைஉச்சியில் மயிரில்லை; சிறிய குடுமி. காதில் சிவப்புக்கல்வைத்த குச்சியிருந்தது. யார் என்பதும் எந்த ஊரவரென்பதும் இதுவரையில் தெரியவில்லையாம். அரசாங்கவைத்தியர் திரு. K. இராசா அவர்கள் பிரேத பரிசோதனைசெய்து தற்கொலையெனக் கூறினரெனத் தெரியவருகிறது.

—நமது நிருபர்

### புகைரதத்தால் நேரியுண்ட யாழ்ப்பாண வாலிபன்

சென்ற வியாழக்கிழமை பம்பலப்பிட்டியில் புகைரத விபத்துக் காரணமாக, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 23 வயதுடைய திரு. கே. பொன்னுத்துரை என்னும் வாலிபர் உயிர் துறந்தார். இவரது உறவினர் யாரெனத் தெரியாமையால் பொலிசார், புகைப்படமெடுத்துக்கொண்டு பிரேதத்தை அடக்கஞ்செய்தனர். அடக்கஞ்செய்த சிலநாட்களின் பின்பே, இறந்தவர் யாழ்ப்பாணத்தவரென்றும், அவரது உறவினர் கொழும்பில் வசிக்கின்றனரெனவுந் தெரியவந்ததாம்.

## குழந்தையைக் கொலைசெய்தவனுக்கு எட்டுவருடக் கடூழியச்சிறை

### மனைவிக்கும் மைத்துனிக்கும் வெட்டு

மாத்தறை குற்றவிசாரணைச் சுப்பிறீங்கோட்டில் நீதியரசர் திரு. எல். எம். மாட்டினஸ் முன்பாக வீரக்கோனென்பவன் சென்ற ஐப்பசிமீ 18உ ஓர் 4 மாதப் பெண் குழந்தையைக் கொலைசெய்ததாகவும், தனது மனைவியாகிய சீன்காமிக்கும் மைத்துனியாகிய சிங்கப்பொலிக்கும் கத்தியால் காயம்விளைத்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்ட வழக்கு விசாரணைசெய்யப்பட்டது. விசாரணையில் எதிரி மதுபானஞ்செய்துவிட்டு வந்து போசனஞ்செய்த பின் தண்ணீர் கேட்டதாகவும் மனைவி கையில் வேலையாகவிருந்தமையால் அவனையே தண்ணீர் எடுத்துக்கொள்ளும்படி கூற, அவன் பலவாறு மரியாதையீனமாகத் தூஷித்ததாகவும், மனைவியுடைய சகோதரி இச்சச்சரவில் கலந்துகொள்ள எதிரி அவளது குழந்தையை வெட்டிக் கொலைசெய்ததாகவும் கூறப்பட்டது. நீதியரசர் யூரிமாரின் தீர்ப்பின்படி எதிரிக்கு 8வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

### நல்லூர்ச் சரஸ்வதியைக் கற்பழித்த வழக்கு

கந்தையா, கனகரத்தினம், சதாசிவம், குமாரசுவாமி, சபாரத்தினம், சுப்பையா என்பவர்கள் நல்லூரில் வசிக்கும் சரஸ்வதி என்னும் மங்கையைக் கடத்திச்சென்று கற்பழித்தனர் என்ற வழக்கு 7-8-35-ல் கிகழவிருக்கும் சுப்பிறீம்கோட்டுக்குப் பாரப்படுத்தப்பட்டிருக்கிறதம்.


சிட்டுக்குருவி சத்திஞல் செய்யப்பெற்ற

**மின்சார லேகியம்**

சாப்பிடுங்கள்

ஒரேவேளையில் குணந்தரும்

48 நாள் டின் 1க்கு ரூபா **5-0-0.** வி. பி. வேறு இனம்! — வியாபாரிகள் பரீட்சிக்க சாம்பிள் டின் இனம்!

**எஸ். முகம்மது யூசுபு வைத்தியசாலை,**

பரங்கிப்பேட்டை, (Porto Novo.)

கொளும்பு ஏசண்டு:

ச. இ. காதர் மெய்தீன், 39, ஓல்ட் பிட்சர்ஸ் ஸ்ரீட், கொளும்பு.

[(10) 14-7-35—12]


# யா. ஆ. தி. பா. வி. சங்கம்

## 1935-ம் ஆண்டு பிப்ரவரி மாசத்தில் நடைபெற்ற பண்டிதர், பாலபண்டிதர், பிரவேசபண்டிதர் பரீட்சைகளின் பெறுபேறு.

### பண்டித வகுப்பு (3-ம் பிரிவு)

1 சோமசுந்தரம் பாலசுப்பிரமணியம், நவாலி வடக்கு; 6 ஞானப்பிரகாசக்குருக்கள் சபாபதிதேசிகர், காரணவாய் தெற்கு; 3 இளையதம்பி செகராசசேகரம் (3-வது பாடத் தொகுதியிற் சித்தியடையவேண்டியது)

### பாலபண்டித வகுப்பு (2-ம் பிரிவு)

22 வைத்திலிங்கம் முத்துக்குமாரு, ஞானோதய வித்தியாசாலை மயிலிட்டி தெற்கு; 52 கந்தப்பு நடராசா, ஸ்ரான்லி வித்தியாசாலை.

### (3-ம் பிரிவு)

11 சின்னத்துரை கந்தசாமி, வேவர்செற் பிளேஸ் வெள்ளவத்தை; 12 எம். யோன் செல்லையா, அக்கரைப்பற்று; 17 பரமு சபாரத்தினம், கம்பல் பிளேஸ்; 19 சதாசிவக்குருக்கள் கார்த்திகேசஐயர், பிராசீன பாடசாலை சுன்னுகம்; 27 விசுவலிங்கம் ஆறுமுகம், பிராசீன பாடசாலை சுன்னுகம்; 31 அம்பிகாபதிபாரதி சோமசுந்தரஐயர், அமிர்தாம்பிகை வித்தியாசாலை சாவகச்சேரி; 36 சபாரத்தினஐயர் தியாகராசஐயர், சங்கத்தானை சாவகச்சேரி; 38 இளையதம்பி நமசிவாயம், விளிசிட்டி; 39 நாகலிங்கம் சாந்தநாயகி, கொழும்புத்துறை; 49 ஆறுமுகம் பொன்னையா, சைவவித்தியாசாலை காரணவாய் வடக்கு, 50 சின்னத்தம்பி செல்லத்துரை, பொலிகண்டி வல்லுவெட்டித்துறை; 64 சங்கரப்பிள்ளை சுப்பையா, முத். வித்தியாசாலை திருநெல்வேலி; 65 சங்கரப்பிள்ளை கோபாலபிள்ளை, வி. வி. சா. வண்ணர்பண்ணை; 67 வல்லிபுரம் நடராசா, சைவாசிரியகலாசாலை திருநெல்வேலி; 72 முருகுப்பிள்ளை கதிரவேலு, சிவன்கோவிலடி வட்டுகோட்டை; 78 விசுவலிங்கம் பொன்னுத்துரை, வேலணை கிழக்கு.

### சில பாடங்களில் சித்தியடையவேண்டியவர்கள்

29 சந்தவனம் கதிரவேலு (இலக்கியம்), பி. வி. சுன்னுகம்; 40 கதிரவேலு குழந்தைவேலு (இலக்கியம்), சை. வி. சா. கொழும்புத்துறை; 47 சின்னத்தம்பி முருகேசபிள்ளை (இலக்கியம்), சுதுமலை; 53 இராமு முருகேசு (இலக்கியம்), சதானந்த வித்தியாசாலை அளவெட்டி.

### பிரவேச பண்டித வகுப்பு (2-ம் பிரிவு)

91 சதாசிவம் பொன்னுத்துரை; சைவத்தமிழ் வித்தியாசாலை சுன்னுகம்; 129 கே. தம்பிப்பிள்ளை ஞானப்பிரகாசம், செயின்ற் திரேசா விடுதிப் பெண் பாடசாலை மட்டக்களப்பு, 148 சபாபதி ஆனந்தம், செங்குந்தர் சைவ வித்தியாசாலை கல்வியங்காடு; 164 அருணசலம் முருகேசு, சைவாசிரியகலாசாலை, திருநெல்வேலி; 186 கணபதிப்பிள்ளை சிவலிங்கம், சைவாசிரியகலாசாலை, திருநெல்வேலி.

### 3-ம் பிரிவு

81 கே. தம்பிப்பிள்ளை சோமசுந்தரம், நயினதீவு; 82 கணபதிப்பிள்ளை சோமசுந்தரம், நயினதீவு; 84 கணபதீஸ்வரக்குருக்கள் வைத்தீஸ்வரஐயர், பிராசீனபாடசாலை சுன்னுகம்; 86 சிவகுரு பொன்னையா, ஞானோதய பாடசாலை மயிலிட்டி; 87 கேசம்மா பொன்னையா, தெல்லிப்பழை; 88 கதிர்காமு முருகேசு, கரவெட்டி மேற்கு; 93 ஐயாத்துரை குமாரசுவாமி, கல்வளை சண்டிலிப்பாய்.

### அரசினர் ஆசிரியகலாசாலை, கோப்பாய்.

102 கந்தப்பு அருளம்பலம்; 106 ஆறுமுகம் கந்தர்; 108 முருகேசு கந்தையா; 110 இராமநாதர் கந்தையா; 112 முருகேசு நமசிவாயம்; 114 சின்னையா செல்லத்துரை, 115 ஆறுமுகம் பிள்ளையினர்; 116 சிற்றம்பலம் தம்பையா; 117 வீ. சிவக்கொழுந்து; 118 தில்லையம்பலம் மாசிலாமணி; 120 முருகேசு சின்னத்தம்பி.

127 நாகமணி முத்தையா, C/o பீ. பொன்னம்பலம் சுன்னுகம்; 128 எ. சபாபதிப்பிள்ளை ஆறுமுகராசா சின்னையா, பாரதிபாடசாலை சுதுமலை.

### கொழும்புத்துறை சேன் யோசேப் சாதனபாடசாலை

135 யாக்கோப்பிள்ளை மடுத்தீன்; 136 அந்தோனிப்பிள்ளை செபமாலை; 140 சந்தியாப்பிள்ளை ஆரோக்கியநாதர்; 141 அந்தோனிப்பிள்ளை சந்தியாப்பிள்ளை.

146 வல்லிபுரம் நாகம்மா, இணுவில் தெற்கு; 147 சின்னத்தம்பி முருகேசு, இணுவில் தெற்கு; 151 நரசிங்கர் சிவகுரு, குப்பிளான்; 153 மோசெஸ் தேவதாசன் வலந்தலை; 161 குமாரு வேலுப்பிள்ளை,' சிவியாதெரு மேற்கு.

### சைவாசிரியகலாசாலை, திருநெல்வேலி.

166 விஞசித்தம்பி சுப்பிரமணியம்; 167 தம்பிமுத்துக்குருக்கள் பாலசுப்பிரமணியம்; 168 முருகேசு இராசதுரை; 169 பொன்னையா சின்னத்துரை; 170 இளையதம்பி கயிலாயர்; 171 வீரவாகு மார்க்கண்டு; 172 சுப்பையா முருகேசு; 173 கணபதிப்பிள்ளை விசுவலிங்கம்; 175 இராமலிங்கம் கந்தையா; 176 இராமநாதர் சரவணமுத்து 177 ஐயம்பிள்ளை சிவலிங்கபிள்ளை; 178 செல்லையா ஐயாத்துரை; 180 வேதாரணியம் கணபதிப்பிள்ளை; 181 காசிப்பிள்ளை கதிரிப்பிள்ளை; 182 அருளம்பலம் குமாரசுவாமி; 183 தம்பிஐயா சுப்பிரமணியம்; 185 செல்லப்பா சரவணமுத்து.

### செயின்ற் ஆகஸ்ரீன ஆசிரிய கலாசாலை மட்டக்களப்பு

189 பஸ்ரியன் சந்தியாகோ பெர்ணண்டோ; 190 சுப்பிரமணியம் இராசலிங்கம் 194 சவரி பிரான்சிஸ்; 195 விசுவர் கதிர்காமத்தம்பி; 197 பூபாலபிள்ளை சின்னையா 201 இராமலிங்கம் செல்வமாணிக்கம்; 203 பேதுரு யீரிஸ்; 204 லாசமைக்கேல் லூன்; 206 கொன்ஸ்ரன்ரைன் அந்தோனிபாஸ்; 208 வேலாயுதம் நமசிவாயம்பிள்ளை.


மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர்

**பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள்**

எழுதிய நூல்கள்

**(1) உரை மாலை ௩-ம் மலர்**

க. பா. த. வகுப்பு 1936 (J. S. C. Class)

இலக்கியக் குறிப்பு

(செந்தமிழ்ச்செல்வமும் மணிமேகலையும்) விலை சதம் **50**

**(2) பயிற்சி மாலை ௩-ம் மலர்**

(பாஷையும் வியாசமும்) விலை சதம் **35**

**(3) பயிற்சி மாலை ௨-ம் மலர்**

(கணிதம்) விலை சதம் **60**

23-6-35—4

| |
|---|
| **பத்திரக்கிரயம்** |
| இலங்கை, இந்தியா, |
| பர்மா ரூபா 4. |
| மலாய்நாட்டுக்கு வெள்ளி 4. |
| சீவியசந்தா ரூபா 40. |
| தனிப்பிரதி சதம் 5. |
| இந்தியாவுக்கு ,, அணு 1. |
| மலாய்நாட்டுக்கு ,, காசு 5. |

# ஈழகேசரி

| |
|---|
| **விளம்பரவிகிதம்** |
| முதன்முறைக்கு |
| ஒருகலம் ரூபா 7-00 |
| ,, அரைக்கலம் ,, 4-00 |
| ,, கால்கலம் ,, 2-50 |
| அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு. |

தொகுதி — ௩. } யாழ்ப்பாணம், சுன்னுகம்: யுவ௵ ஆடிமீ ௧௩உ (28-7-35) ஞாயிற்றுக்கிழமை { பகுதி — ௪.

# அரசியல் விஷயமாக எழும் அந்தரங்க ஆரவாரம்

**"YOUNG CEYLON"**

அரசாங்கசபைத்தெரிவு அடுத்துவருவதைக்குறித்து பலவிடங்களிலும் பரபரப்பு ஏற்படுகின்றது. சூழ்ச்சிமுறையில் தமது அலுவல்களைச் செய்துமுடிக்க எண்ணுவோரும் தேசியத்தை நாடாது ஒடுங்கிய பாதையில் நிற்போரும் சும்மாவிருக்கவில்லை. முன்னர் நடந்த அரசாங்கசபைத் தெரிவுகாலத்தில் பல்வேறு கூட்டத்தினரையும் கட்சியையும் நாடாது தமது செல்வப்பெருக்கத்தில் நம்பிக்கை வைத்து இறுமாப்புடன் வேலைசெய்த சில அபேட்சகர்கள் இப்போது நாடெல்லாம் ஓடித்தேடிக் கட்சியினரையும் கூட்டத்தினரையும் தாவிப்பிடிக்கின்றனர். வேறு சிலர் அந்தரங்கத்தில் மறைந்துநில்லாது வெளியேவந்து கூட்டங்கள்கூட்டித் தமது பெருமையை யாவரும் அறிய விளக்கி வைக்கின்றனர். தேசத்தில் உயர்ந்த கொள்கைகளைப் பீடிகையாகக் கொண்டகட்சியினர் இன்மையால், சுயநலவாதிகளாகும் சிலர் அரசியல் விஷயத்தில் தாம் கொண்ட கொள்கை என்னவாயினும் சரி தமது எண்ணத்தை நிறைவேற்றிச் சித்தியடைந்துவிடுகின்றனர்.

சென்ற ஐந்து வருடங்களாக அனுட்டானத்திலிருந்த அரசாங்கசபை இலங்கை வாசிகளின் உண்மையான அரசியலுணர்ச்சியைக் கொன்றுவிட்டது தலைவர்களாக மதிக்கப்பட்டவரும் சுயநலவாதிகளாய்விட்டனர். டொனமூர்த் திட்டத்தினைத் தேச நன்மைக்கியையத் திருத்துதற்கு திருவாளர்கள். E. W. பெரேரு, G. C. S. கொறியா என்பவர்கள் செய்த முயற்சிகளும் பயனைக்கொடாது இறந்தொழிந்தன. இப்போது தேசம் சென்றுகொண்டிருக்கும் தன்மையை நோக்கில் சென்ற தெரிவு ஏற்பட்ட காலத்தில் பொதுவாக இலங்கை மக்கள் யாவராலும் உதவாதென இகழ்ந்துரைக்கப்பட்ட அரசாங்க சபைக்கு சிறிதும் தாமதமின்றி அதைப்பற்றி ஒருவித குறைதானும்கூறாது அங்கத்தவர் தெரிவுசெய்யப்படுவார்கள் போல் காணப்படுகிறது. டொனமூர்த்திட்டம் பல்வேறு வழியில் எவ்வளவு பழுதுடையதென்பதை சென்ற 5வருட அனுபவம் நன்கு காட்டியுளது. பொதுசன அபிப்பிராயம் எவ்வளவு அசட்டைபண்ணப்பட்டதென்பதும், சிலரின் பேராசைக்கு எவ்வளவு இடங்கொடுக்கப்பட்டதென்பதும் நன்கு அறியப்பட்டது.

சென்ற ஐந்து வருடங்களில் நடந்த சம்பவங்களை நோக்குவாம். எங்கள் தலைவர்களென்போர் ஒன்றன்பின்னொன்றாக எத்தனையோ முறையாக அரசினரால் அவமதிக்கப்பட்டனர். தலைவர்கள் கோழைத்தனமாக எல்லா அவமரியாதையையும் தாங்கிக்கொண்டனர். வாக்குரிமை பெற்றோரும் அவ்வாறே தாங்கினர். தேசத்தவரும் அவ்வாறேசெய்தனர். எங்களுடைய அரசியல் ஸ்தாபனங்கள் அதிகாரமற்றனவாய் விட, எமது தலைவரும் தருணத்துக்கியையநடிக்க ஆரம்பித்தனர். நாங்கள் தெரிந்தனுப்பியவர்களோ போலிகளாய்க் காலத்துக்கியையநடக்க ஆரம்பித்தனர்.

விஷயங்கள் இவ்வளவாகக் கேவலநிலையையடைந்துளதாக, யாழ்ப்பாணத்தில் வகுப்புவாதமும் மென்மேலும் தலைகாட்ட ஆரம்பித்துளது. தமக்கு அளிக்கப்படவேண்டிய உரிமைகள் யாவையென்பதையும் எடுத்துக்காட்டி நிற்கின்றனர். எந்த நாட்டிலாவது அரசாங்கசபைப் பிரதிநிதித்துவம் குறிக்கப்பட்ட ஓர்வழியில் ஏற்படவேண்டும். மாகாணரீதியாக அங்கத்தவர் தெரிவுசெய்யப்படவேண்டும். அன்றேல் வகுப்புவீதம் அங்கத்தவர் தெரியப்பட வேண்டும். வகுப்புவாதிகளெனத் தம்மைக் காட்டிநின்று வகுப்புவீதம் பிரதிநிதிகள் ஏற்படவேண்டுமெனக் கேட்பின் அதில் நியாயமிருக்கலாம். ஆனல் தமிழர் தமது தொகைக்கியைய அங்கத்தவர் தெரியப்படவேண்டுமெனக் கேட்கவில்லை. இவர்கூறும் நியாயத்தைநோக்கப் பரிதாபமடையவேண்டி யிருக்கிறது. இவர்கள் கோரிக்கை நியாயத்துக்கு விரோதமாகிறது. தாம் ஒற்றுமையை நாடுவதாகக் காட்டி மற்றைய சிறுதொகையினராம் வகுப்பினரையும் தமது பக்கத்தில் வைத்து அவர்களுக்கும் தமக்கும் இப்போது இருப்பதிலும் அங்கத்தினர் தொகை கூட்டப்படவேண்டுமெனக் கேட்கின்றனர். இவர்கள் கோரிக்கை சித்தியை அடையுமென்பது சந்தேகம். குடியேற்ற சிறிய நாடுகளைப் பிரித்தாளும் வல்லமையில் கைதேர்ந்த பிரிட்டிஷார் யாதுசெய்வாரோ தெரியவில்லை. குறைந்த தொகையினர் தமக்குள் ஒற்றுமையுடையராய்த் தமது கோரிக்கைகளை எடுத்துக்காட்டின், அதிகாரம்படைத்தோர் அதை ஆதரித்து நிற்பாரென்றும் சொல்லப்படுகின்றது. செல்வாக்குள்ள ஒருசிலர் தமது எண்ணங்களை நிறைவேற்ற எண்ணிச் செய்வன தேசநன்மைக் குரியதல்ல வென்பதை உணர்ந்து தமிழ்ப் பெருமக்கள் தமது அரிய பேருக்குப் பங்கம் வாராது காப்பது அவசியம். இற்றைக்கு ஐந்துவருடங்கட்கு முன் அரசாங்கசபையைப் பகிஷ்காரஞ் செய்து தமது மரியாதையைப் பகிரங்கமாக ஸ்தாபித்த யாழ்ப்பாணத்திலிருந்து இவ்வித சுயநலவாதிகள் கிளம்புவது பெரும் நூதனமாகின்றது. வகுப்புவாதத்தின் கெடுதிகளை நன்கறிந்த இந்தச் சமயத்தில், இவ்வித பிரச்சினைகள் கிளம்புவதும் நூதனமாகின்றது. விஷயங்கள் இப்படியாக, உண்மை யாது? தேசீய நோக்கத்தோடு உழைத்தவரை வழிகாட்டிய தலைவர்கள் மறைந்ததன்காரணமாகத் தேசத்தின்முன்னேற்றத்துக்கு மாறுனவர்கள் தமக்குள்ள சக்தியைஉபயோகித்துப்போலியாகநடிக்கஆரம்பித்துவிட்டனர்.

தேசத்தில் அரசியல்நிலை இவ்வளவு கேவலத்திலிருக்க, அரசாங்கசபையின் தலைவர்களை நோக்க முற்படினே, அதுவும் பெரும் சோர்வினையே உண்டாக்குகிறது. அங்கத்தவர் யாவரும் தாம் தாவிநின்ற கட்சிகளையும் கொள்கைகளையும் கைவிட்டுவிட்டனர். இவர்கள் யாவரும் சுயநல விருத்தியைப் பெரிதும் நாடியுழைத்தமையால் தேசத்தில் அரசியல் உணர்ச்சியையும் கெடுத்துவிட்டனர்; தம்மைக் கனம்பண்ணிப் பெரிய நிலையை அடையச்செய்த ஸ்தாபனங்களையும் கொன்றுவிட்டனர். பெரிய தலைவர்களெனப்படும் கௌரவ சேர். D. B. ஜெயத்திலகா, D. S. ஜெனனுயகா என்போர் பேரளவில் இலங்கைத் தேசீய காங்கிரஸ் சபையைச் சேர்ந்தவர். அவர் மகாசன சபைகளில் பெரிதும் சம்பந்தமுடையவர். அச்சபையில் இடம் பெற மெஸ். S. W. R. D. பண்டாரநாயக்கா முயன்றும் வாய்க்கவில்லை. கிராமச்சங்கங்களின் மகாசபையைக் கூட்டி மேனிலையடைய முயன்றும் வாய்க்கவில்லை. தாம் நிலையாக இடம் பெற்றுத் தேசத்தவரின் நம்பிக்கையைப் பெறக்கூடிய சங்கம் யாதெனத் தேடிப்பார்க்கின்றனர். தாம் அதின் தலைவராக வரலாம் என்னும் எண்ணமிருப்பதாற்போலும் திரு. E. A. P. விஜயரத்தின என்பவர் தேசீய காங்கிரஸ் சபையை விட்டுவிலகவில்லை. ஆனல் மெஸ். கொறியா அச்சபையை விட்டு மெல்லமாகக் கழருகிறார். அடுத்த அரசாங்கசபையில் மந்திரித்துவம் கட்டாயம் பெறலாமென்ற நம்பிக்கையுடையாராகையால் ஏன் சங்கடம் பிடித்த சபைகளுடன் நின்று இழுபடுவான்.

இப்போது மந்திரியாராகவிருக்கும் கௌரவ பத்துவன்துடாவவும், பெரி. சுந்தரம் அவர்களும் தாராளக்கட்சியைக் (Liberal League) கொன்றவர்களெனலாம். பெரி. சுந்தரம் அவர்கள் இப்போது இந்தியர்களின் நட்பைப் பெரிதும் பெருக்கிநிற்கின்றனர். இவர் இப்போது இந்தியர்களின் அங்கத்தவராகவே கருதப்படுகின்றனர். அடுத்த தெரிவில் இவர் அனுட்டிக்கும் நிலை பெரிதும் உபயோகமாகும். மெஸ். A. E. குணசிங்கி அவர்கள் இன்னும் தொழிலாளர்கட்குத் தலைமை வகித்துச் செல்கின்றனர். தொழிற்கட்சியினர் முன்னர் பெற்றிருந்த அதிகாரங்களைக் கைபிழந்துவிட்டனர். முன்னர் போல் பேச இவர்கட்கு முதுகெலும்பு கிடையாதாகும்.

உண்மைத்தலைவர் இல்லாத நமது நாட்டில் வாக்குரிமை பெற்றோரே நாட்டின் அரசியல்நிலையைச் சீர்திருத்தவேண்டியிருக்கிறது. மென்மேலும் சுதந்திரம் வேண்டுமென அவர்களே கிளர்ச்சி செய்யவேண்டியதாகிறது. சென்று ஐந்து வருடங்களாக அனுட்டானத்திலிருந்த அரசியல்முறை, அரசாங்கசபை யங்கத்தவரின் அரசியல் உணர்ச்சியைப் போக்கடித்துவிட்டது. தேசத்தவர்கள் அனுப்பப்பட்டு இருளால் மூடப்பட்டனர். அரசாங்கசபைத் தெரிவு ஏற்படும்போதுதான் சனங்கள் தமக்குப் பூரணசுதந்திரம் வேண்டுமெனக் கேட்கும் தருணத்தையுடையர். சனங்களின் பிரதிநிதிகளுக்குப் பொறுப்பாகாத அரசியற்றிட்டத்தின் அநர்த்தத்தை அரசாங்க சபையின் அனுபவத்தால் யாவரும் நன்கறியலாயினர். இன்னும் ஐந்து வருடத்துக்கு அரசாங்கசபை நிலைபெறுமாயின், இலங்கை மக்கள்மாட்டுள்ள அரசியற் சுதந்திர முன்னேற்ற உணர்ச்சி முற்றாக நீங்கிவிடுமோ? இலங்கை வாசிகள் பெற விரும்பும் சுதந்திரம் யாதென்பதை நாம் எடுத்துக் காட்டி, அழுக்காற்றால் பீடிக்கப்படாதிருக்கும் இளைஞரின் உதவியுடன் சுதந்திரப்போர் நடத்தப்படவேண்டும். அரசாங்கசபைக்கு அபேட்சகராக வருவோரிடமிருந்து அவரின் கொள்கைகள் இன்ன என்பதைக் கைச்சாத்துடன் பெற்றுக்கொள்ளவேண்டும். அப்போதுதான் பின் அவர் தமது கொள்கைகளை மாறாது உறுதியாக நிற்பர். அநேக வருடங்களாக அங்கத்துவம் வகித்தவர், யாவராலும் நன்கு மதிக்கப்பட்டவர் என்ற நியாயங்களை நம்பி யவம்போவது நல்லாயில்லை. அரசாங்கசபையில் யாவரதும் நம்பிக்கையையும், மதிப்பையும் பெற்றுத் தமது கடமையை ஒருகால் ஆற்றியவர், பின்னர் தமது கொள்கையை முன்பின் யோசியாது மாற்றிச் சுயநலவாதிகளாய் விடுகின்றனரென்பதை அனுபவத்தில் யாவரும் அறிந்திருப்பர். இதை அனுபவத்தில் கண்டும் மென்மேலும் பிழைவிடுவதா? சில காலத்துக்குமுன் இரண்டு இடைத்தேர்தல்கள் ஏற்பட்டன. அப்போது தெரியப்பட்டவர்கள் தமது அரசியற்கொள்கைகள் யாதென எடுத்துக்கூறினது கிடையாது. தமது கொள்கைகளைத் தெரிவியாதவர்களை அங்கத்தவராகத் தெரியும் வழக்கம் மிகவும் நட்டத்தை வருவிக்கும். இவ்விஷயங்களில் வாக்குரிமைபெற்றோர் பெரிதும் அக்கறைகாட்டவேண்டும். அடுத்த ஐந்து வருடங்களில் அரசியல் விஷயங்களில் அநேக மாற்றங்களும் திருத்தங்களும் ஏற்படவேண்டியிருக்கும், ஆகையால் நாம் மிகத் திறமை வாய்ந்தவரையே அனுப்பவேண்டும். தேசநலத்துக்குரிய கொள்கைகளை அவர்கள் தர்ம் திடமாக ஆதரித்து நிற்பதாக வாக்குக்கொடுக்க வேண்டும். இதுவரையும் அநேக பிழைகள் விட்டுள்ளோம். எமது பிரதிநிதிகளாவோர் எம்மைமதியாது தாம் நினைத்தபடிசெய்ய இடங்கொடுத்தோம். இதுவரையும் நாம்பெற்ற அனுபவத்தை உதவியாகக்கொண்டு நாம் எம்மைத் திருத்தாவிடின் நாம் ஒருபோதும் உண்மையான முன்னேற்றத்தை அடையோம். உண்மையைக்கூறின் சென்ற ஐந்தாண்டிலும் நாம் பின்னுக்கே சென்றோமெனலாம். எமது பெலன் சிதைபடலாயிற்று. இப்போது நாம் சிறிதளவுக்காவது முன்னேறவேண்டில், இலங்கையிலுள்ள பல்வேறு சாதியினரும் ஒருங்குசேர்ந்து பெருமுயற்சி புதிதாகச் செய்யவேண்டும். அப்போதான் நாம் உண்மைச் சுதந்தரத்தை நோக்கிச் செல்லும் பாதையையடைவோம்.

துறவறத்தைக் கொண்டவரது பெருமையே இவ்வுலகி லுயர்ந்தது.

கடிதம்.

## சிறுபான்மையோர் பாதுகாப்பு.

'ஈழகேசரி' ஆசிரியர் அவர்கட்கு:

ஐயா,

இலங்கை அரசாங்கசபையில் சிறுபான்மையோருக்கு அதிக ஸ்தானங்கள் வேண்டுமென்பதாகச் சிலர் தேசாதிபதிக்கும் குடியேற்றநாட்டு மந்திரிக்கும் மனுப்பண்ணிக்கொண்டிருக்கின்றனர். சிறிதுநாட்களுக்குமுன் யாழ்ப்பாணச்சங்கம் என்றபெயரால் சிலர், ஒரு மனுதயாரித்து அனுப்பியதாக அறிகிறோம். அதில் தமிழரின் பாதுகாப்பிற்காக இருபத்தைந்து வீதமான அரசாங்கசபை ஸ்தானங்கள் தமிழருக்குவேண்டுமென்பது ஒன்று. தமிழருக்குக் கூடிய ஸ்தானங்கள் கிடைப்பது நமக்குச் சந்தோஷமே. ஆனால் 25வீதமான ஸ்தானங்கள் அரசாங்கசபையில் பெறுவதனால் சம்பளம்தவிரத் தமிழருக்கு அரசாங்கசபை மூலம் கிடைக்கக்கூடிய விசேடநன்மை எது என்பது எமக்குத் தோன்றவில்லை. ஒரு உதாரணமூலம் அரசியலபிமானிகள் விளக்குவார்களா? இந்தியத் தமிழர் சோனகர் ஐரோப்பியர் ஆகிய யாவரும் சிறுபான்மையோர்களல்லவா? அவர்களுக்கும் தனித்தனி இருபத்தைந்து வீதமான ஸ்தானங்கள் ஏன் ஒதுக்கிவைக்கக்கூடாது?

அநுராதபுரம் அங்கத்தவரான திரு. H. R. பிறீமன் அவர்களுக்கு எத்தனை ஐரோப்பியர் வாக்களித்தனர். கொழும்பு வடபகுதி அங்கத்தவரான ஸ்ரீமதி நேசம் சரவணமுத்துவுக்கு எத்தனை தமிழர் வாக்களித்தனர்? பலாங்கொடையில் கர்ணல் ஜெயவர்த்தனவுடன் போட்டியிட்டுச் சில வாக்குகளே குறைந்துபோன ஸ்ரீமான் வேலுப்பிள்ளைக்கு எத்தனை தமிழர்கள் வாக்களித்தனர்? தேசாபிமானிகளாகவும் அரசியலில் கரிசனையுடையோராகவும் அவ்வப் பகுதிகளில் வசித்து, அவர்களின் நன்மை தீமைகளிற் பங்குபற்றி, பொதுசனத் தொண்டுசெய்யும்தன்மைவாய்ந்த எத்தமிழரும் எச்சிங்களநாட்டிலும் அங்கத்தவராய் வருதல்கூடும் என்பதே நமது எண்ணம். விசேஷ நல்லகொள்கைகளோடு வாழ்ந்துவரின், சிலவேளை தமிழரே ஐம்பது வீதமான ஸ்தானங்களை யடையமுடியும். தமிழருக்கு கூடிய ஸ்தானங்கள் வரின், தாமும் அரசாங்கசபைக்குப்போய்ப் பணம் வாங்கிப் பிழைக்கலாமென எண்ணமுடையார் சிலர், தங்கள் பேதமையால் தேசத்தையும் அதன் வருங்கால நிலைமையையும் பாழ்படுத்தக்கொண்டகோலமே யிதுவன்றி, உய்யும் வழியல்ல. சென்றகாலங்களில் தமிழ்ப் பிரதிநிதிகள் ஒரே கொள்கையற்றவர்களாய் சிலர் ஒருபக்கத்திற்கும் சிலர் மறுபக்கத்திற்கும் பாடியதையறிந்த நாம், ஐம்பதுவீத ஸ்தானங்கள் பெற்றும் அடையப்போகும் சுகந்தானென்ன?

அரசாங்க சபையின் அதிகாரத்தைக் குறைக்கவும் கவர்னருக்கு அதிகாரத்தைக் கூட்டவும்வேண்டுமென்பது மற்றொன்று. டொனமூர் அரசியற்றிட்டம் அநுசரணைக்கு வந்தகாலம்முதல் கவர்னருக்கு விசேஷ அதிகாரமிருந்ததல்லவா? கூடிய ஸ்தானங்காரணமாக சிங்களவர் தமிழருக்குத் தீமைசெய்திருந்தால், செய்யும்போது கவர்னர் ஏன் தன்னதிகாரத்தை உபயோகிக்கவில்லை? தற்போதுள்ள கவர்னரின் விசேஷ அதிகாரம் தமிழரின் அல்லது சிறுபான்மையோரின் நன்மையின் பொருட்டா? அன்றி ஆங்கிலேயரின் நன்மையின் பொருட்டா? நிற்க. கவர்னருக்கு அதிகாரத்தைக் கூட்டவேண்டுமென்று முறையிடும் தமிழர், தங்கள் அரசாங்க சபை ஸ்தானங்களையும் கூட்டவேண்டுமென்று கேட்பதேனோ? ஸ்தானங்களின் மூலம் தங்களைப் பாதுகாக்க முடியுமானல் கவர்னரின் அதிகாரத்தைக் கூட்டும்படி கேட்பதன் கருத்தென்ன? குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்பு போன்ற நம்மவரின் மதியீனமும் சுயநலமும் காலத்தில் வெளியாகும்.

'தமிழன்.'

தொழில் பகுதி

# யாழ்ப்பாணச் சுருட்டுத் தொழில்.

## பீடி, சிகறெற், போட்டி.

### "உலக்கை தேய்ந்து உளிப்பிடியான" வாறு சுருட்டுத்தொழில் வந்துவிட்டது

### இப்போது செய்யக்கூடிய வேலைகள்.

(யாழ்ப்பாண ஐக்கியசங்க மகாநாட்டுக் கூட்டத்தில் முகாந்திரம் திரு. V. பொன்னம்பலம் அவர்களின் தலைமையில், திரு. C. அருளம்பலம் அவர்கள் செய்த அரிய பிரசங்கம்.)

யாழ்ப்பாணக் காலசுவாத்தியமும், தரையின் இயல்பும், நீரும் புகையிலை நன்கு உண்டுபண்ணுவதற்கு மிகவும் ஏற்றனவாயிருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் பிரதானமாக இரண்டு விதமான புகையிலை உண்டுபண்ணப்படுகின்றது. வாய்க்குள் போட்டுச் சப்பும் புகையிலை ஒன்று; மற்றையது புகைப்பதற்குப் பாவிக்கப்படுகிறது. இற்றைக்கு இரண்டு வருடத்துக்கு முன் யாழ்ப்பாணத்தில் சுருட்டுத் தொழில் மிக விருத்தியடைந்து உன்னத நிலையிலிருந்தது. சுருட்டில் ஒருபகுதி யாழ்ப்பாணத்திலேயேஉபயோகிக்கப்பட்டு வந்தது. இன்னொரு பகுதி தென்னிலங்கைக்கனுப்பப்பட்டுவந்தது. இப்போதைய நிலை யாது? முன்னிருந்ததிலும் இத்தொழில் இப்போது மூன்றில் இரண்டு பங்கு அருகிப்போய்விட்டது. மூன்றிலொரு பங்கே இப்போது நடந்துவருகின்றது. இப்போதைய நிலைமையைச் சரியாக அறிவதற்காக நான் நேரே சுருட்டுத் தொழிற்சாலைகட்குச் சென்றுள்ளேன். ஒரு பெரிய தொழிற்சாலையில் விசாரணைசெய்து பெற்ற புதினத்தை உங்கட்குச் சொல்லுவேன். அங்கே பத்து வருடங்களுக்கு முன் நாளொன்றுக்கு 70000 சுருட்டுகள் தயாரிக்கப்பட்டு வந்தனவாம். அப்போது அங்கே 100 பேர்வரை வேலை செய்தனர். 1000 சுருட்டுகட்கு ஒரு ரூபாவீதம் சம்பளம் கொடுக்கப்பட்டு வந்தது. அந்தத் தொழிற்சாலையில் இப்போது 25000 சுருட்டுகள் ஒவ்வொருநாளும் தயாரிக்கப்படுகின்றன. வேலைசெய்வோர் ஆக 35 பேரே. மாதத்தில் பத்து அல்லது பதினைந்து நாட்களுக்கு மேல் அவர்கள் வேலை செய்வதில்லை. ஆனல் இப்போது சம்பளமோ 1000 சுருட்டுகட்கு ஒன்றரை ரூபாவாகும். இப்போது ஒரு நாளைக்குச் சுருட்டும் சுருட்டுகளின் சராசரி 500 தானகும். நான் சென்று பார்த்த மற்றைய தொழிற்சாலைகளிலும் அவ்வாறே.

#### கீழ்நிலைக்குக் காரணம்

இவ்வாறு சுருட்டுத் தொழில் கீழ் நிலையடைந்ததற்குக் காரணம் சுருட்டுவதற்கு உதவாத புகையிலை பாவிப்பதே என ஒரு வியாபாரியார் சொன்னர். அதிக லாபம் கருதி யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் சிறிய வியாபாரிகள் மிகக் குறைந்த விலைப் புகையிலையை அதிகம் உபயோகிக்க ஆரம்பித்துவிட்டனர். எத்தனையோ பேர் சிறிதும் உபயோக மற்ற புகையிலையை உபயோகப்படுத்தத் தொடங்கிக் குட்டி வியாபாரிகளாய் விட்டனர். மலிந்த சுருட்டுகளைத் தயாரிப்பதற்காக மாஹோ முதலியவிடங்களிலிருந்து புகையிலையைத் தருவிக்கிறார்கள். புகையிலை சேமித்து வைக்கும் அறைகளிலுள்ள குப்பை கூழங்களும் சுருட்டுத் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படுகின்றன. இவ்வித அலங்கோல உபாயங்களால் தயாரிக்கப்பட்ட புகையிலைச் சுருட்டும் பாவிப்பவரின் மனத்திற்குப் பிடியாதாகவே, அவர்கள் அது பாவிப்பதை நிற்பாட்டலாயினர். சிலர் உபயோகமற்ற சுருட்டுகளை விற்றுவந்ததும் நல்ல சுருட்டுகட்கும் மானங்குறைவதாயிற்று. விஷயமிவ்வாறாக யாழ்ப்பாணப் புகையிலைக்கு மதிப்புக் குறைவதாயிற்று.

#### பீடிகளின் பெருக்கம்

யாழ்ப்பாணத்திலன்றி வேறிடங்களிலும் புகையிலைச் சுருட்டுத் தொழில் நடைபெறுவதும் யாழ்ப்பாணச் சுருட்டுத் தொழில் குறைவுக்குக் காரணமாயது. மேலும் மலிந்த சிகறெற், பீடி என்பன நாட்டில் அதிகமாக பரம்பினதே பொதுவாகச் சுருட்டுத் தொழில் குறைந்ததற்குக் காரணமெனலாம். பீடிகள் எவ்வளவாக இறக்குமதியாகின்றன வென்பது பின்வரும் விபரம் காட்டும். 1931 ம் வருடம் 28509 இருத்தல் பீடிகள் இலங்கைக்குள் இறக்கப்பட்டன. 1934 ம் வருடத்தின் இறக்குமதி 50473 இருத்தலாகும். இதைவிட யாழ்ப்பாணக் குடா நாட்டிற்குள் தீர்வை கொடாது களவாக இறக்குமதியாகும் பீடிகள் இம்மாத்திரமன்று. இவைகள் யாழ்ப்பாணச் சுருட்டு வியாபாரத்தை மெதுவாக நிலைதளரச்செய்துள்ளன. இவையன்றி மலிந்த சிகறெற்றுகளும் உள. அவைகளைப் பாவிப்போரும் அநேகர்.

#### இப்போது செய்யத்தக்கது

இத்தொழில் பழைய நிலைமையை யடையச்செய்யவேண்டுமானல் நாம் செய்யவேண்டிய பரிகாரங்கள் யாவை? சுருட்டுத்தொழில் தக்க நிலைபரத்தையடைதற்குச் சுருட்டப்படும் சுருட்டுகள் ஒரு தகுந்த தாரதரத்தில் நிறுவப்படவேண்டும். இன்ன புகையிலைக்குக் குறைந்த புகையிலை உபயோகிப்பதில்லையென வரையறுக்கப்படவேண்டும். மலாய்நாடு முதலியவிடங்கட்கு ஏற்றுமதி செய்தற்கு அவ்விடத் தரசினர் விதிக்கும் தீர்வையைக் குறைக்கவேண்டும். இவ்விஷயத்தைக் குறித்தோர் தீர்மானம் ஐக்கியசங்க மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டதுபற்றி எனக்குச் சந்தோஷம்.

இன்னொருவழி யுண்டு, இப்போது சுருட்டுத்தொழில் நடத்துவோர் சிலர் பீடித்தொழிலை நடத்த முன்வர அநேக சுருட்டு வியாபாரிகள் இதற்குச் சாதகமாக இருப்பதாக நான் கண்டேன். பீடிக்கு உபயோகிக்கும் புகையிலை யாழ்ப்பாணத்தில் உண்டாக்கப்படலாம். அத்தொழில் இனிது நடைபெறத் தடை கிடையாதே.

புகையிலைச் சுருட்டுத் தொழிலைச் சீர்ப்படுத்தும் ஒரேநோக்கத்துடன் சுருட்டு முதலாளிகளின் கூட்டமொன்றைக் கூட்டி வேண்டிய உதவியைச் செய்யலாமென ஐக்கியசங்க உதவிப் பதிவுகாரர் திரு. C. இரகுநாதன் அவர்கள் முயன்றனர். விரிந்த நோக்கும், ஒற்றுமைப் பிரியமும் இன்மையாலும், தன்னயமும் சோம்பலும் அவர்கள்மாட்டுக் குடிகொண்டிருந்தமையாலும் இரகுநாதன் அவர்கள் முயற்சி பயன் கொடாதாயிற்று. இவ்விஷயமாக நடந்த கூட்டமொன்றில் ஒரு வியாபாரியார் சொன்னதாவது:— "சுருட்டுத் தொழிற்சாலைகள் உத்தரவு பெற்றே நடத்தப்படவேண்டும். குறைந்த உதவாத புகையிலையைச் சுருட்டுதற்குப் பாவிக்கின்றனரோவெனப் பரிசோதகர் சென்று பரீட்சிக்கவேண்டும். இப்படிச் செய்தால் நல்ல சுருட்டுகளே எல்லாரும் தயாரித்து விற்பர்."

வருகிற புரட்டாதிமாதத்தில் இந்திய அரசினர் ஒரு தொழில் மகாநாடு டெல்லிநகரில் கூட்டப்போகின்றனர். ஒவ்வொரு தொழிற்சாலை யதிபரும் அழைக்கப்பட்டிருக்கிறார். இலங்கையிலும் அப்படிச் செய்தால் மிகவும் நலமாயிருக்கும். அரசினர் இவ்விஷயத்தை அக்கறைகொண்டு பல்வேறு தொழில்களையும் சரிவர நடத்தில் பெருநன்மையாகும். மற்றைய நாடுகளில் இப்படியே செய்யப்படுகின்றன.

நான் சென்ற மேமாதம் மத்திய கமத்தொழிற் சங்கத்தில் சுருட்டுத் தொழிலைக் குறித்து ஒரு பிரேரணை கொண்டுவந்தேன். அவ்விஷயம் இப்போது யாவராலும் நன்கு ஆலோசிக்கப்படுகின்றது. அடுத்த புரட்டாதி மாதம் மறுபடியும் கூடும் மத்திய கமத்தொழிற் சங்கத்தில் மீண்டும் விவாதிக்கப்படும். புகையிலைத் தொழிற்சாலையொன்று அரசினரால் ஏற்படுத்தப்பட்டுநடைபெறின், அது யாவர்க்கும் முன்மாதிரியாகுமோவென்பதை யாவரும்யோசித்து அபிப்பிராயம்கூறவேண்டும். இவ்விஷயத்தைப்பற்றி ஆலோசிக்க யாழ்ப்பாணச் சங்கத்தினர் ஒருநிர்வாகசபை ஏற்படுத்தியுள்ளார். காலத்தில் நாம் ஏதாவது செய்யாவிடின்புகையிலைத்தொழில் இறந்தேபோம். அப்போது யாழ்ப்பாணத்தின் பொருளாதார நிலையும் பெரும் பங்கமடையும்.


## உதவியாசிரியர் தேவை

தமிழில் பயிற்சிபெற்ற ஆசிரிய தராதரப்பத்திரமும், வரைதல் தராதரப்பத்திரமும், ஆங்கிலத்தில் கனிஷ்ட பாடசாலை விடுகைத் தராதரபத்திரமும் அல்லது அதனின் மேற்பட்ட வேறு தராதரப்பத்திரமும், பாலபண்டித அல்லது பண்டித தராதரப் பத்திரமும் சைவாசாரமுமுள்ள ஓர் ஆசிரியர், கரணவாய் வேதாரணியேசுவர விதாலயத்திற்குப் புரட்டாதி மாதம் (1935 செப்டம்பர்) ௧௬ந் திகதி தொடக்கம் வேண்டப்படுகிறார்.

தமிழ் க. பா. த. ப. வகுப்பு, சி. பா. த. ப. வகுப்பு முதலியவற்றில் கற்பித்த அநுபவமுடையோர், தாம் கற்பித்த பாடசாலைத் தலைமையாளரிடமிருந்து தகுதிப்பத்திரம் பெற்று அனுப்புதல்வேண்டும்.

வேதனம் அரசாட்சியாரின் பிரமாணப்படி அளிக்கப்படும். விண்ணப்பப்பத்திரம் ஆவணி௴ (ஆகஸ்டு) ௲ந் திகதிக்கு முன்பாக எம்மைக் கிட்டுதல் வேண்டும்.

கரணவாய் கரவெட்டி 23-7-35 — இங்ஙனம் சி. கைலாசநாததேசிகர் தலைமையாளர்

(13) 28-7-35—1

# நில அபிவிருத்தி மசோதாவுக்கு மன்னரினங்கீகாரம்

## விற்பனைக்கும் குத்தகைக்கும் நடுவானமுறை.

## இலங்கையர் யார் என்பதன் வியாக்கியானம்.

## பாகுபாடு செய்யவேண்டிய ஒழுங்கு.

(கொழும்பு நிருபர்.)

கொழும்பு, ஜூலை 23

நில அபிவிருத்தி மசோதா, மன்னர்பிரானின் அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டதென்று சென்ற வெள்ளிக்கிழமை வெளிவந்த "அரசாங்கக் கஜெற்" பத்திரிகை அறிவிக்கிறது.

இலங்கை அரசாங்கசபையின் கவனத்திற்கு இதுவரை வந்த மசோதாக்கள் யாவற்றிலும் இம்மசோதாதான் மிக முக்கியமானது என்பது பலருடைய அபிப்பிராயம்.

பொதுவாக அரசாங்கசபையால் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்குக் கவர்னர் தாமாகவே அங்கீகாரம் அறிவிப்பது வழக்கம்.

ஆனால் நில அபிவிருத்தி மசோதா விஷயத்தில் அதன் முக்கிய தத்துவத்தையும் அதன் அம்சங்கள் சிலவற்றிற்கு இருந்துவந்த ஆட்சேபத்தையும் உத்தேசித்துக் கவர்னர் அதை மன்னர்பிரானின் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைத்தார்.

இம்மசோதா ஏன் முக்கியமானது என்பதைப்பற்றியும் இதன் நோக்கங்கள் என்ன வென்பதைப்பற்றியும் சிறிது ஆராய்வாம்.

### புதிய கொள்கை

சென்ற காலத்தில் அரசினர் அரசாங்க நிலத்தைப் பராதீனப்படுத்தும் விஷயத்தில் இலங்கைக் குடியானவர்களின் நலவுரிமைகளைச் சிறிதும் கவனிக்கவில்லை. செழிப்பான நிலங்கள் யாவும் பணம் படைத்த வெள்ளை முதலாளிகளுக்குக் கொடுக்கப்பட்டன. இவர்கள் கோப்பி, தேயிலை, ரப்பர் முதலிய ஏற்றுமதிச் சரக்குகளை உற்பத்தி செய்வதிலேயே தங்கள் கவனத்தைச் செலுத்திவந்தனர். நிலங்கள் பொதுவாக ஏலத்தில் விற்கப்பட்டு வந்தபடியால் ஏழைக்குடியானவர்கள் அவைகளை வாங்க முடியாமலிருந்தது. பல காரணங்களினால் உணவுப் பொருள் உற்பத்தியி லீடுபட்டிருந்த குடியானவர்களின் தொகை அருகிக்கொண்டும் காணியில்லாத கிராமவாசிகளின் தொகை அதிகரித்துக்கொண்டும் வந்தது. காலகதியில் இலங்கையர் தங்களுடைய உணவுக்கு வெளிநாட்டை எதிர்பார்க்கவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இந்நிலைமையினால் ஏற்படக்கூடிய ஆபத்தை யுணர்ந்து அரசாங்க நிலப்பாகுபாடு விஷயத்தில் ஒரு புதிய கொள்கையின் அவசியத்தை எடுத்துக் காட்டிய பெருமை கவர்னர் சேர். ஹியூகிளிவோர்ட் அவர்களுக்குரியது. ஒரு புதிய அரசியலை இலங்கைக்கு அளித்த டொனமூர்க் குழுவினரை இந்நாட்டிற்கு அழைத்த இவர், ஒரு புதிய விவசாயக் கொள்கைக்குக் காரணமாயிருந்த ஒரு நில விசாரணைச் சபையையும் (Land Commission) நியமித்தார். இவ்விசாரணைச் சபையின் சிபார்சுகளையும் அரசாங்கசபையின் சில தீர்மானங்களையும் ஆதாரமாகக்கொண்டே நில அபிவிருத்திச் சட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

சேர் ஹியூகிளிவோர்ட் அவர்கள், 1927-ல் ஒரு விவசாய மகாநாட்டில் பேசும்பொழுது, "விவசாயத்தில் ஈடுபட்டிருக்குங் குடியானவர்களின் தொகையை அதிகரிப்பதற்கு நாம் உடனே முயற்சி எடுத்துக்கொள்ளத் தவறுவோமானால் இலங்கையின் வருங்கால அரசியலின் பொறுப்பை வகிப்போரின் கண்டனத்திற்கு நாம் ஆளாவோம்" என்று குறிப்பிட்டார்.

விவசாயத்துறையில் ஒரு புதிய கொள்கையின் அவசியத்தை வற்புறுத்திய பெருமை சேர் கிளிவோர்ட் அவர்களுக்குரியதானால் அக்கொள்கையை விரிவான முறையில் நிர்ணயித்து அதற்குச் "சட்டரூபம்" கொடுத்த பெருமை விவசாயமந்திரி திரு. டீ. எஸ். சேனநாயக்கர் அவர்களைச் சேரும்.

### சட்டத்தின் நோக்கங்கள்

நில அபிவிருத்திச் சட்டத்தின் நோக்கங்கள் இரண்டு. அரசாங்க நிலத்தை இலங்கையர் ஒழுங்கான முறையில் அபிவிருத்திசெய்து பயிரிடுவதற்கு வசதி ஏற்படுத்தும் அந்நிலத்தைப் பராதீனப்படுத்துவது சம்பந்தமாக இலங்கைக்கேற்ற ஒரு முறையை ஏற்படுத்துவதுமே இந்நோக்கங்களாகும்.

எவ்வித நிபந்தனையுமின்றி நிலங்களைப் பொதுசனங்களுக்குச் சென்றகாலத்தில் அரசினர் விற்ற காரணமாகப் பல தீமைகள் ஏற்பட்டிருக்கிறபடியால், இனிமேல் அப்படி விற்கக்கூடாதென நில விசாரணைச்சபை சிபார்சுசெய்திருக்கிறது. ஆனால் குத்தகைக்கு நிலங்களைப்பெறச் சனங்கள் விரும்பமாட்டார்கள். எனவே இம்மசோதாவில் "விற்பனை"க்கும் "குத்தகை"க்கும் நடுவான ஒரு முறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அரசினரிடமிருந்து நிலம்பெறுபவர்கள் சில நிபந்தனைகளுக்கு உடன்படவேண்டும். இந்நிபந்தனைகளுக்கு அவர்கள் கட்டுப்பட்டு நடக்கும்வரையும் நிலம் அவர்களுக்குச் சொந்தமானதாகவிருக்கும்.

### நிபந்தனைகள்

மசோதாவில் மூன்று முக்கிய நிபந்தனைகள் குறிப்பிட்டிருக்கின்றன. அவை வருமாறு:—

(1) ஒரு குறிப்பிட்ட அளவுக்குச் சிறிதாகக் காணியைப் பாகுபாடுசெய்யக்கூடாது.

(2) காணி பயிரிடப்படவேண்டும்.

(3) அரசினருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை ஒவ்வொரு வருடமும் கட்டணமாகச் செலுத்திவரவேண்டும்.

மேலும் இம்மசோதாவின் கீழ் நிலம் பெற்றவர் அவ்வாறு பெற்ற நிலத்தை வித்தியாசமான அந்தஸ்து வாய்ந்த வேறொரு வகுப்பினருக்கு மாற்ற விரும்பினால் முதலில் அவருடைய பகுதியிலுள்ள அரசாங்க ஏஜெண்டின் அனுமதியைப் பெறவேண்டும். ஆனால் பிள்ளைகள் அல்லது பந்துமித்திரருக்கு மாற்றும் பட்சத்தில் ஏஜெண்டின் அனுமதி தேவையில்லை.

### நிலப்பாகுபாடு

இச் சட்டத்தின்கீழ் அரசாங்க நிலம் பராதீனப்படுத்தப்படும்விதம் பின்வருமாறு:—

ஒவ்வொரு மாகாணத்திலுள்ள அரசாங்க ஏஜெண்டும் பின்வரும் தேவைகளுக்காகத் தமது மாகாணத்திலுள்ள அரசாங்க நிலத்தைப் பாகுபாடுசெய்ய அதிகாரம் பெற்றிருக்கிறார்:— (1) கிராமத்தேவைகள், (2) குடியேற்றம், (3) காடுகள், (4) அரசாங்கத்தின் தேவைகள், (5) நடுத்தர வகுப்பைச்சேர்ந்த இலங்கையரின் தேவைகள், (6) மற்றவர்களின் தேவைகள்.

ஒவ்வொரு தேவையும் அதற்கு முந்திய தேவைக்குப் போதிய நிலம் ஒதுக்கிவைக்கப் பட்டபின்பே கவனிக்கப்படும். அதாவது கிராமவாசிகளின் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டபின்பே குடியேற்றத்துக்கு நிலம் ஒதுக்கிவைக்கப்படும். அதேமாதிரி நடுத்தர வகுப்பைச்சேர்ந்த இலங்கையரின் தேவைகளுக்குப் போதிய நிலம் விடப்பட்டபின்பே இதர வகுப்பினரின் தேவைகள் கவனிக்கப்படும்.

அரசாங்க ஏஜெண்டுகள் நிலப்பாகுபாடு சம்பந்தமாகத் தாங்கள் தயாரிக்குந் திட்டங்களை அவ்வப் பகுதியிலுள்ள விவசாய ஆலோசனைச் சபைக்குச் சமர்ப்பிக்கவேண்டும். இச்சபையினதும பொதுசனங்களினதும் அபிப்பிராயங்களை அறிந்தபின் ஏஜெண்டு தமது திட்டத்தில் வேண்டிய திருத்தங்களைச் செய்யலாம். அதன்பின்னர் அவர் தமது திட்டத்தையும், சபையினதும் பொதுசனங்களின் யோசனைகளையும் நிலக்கமிஷனருக்கு அனுப்பிவைக்கவேண்டும். திட்டத்தை அங்கீகரிக்க அல்லது அதில் மாற்றஞ்செய்ய நிலக்கமிஷனருக்கு அதிகாரம் உண்டு. இந்த அதிகாரி விவசாய நிர்வாக சபையின் அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டவர்.

திட்டம் அங்கீகரிக்கப்பட்ட பின் நிலம் வேண்டியவர்கள், விண்ணப்பித்துக்கொள்ளலாமென அரசாங்க ஏஜெண்டு விளம்பரப்படுத்துவார். பின்னர் நடைபெறும் நிலக்கச்சேரியில் விண்ணப்பக்காரருக்கு நிலம் பங்கிட்டுக் கொடுக்கப்படும். பொதுவாக முதலில் ஒரு தற்காலிக உரிமைப் பத்திரம் (Permit) கொடுக்கப்படும். நிலத்தைப் பெற்றவர், செவ்வனே நிலத்தைப் பயிரிட்டு வந்தால் பின்னர் அவருக்கு நிரந்தர உரிமைப் பத்திரம் (Grant) வழங்கப்படும்.

பணம் தேவைப்படும் விவசாயிகளுக்கு அரசினர் கடன் கொடுப்பார்கள்.

### இலங்கையர் யார் ?

இலங்கையின் விவசாய சரித்திரத்தில் முக்கியமான இந்தச் சட்டம் அரசாங்கசபை யங்கத்தினரின் ஏகமனதான ஆதரவைப் பெறவில்லையென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இதன் பிரதானமான நோக்கங்களைப் பொதுவாக எல்லா அங்கத்தினரும் ஆதரித்தார்கள். ஆனால் "இலங்கையர்" என்ற பதத்திற்கு இச்சட்டத்தில் கூறப்பட்டிருக்கும் வியாக்கியானத்தை இந்திய அங்கத்தினர்களும் சில யாழ்ப்பாண அங்கத்தினரும் ஆட்சேபித்தார்கள். இவ்வியாக்கியானத்தின் பயனாக இச்சட்டத்தின் கீழ் இலங்கையர் பெறக்கூடும் அநுகூலங்கள் யாவற்றையும் இலங்கையில் வாழும் இந்தியரும் பெறமுடியாமலிருக்கிறதென்பதே இவர்களின் முறைப்பாடு.

"இலங்கையர்" என்ற பதத்திற்கு "இலங்கையில் நிரந்தரமாக வசிப்போருக்குப் பிறந்து, நிரந்தரமாக இலங்கையில் வசிப்போரே இலங்கையர் என்று கருதப்படுவர்" என்று சட்டத்தில் வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது: இலங்கையில் வாழும் ஒரு இந்தியர் இச்சட்டத்தின் கீழ் "இலங்கையராக"க் கருதப்பட விரும்பினால் அவர் இலங்கையில் நிரந்தரமாக வசித்துவந்தால் மட்டும் போதாது. அவருடைய பெற்றோரும் இலங்கையில் நிரந்தரமாக வசித்துவந்தவர்களாக விருக்கவேண்டும். அவர் இலங்கையில் பிறந்திருக்கவேண்டுமென்றநியதியில்லை. அவருடைய பெற்றோர் இலங்கையில் நிரந்தரமாக வசித்து வந்தால் போதும். ஆனால் "நிரந்தரமாக வசித்துவருதல்" என்றால் என்ன? இலங்கையில் ஐந்து வருடங்களுக்கு மேலாகத் தொடர்பாக வசித்துவருபவர்கள் தாங்கள் இலங்கையில் தங்கள் ஜீவியகால பரியந்தம் வசித்துவர உத்தேசித்திருப்பதாக அரசாங்க ஏஜெண்டுக்கு வாக்குறுதி கொடுத்தால் அவர்கள் "நிரந்தரமாக வசிப்பவர்கள்" என்று கருதப்படுவார்கள் எனத் தற்போதைய அரசியல்சட்டம் கூறுகிறது. இவ்வாறு வாக்குறுதிகொடுக்கும் யாவரும் அரசாங்கசபை அங்கத்தினரைத் தெரிவுசெய்யும் வாக்குரிமை பெற்றிருக்கிறார்கள்.

இந்தவிதமாக வாக்குரிமை பெற்றிருக்கும் இந்தியரும் இதர அன்னியரும் நில அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் "இலங்கைய"ராகக் கருதப்படவேண்டுமென்று அதை ஆட்சேபித்த அங்கத்தினர்கள் வாதாடினார்கள். ஆனால் மற்ற அங்கத்தினர்கள் இதற்குச் சம்மதிக்கவில்லை.

### அன்னியர் விலக்கப்படவில்லை

"இலங்கையர்" என்ற பதம் இச்சட்டத்தில் ஒரேயொரு இடத்தில மட்டுமே பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. "நடுத்தர வகுப்பைச்சேர்ந்த இலங்கையரின் தேவைகள்" என்றசொற்றொடரில் தவிர, அது வேறு எந்த இடத்திலும் பாவிக்கப்படவில்லை. நடுத்தர வகுப்பைச்சேர்ந்த இலங்கையரின் தேவைகள் நிலப்பாகுபாடு விஷயத்தில் ஐந்தாவது தேவையாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. "இலங்கையர்" என்ற பதத்திற்குக் கூறப்பட்டிருக்கும் வியாக்கியானத்தில் அடங்காத எவரும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த இலங்கையருக்காக ஒதுக்கிவைக்கப்படும் நிலங்களைப் பெறுவதற்கு உரிமையுள்ளவர்களாகமாட்டார்களென்பது உண்மையே. ஆனால் நடுத்தர வகுப்பைச்சேர்ந்த இலங்கையரின் தேவைக்குப் போதுமான நிலம் ஒதுக்கிவைக்கப்பட்டபின், எஞ்சியிருக்கும் நிலத்தைப் பெறுவதற்கு எந்த வகுப்பினருக்கும் எந்தச் சாதியினருக்கும் உரிமையுண்டு. வருடம் 6000 ரூபாய்க்குக் குறைந்த வருமானம் உள்ள யாவரும நடுத்தர வகுப்பினராகக் கருதப்படுவார்கள். எனவே 6000 ரூபாய்க்குமேல் வருமானம் உள்ள இலங்கையர்களும் நடுத்தர வகுப்பைச்சேர்ந்த இலங்கையரின் தேவை பூர்த்திசெய்யப்பட்டபின் எஞ்சியிருக்கும் நிலத்தையே பெறமுடியும். அதாவது நில அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் நிலம் பெறும் விஷயத்தில் இவர்களுக்கும் "இலங்கைய"ரல்லாதார்க்கும் எவ்வித வித்தியாசமும் இருக்கமாட்டாது.

கிராமத் தேவைகள் நிலப்பாகுபாடு விஷயத்தில் முதலாவது தேவையாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு கிராமத்துக் கருகாமையிலுள்ள நிலம் பாகுபாடு செய்யப்படும்பொழுது அக் கிராமவாசிகளின் தேவைகளை முதலில் கவனிக்கப்படும். அவர்களுக்குத் தேவையான நிலம் ஒதுக்கிவைக்கப்பட்ட பின்பே எஞ்சிய தேவைகள் கவனிக்கப்படும். கிராமத் தேவைகளைப் பொறுத்தவரையில் இலங்கையரின் தேவைகள்மட்டுமே கவனி

(தொடர்ச்சி அடுத்தபக்கம் பார்க்க.)

# பத்திரிகையின் சீற்றத்தால் பதவியைத் துறந்த நீதியரசர்

## பிரபல நியாயவாதிகளின் அபிப்பிராயம்

### பத்திரிகைகள் சம்பந்தமாக இலங்கைக்கும் இந்தியாவுக்குமுள்ள வேறுபாடு

### “அமிர்தபஜார்” பத்திராசிரியருக்கு 3 மாதம்; பதிப்பாளருக்கு ஒரு மாதம் சிறை

(கோழும்பு நிருபர்.)

கொழும்பு ஜூலை 25,

சுப்பிரீங்கோட்டு நீதியரசர்களில் ஒருவராக இருந்துவந்த திரு. ஸ்ரானலி ஒபயசேகரா அவர்கள், தமக்கும் மற்றச் சுப்பிரீங்கோட்டு நீதியரசர்களுக்கும் இடையில் ஏற்பட்ட அபிப்பிராயபேதம் காரணமாகத் தமது பதவியிலிருந்து திடீரென விலகிவிட்டார்.

“ரைம்ஸ்” பத்திரிகை சமீபத்தில் இவர் செய்த ஒரு தீர்ப்பைக் கண்டித்து எழுதிய ஒரு தலையங்கத்தை இவர், பிரதம நீதியரசரினதும் மற்றைய நீதியரசர்களினதும் கவனத்திற்குக்கொண்டுவந்தாரென்றும் அவர்கள் அப்பத்திரிகைமீது வழக்குத்தொடர இணங்காதபடியால் இவர் தமது மானத்தைக் காப்பாற்றுவதற்காகத் தமது பதவியிலிருந்து விலகிவிட்டாரென்றுங் கூறப்படுகிறது.

கொள்ளுப்பிட்டியில் நடந்த ஒரு மோட்டார் விபத்துச் சம்பந்தமாகத் திரு. ஒபயசேகரா செய்த தீர்ப்பை “ரைம்ஸ்” பத்திரிகை சில தினங்களுக்கு முன் பலமாகக் கண்டித்து ஒரு தலையங்கம் எழுதியது. இவ்விஷயத்தில் ஒருவருக்குப் படுகாயமும் ஏற்பட்டது. விசாரணை முடிவில் நீதியரசர் திரு. ஒபயசேகரா எதிரிக்கு 450 ரூபாய் அபராதம் விதித்தார்.

எதிரி செய்த குற்றத்திற்கு இத்தண்டனை போதாதென்றும், நீதியரசர் எதிரி விஷயத்தில் தாட்சணியம் காட்டியதற்குத் தக்க நியாயம் எதுவும் இல்லையென்றும் அவருடைய தீர்ப்பு, இலங்கையில் பணக்காரருக்கு ஒரு நியாயமும் ஏழைகளுக்கு இன்னொரு நியாயமும் உண்டு என்ற அபிப்பிராயத்தைப் பொதுசனங்களின் மனதில் உண்டாக்கும் என்றும் “ரைம்ஸ்” பத்திரிகை எழுதியது.

இப்பத்திரிகை, சுப்பிறீங்கோட்டை அவமதித்துவிட்டதெனத் திரு. ஒபயசேகரா கருதினர். ஆனல் அதன் ஆசிரியர்மீது நடபடிக்கை எடுக்க மற்ற நீதியரசர்கள் இணங்காதபடியால் அவர் தமது ஆட்சேபத்தைத் தெரிவிப்பதற்காகத் தமது பதவியிலிருந்து விலகிவிட்டார்.

இச்சம்பவத்தைப்பற்றிக் கொழும்பிலுள்ள பிரபல நியாயவாதிகள் பலவிதமான அபிப்பிராயங்களைத் தெரிவித்துவருகின்றனர். உதாரணமாகத் திரு. ஆர். எல். பேரேரா “ரைம்ஸ்” பத்திரிகையின் கண்டனம் விஷமத்தனமானதென்றும், திரு. ஒபயசேகரா தமது சொந்தஅதிகாரத்தை உபயோகித்து அப்பத்திரிகைமீது நடவடிக்கை எடுத்துக்கொள்வதைவிடுத்துத் தமது பதவியிலிருந்து விலகியது வருந்தத்தக்கதென்றும் அபிப்பிராயப்படுகிறார். ஆனல் திரு. ஏச். ஏ. பீ. சந்திரசேகரா இவ்வாறு கருதவில்லை. “ரைம்ஸ்” பத்திரிகையின் கண்டனங்காரணமாகத் திரு. ஒபயசேகராவுக்குக் கௌரவக்குறைவு ஏற்பட்டுவிடவில்லையென்றும் இங்கிலாந்து அமெரிக்கா முதலிய நாடுகளிலுள்ள பத்திரிகைகள் இலங்கைப் பத்திரிகைகளைக் காட்டிலும் அதிக உக்கிரமாக நீதிபதிகளின் தீர்ப்புகளைக் கண்டித்து வருகின்றனவென்றும் திரு. சந்திரசேகரா கூறுகிறார்.

“ரைம்ஸ்” பத்திரிகையின் கண்டனம் சரியானதாயிருக்கலாம்; அல்லது தவறானதாகவிருக்கலாம். ஆனல் “பத்திரிகைச் சுதந்திரத்”தில் நம்பிக்கையுள்ள யாவரும் இப்பத்திரிகைமீது வழக்குத்தொடர்வதில்லையென்று சுப்பிறீங்கோட்டு நீதியரசர்கள் செய்த தீர்மானத்தைக்கண்டு சந்தோஷமுறுவார்களென்பது நிச்சயம். திரு. ஒபயசேகராவின் சுயேச்சையுணர்ச்சி பாராட்டப்படத்தக்கது என்பதையும் எவரும் மறுக்கமாட்டார்கள்.

இலங்கை அதிகாரிகளின் போககு இவ்வாறிருக்க, இந்திய அதிகாரிகளின்போக்கு இதற்கு நேர்மாறானதாகவிருக்கிறது. கல்கத்தா உயர்தர நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மாறாக அப்பீல் செய்வதற்கு “அமிர்தபஜார் பத்திரிகை”யின் ஆசிரியர் திரு. துஷார் காந்திகோஷ் அவர்களுக்கு அனுமதிகொடுக்கப் பிரிவிகவுன்ஸில் மறுத்துவிட்டதென நேற்றைய தினசரிப் பத்திரிகைகள் அறிவிக்கின்றன.

திரு. துஷார் காந்திகோஷ் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலுள்ள பிரபல பத்திராசிரியர்களில் ஒருவர். கல்கத்தா நீதியரசர்கள் நிர்வாக அதிகாரிகளின் விருப்பத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கிறார்களென்ற கருத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு தலையங்கம் இவருடைய பத்திரிகையில் சிலமாதங்களுக்குமுன் வெளிவந்தது. கோட்டை அவமதித்துவிட்டதாக இவர்மீதும் இவருடைய பத்திரிகையின் பதிப்பாளர் மீதும் உடனே வழக்குத் தொடரப்பட்டது. விசாரணை முடிவில் இவருக்கு மூன்றுமாத மறியலும் பதிப்பாளருக்கு ஒருமாத மறியலும் விதிக்கப்பட்டது.

## நிலஅபிவிருத்திமசோதாவுக்கு மன்னரினங்கீகாரம்

(முன்பக்கத் தொடர்ச்சி.)

க்கப்படும் என்று சட்டத்தில் கூறப்படவில்லை. எனவே இந்தியர் அல்லது வேறு எந்தச் சாதியினராவது ஒரு கிராமத்திற்குச் சென்று அங்கு நிரந்தரமாக வசிப்பார்களானல் அவர்களுக்கு எவ்வித தடையுமின்றி நிலம் கொடுக்கப்படும்.

இலங்கையிலுள்ள இந்தியர்கள் நில அபிவிருத்தி மசோதாவைப் பலமாக எதிர்த்துப் பிரசாரஞ்செய்து வந்திருக்கிறார்கள். இவர்களுடைய எதிர்ப்பே இது இவ்வளவுகாலமும் சட்டமாக்கப்படாமலிருந்ததற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. ஆனல் நாம் மேலே கூறியதிலிருந்து. இச்சட்டத்தில் இலங்கையரல்லாதார் விஷயத்தில் சில தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தபோதிலும் சட்டத்தின் அனுகூலங்களிலிருந்து அவர்கள் முற்றாக விலக்கப்படவில்லையென்பது தெரியவரும். குடியானவர்களும் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த இலங்கையரும் கஷ்டமின்றி நிலம் பெறுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்பதே இச்சட்டத்தின் பிரதான நோக்கம். இவர்களுடைய தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டபின் மற்றவர்களின் தேவைகள் கவனிக்கப்படும்.

# கல்விப்பகுதி அறிக்கை

## சர்வ கலாசாலைக் கனவு

## சங்கப் பாடசாலைகளும் நேர்சம்பளமும்

## மூன்றுமாதத் தீர்மானம் நிறைவேறியது

(கோழும்பு நிருபர்)

கொழும்பு, ஜூலை 25

சென்றவருடத்தில் கல்வியின் பொருட்டு மொத்தம் 17051064 ரூபாய் செலவுசெய்யப்பட்டதாக வித்தியாகர்த்தரின் 1933-34-ம் வருட நிர்வாக அறிக்கை கூறுகிறது. இத்தொகையில் அரசினருக்கு ஏற்பட்ட செலவு 12506146 ரூபாயாகும். எஞ்சியபணம் மாணவர்கொடுக்கும் சம்பளக்காசு, பரீட்சைக்கட்டணம், முதலியவைகளி லிருந்து கிடைத்தது.

இலங்கையிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளிலும் உதவி நன்கொடைப் பாடசாலைகளிலும் 1934-ம் வருடத்தில் 616,210 பிள்ளைகளும் 1933-ல் 595160 பிள்ளைகளும் படித்துவந்தார்களென்று கணக்கிணைப்பட்டிருக்கிறது. இதைத் தவிர 1934-ல் இலங்கை சர்வகலாசாலைக் கல்லூரியில் 404 பிள்ளைகளும் வைத்திய கல்லூரியில் 228 பிள்ளைகளும் படித்துவந்திருக்கின்றனர்.

ஒவ்வொரு பிள்ளைமீதும் அரசாங்கம் சராசரி 20 ரூபாய் செலவுசெய்திருக்கிறது. இச்செலவு உதவிநன்கொடை பெறும் சுயபாஷைப் பாடசாலைகள் விஷயத்தில் 15 ரூபாயாகவும் உதவிநன்கொடை பெறும் ஆங்கிலக்கல்லூரிகள் விஷயத்தில் 38 ரூபாயாகவும் அரசினரால் நடத்தப்படும் ரோயல் கல்லூரி விஷயத்தில் 335 ரூபாயாகவும் சர்வகலாசாலைக் கல்லூரி விஷயத்தில் 1,052 ரூபாயாகவும் இருந்து வந்திருக்கிறது.

சென்ற செவ்வாய்க்கிழமை நடந்த அரசாங்கசபைக் கூட்டத்தில் கல்வி மந்திரி திரு. சீ. டபிள்யு. கன்னங்கரா ஒரு சர்வகலாசாலையை விரைவில் ஸ்தாபிப்பதற்குக் கல்வி நிர்வாகசபையார் நடபடிக்கை எடுத்துவருகின்றனர் என்றும், அற்ரோனி ஜெனறலின் கந்தோரில் அதிக வேலையிருந்து வருவதால் சர்வகலாசாலை சம்பந்தமான மசோதாவைத் தயாரிப்பதில் சிறிது தாமதம் ஏற்பட்டிருக்கிறதென்றும், சர்வகலாசாலையை முதலில் தற்காலீகமாகக் கொழும்பில் திறந்து வைப்பதற்கும் கண்டியில் கட்டிடவேலை முடிந்தவுடன் அதைக் கண்டிக்கு மாற்றுவதற்கும் உத்தேசம் இருந்துவருகிறதென்றும் கூறினார்.

ஆனல் சர்வகலாசாலை விஷயமாக இன்னும் எவ்வித தீர்மானமும் செய்யப்படவில்லையெனக் கல்வி நிர்வாகசபை அங்கத்தினர்களில் ஒருவர் அரசாங்கசபை மண்டபத்தில், தமக்கருகிலிருந்த சில அங்கத்தினர்களுக்குத் தாழ்ந்த குரலில் தெரிவித்தார் என ஒரு பத்திரிகை நிருபர் தெரிவிக்கிறார்.

அரசாங்கசபையின் நேற்றைய கூட்டத்தில், ஆசிரியர்களுக்கு நேர் சம்பளங் கொடுக்கும் விஷயமாகக் கல்வி மந்திரி திரு. கன்னங்கரா அவர்கள் சமர்ப்பித்த ஒரு அறிக்கையைப் பற்றிப் பலமான விவாதம் நடந்தது.

ஆசிரியர்களுக்கு நேரே சம்பளம் கொடுப்பதைப் பாடசாலைகளை நடத்தும் சில சங்கங்கள் ஆதரிக்கவில்லையென்றும், அவ்வாறு ஆதரிக்காத சங்கங்களுக்கு, மாதாந்தம் நன்கொடைப்பணம் அனுப்பிவரவேண்டுமென வித்தியாசங்கத்தினர் (Board of Education) சிபார்சுசெய்திருந்தனர் என்றும் ஆனல் சிபார்சைக் கல்வி நிர்வாக சபையினர் (Executive Committee for Education) நிராகரித்துவிட்டனர் என்றும் மாதாந்தம் நன்கொடைப்பணம் கொடுக்காவிட்டால் மூன்றுமாதங்களுக் கொருமுறையாவது கொடுத்துவரலாமெனக் கல்விமந்திரி கூறிய யோசனையையும் நிர்வாக சபையினர் நிராகரித்துவிட்டனர் என்றும் மேற்படி அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

இந்த அறிக்கை சம்பந்தமாகச் சில பிரேரணைகளை அங்கத்தினர்கள் கொண்டுவந்தார்கள்.

திரு. ஜி. சீ. எஸ். கொறேயா அவர்கள கொண்டுவந்த பிரேரணை சபையினரால் அங்கீகரிக்கப்பட்டது. அப்பிரேரணை வருமாறு:—

“நேர்சம்பள முறையின்கீழ் வர விரும்பாத அல்லது அதனகீழ் வந்த பின் அதிலிருந்து விலக விரும்பும் சஙகங்களுக்கு, வருட முடிவில் நன்கொடைப் பணங் கொடுத்துவருவதற்குப்பதிலாக, மூன்று மாதததுக் கொருதடவை நனகொடைப் பணம் கொடுத்துவரவேண்டுமென இச்சபை கருதுகிறது.”


## இந்திய வங்கி லிமிற்றெட்
## THE INDIAN BANK Ltd.
[Incorperated in British India in 1907]

ஷ வங்கியின் கிளை ஸ்தாபனம் ஒன்று சென்ற யூன்மீ 13உ வியாழக்கிழமைதொடக்கம் யாழ்ப்பாணம் பெரியகடையில் எஸ். கே. கந்தையாச் செட்டியார் கட்டட மேல்மாடியில் ஸ்தாபிக்கப்பட்டுச் செவ்வனே நடைபெற்று வருகிறதென்பதை யாவருக்குந் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்.
(2) 2-6-35.

# சுற்றுடல்.

—வாராந்தன்.

### இந்தியப் பட்டங்கள்

"இரத்தினபுரி பேக்கேசன் உயர்தர பாடசாலைக்கு ஆசிரியராகச் சர்வகலாசாலைப் பாண்டித்திய பட்டம் பெற்றவர் ஒருவர் தேவை—ஆனால் இந்திய சர்வகலாசாலைப் பட்டம் பெற்றவர் தேவையில்லை" என்ற விதமான ஓர் விளம்பரம் சில நாட்களின் முன் இலங்கை 'ரைம்ஸ்' பத்திரிகையில் காணப்பட்டது. இந்த விளம்பரத்தை வெளியிடும்படி 'ஈழகேசரி'க்கு அனுப்பப்படவில்லை. ஆனால் இந்தியப் பொருட்களுக்கு எவ்வித சங்கை காட்டப்படுகிறதென்பதைச் சிறிது ஆராய்வோமென்ற நோக்கத்துடன் இதைக் குறிப்பிடுகின்றேன். இந்தப் பட்டங்களாவது சென்னபட்டினம் பீ. ஏ. கல்கத்தா எம். ஏ. என்பனவாம். இது தவிர ஏனைய சர்வகலாசாலைகளும் பட்டங்களுமுண்டு. ஆனால் இலங்கையில் மலிவாகக் காணப்படுவன இவைகளே. ஆசிரியர் தேவையென்றதிலும் பார்க்க இந்திய பட்டங்கள் குறைவானவையென்பதையே இது விளம்பரப்படுத்துகின்றது. இந்த விளம்பரம் இவ்வகைப் பட்டங்களைச் சூடித் திரிவோரை அவமானஞ்செய்வது மாத்திரமல்லாது இந்திய பொருட்கள் எல்லாவற்றையு மொரே முறையில் தள்ளிவிடுகின்றது.'

* * *

### என்ன காரணம் ?

இது உண்மையில் என்ன காரணமெனபதை அறியவேண்டுமல்லவா? நாம் அறிந்தளவில் இந்திய பட்டம் பெற்றவர்களில் ஒருவர் இருவரைத் தவிர மற்றவர்கள் அநேகர் அதிக அறிவு படைத்தவர்களாகக் காணப்படுகிறார்கள். அவர்களில் சிலர் எனது ஆசிரியர்களாகவு மிருந்திருக்கிறார்கள். சில சமையங்களில் அவர்களுக்குரிய ஆற்றல் பிரித்தானிய பட்டம் பெற்றவர்களிடத்தினு மில்லையென்று நான் எண்ணுவது முண்டு. ஒரு சமையம் நாம் பிரித்தானிய ஆட்சியின் கீழ் இருத்தலால் அவர்களின் பட்டம் மதிப்புப் பெறுகின்றதா? அல்லது இந்திய சர்வகலாசாலை யொன்றில் எம். ஏ. பட்டம் பெற்றவர்கள் நாளாந்தம் ஆறணுவுக்குக் கூலிவேலை செய்து சீவனஞ்செய்கிறார்களென்ற புதினமும் ஒன்று சில நாட்களுக்கு முன் வந்தது. அது ஒரு சமையம் பெக்கேசன் பாடசாலை யதிகாரிகளுக்குத் தெரியவந்ததா?—உண்மை யெனனவெனில், நாங்களே எங்களை அடிமைப்படுத்திக்கொள்ளுகிறோம். உதாரணமாக பிரித்தானிய சர்வகலாசாசாலைப் பட்டம் பெற்றவர்களானால் தங்கள் பெயர்களின் பின்னால் திரு. ......................பீ. ஏ. (லண்ட்) திரு ........................எம். ஏ. (ஒக்சன்) திரு......................பீ. ஏ. (ஒணேஸ், கனராப்) என்ற விதமாக எந்தச் சர்வகலாசாலை யென்றதையும் காட்ட மறக்கமாட்டார்கள். ஆனால் ஒரு பீ. ஏ. அல்லது எம்.ஏ.க்குப் பின்னால் (பிறுக்கெற்றுள்) ஒன்று மில்லாவிட்டால் அது இந்தியப்பட்டம் என்பதைத் தெளிவாக விளங்கலாம். ஆகையால் இவர்களே தங்கள் பட்டங்களை அவமானப்படுத்திக்கொள்ளுகிறார்கள்.

* * *

### யாருக்கு அவமானம் ?

மாமியால், மனைவி, மனைவியால் மறியல் என்ற விதமாகக் கொழும்பில் சென்ற கிழமை ஓர் வழக்கு முடிவுபெற்றது. யான்ஸ் என்னுமொருவர் தனது சொந்த மனைவியை விருப்பத்துக்கு மாறாகத் தொந்தரவு செய்து கடத்திச் சென்றதற்காக ஒரு நாட் சிறையும் ஏழரைரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. மாமியாரே இவருக்குப் பெண்ணை மனைவியாகக் கொடுத்தாராம். பின்னர் மாமியாரே இருவரையும் பிரித்து வைத்தாராம். மாமியாரே மறியலுக்கும் அனுப்பி வைத்தாளாம். அப்படியானால் மாமிமாரைப்பற்றிச் சொல்லவும்வேண்டுமா? 'மாமிக்கு மருந்து மாதாளங்கொளுந்து' என்று சிறுவர்கள் பாடுவார்கள். ஆனால் இந்த மாமிக்கு என்ன மருந்து?

* * *

### நாட்டியம்

ஒன்றின்பின் னொன்றாக ஆலயங்களில் உற்சவங்களும், நாட்டியங்களும், நடனங்களும், நளினங்களும் இவைகளால் சிறுசிறு கலகங்களும் நடைபெற்று வருகின்றன. உலை வாயை மூடலாம். ஆனால் ஊர் வாயை....? இவற்றை இரகசியமாக மூடிவைப்பது உசிதந்தான். ஆனால் அப்படிச் செய்வதே கஷ்டம். சில தினங்களின் முன் ஒருவரை நோக்கி "பெரியவரே! ஏன் இந்த வேலை. அவளவையைக் கூப்பிட்டு ஐம்பது அறுபது கொடுத்துக் கோயிலையும், சிறு பிள்ளைகளையும் பழுதாக்கிறீர்" என்றேன். "என்னடா மோனை செய்கிறது. அவளவை வராவிட்டால் மனிசி, மைச்சான், பொடிபொட்டை கூட வாராதுகள்" என்று கூறிவிட்டு என்முன் கூட நிற்க விருப்பமில்லாதவராகச் சென்றுவிட்டார்.

* * *

### ஓர் கேள்வி

பம்பாயில் ஆர். என். கபூர் என்பவர் இன்னொருவரின் மனைவியாகிய ரங்கனாயகி என்னும் ஓர் அழகிய இளம் பெண்ணை ஆகாயவிமானத்தில் ஏற்றிச் சென்று வியபிசாரஞ் செய்தாரென பம்பாய் பிறசிடென்சி உயர்தர நீதிமன்றத்தில் ஓர் வழக்கு விசாரணைசெய்யப்பட்டு வருகின்றது. இதைப்பற்றி அதிகம் எழுதுவது அழகல்ல. ஆனால் ஓர் கேள்வி. கல்விக்கிடம் பாடசாலை, வைத்தியத்துக்கிடம் வைத்தியசாலை, மதுபானத்துக்கிடம் தவறணை, நாட்டியத்துக்கிடம் தேவாலயம், விபசாரத்துக்கிடம் ஆகாயவிமானமா? ஒரு சமையம் இராவணன் சீதாதேவியை ஆகாயவிமானத்தி லேற்றிச் சென்றதை நமது கபூரும் பின்பற்றி யிருக்கலாமென்றும் சிலர் பேசிக்கொள்கிறார்கள்.

* * *

### டெடிகமா செய்தி என்ன ?

டெடிகமாதான் நமது திரு. மொலமுறையின் தெரிவுப்பகுதி. அவர் தற்போது சிறைச்சாலையில்—அப்படியானால் அப்பகுதிக்கு யார் அரசாங்கசபையில்? தெரிவு நடைபெறுமா இல்லையா என்பதும் ஓர் கேள்வி. நமது கல்விப்பகுதி மந்திரியாராகும் திரு. கன்னங்கரா காலியைக் காலியாகவிட்டு டெடிகமப்பகுதிக்குப் பிரதிநிதியாகும் யோசனையு மிருந்ததாம். ஆனால், தற்போது மத்துகமாவில் கண்ணாகவிருக்கிறாராம். இதற்கிடையில் இதிலொன்றுக்கு விவசாயமந்திரியார் திரு. செனாநயக்காவின் புதல்வர் பரிஸ்டர் செனாநயக்காவும் வருவாரென்பதுமொருகதை. திரு. மொல்முறை சிறைச்சாலை அனுபவம்பெற்றதால் அரசாங்கசபையில் அங்கத்தவராக இனிமேல் இருக்கவியலாதா? என்பதுமொரு கேள்வி.

# இந்தியச் செய்திகள்

### நிறவேற்றுமை

முகமத்தலி, பாஷீயர் அகமத் என்னும் இரு இந்திய மகமதியர் லண்டன்நகரிலுள்ள ஒரு நீர்நிலைக்கு ஸ்நானஞ் செய்யச் சென்றபோது அதனைப் பாதுகாக்கும் காவற்காரன் "நீங்கள் அந்நியர் இங்கே ஸ்நானஞ் செய்ய உத்தரவில்லை" என்று சொல்லித் துரத்திவிட்டனன் என்பதாகப் புதினங்கள் கூறுகின்றன. இது உண்மையாயின் இந்தியர்க்கு இவ்விஷயம் பெரிய அவமானத்தை உண்டுபண்ணுவதாகுமே. இந்தியரை அந்நியரென லண்டனில் கூறிவிடின் அவ்வளவில் விஷயங்கள் முடிவடையுமா? இந்தியாவில் பிறிட்டிஷாரும் அன்னியராகாரா? இத்தடாகத்தில் மகமத் அலியும் அவர் நண்பரும் முன்னர்ப் பன்முறையும் ஸ்நானஞ்செய்தாரெனவும் அப்போது எவரும் தடைகூற முன்வரவில்லையெனவுஞ் சொல்லப்படுகிறது. இவ்விஷயத்தைக் குறித்து லண்டனிலுள்ள இந்திய மந்திரியார்க்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதாக அறிகிறோம். நிறவித்தியாசத்தைப் பெரிதுங் கைக்கொள்வோர் மற்றவர்க்கு எப்படி உரிமைகளைவழங்க முன்வருவரோ?

### வியாபாரப்பிரதிநிதி

அயர்லாந்து அரசினர் இந்தியாவுடன் வியாபாரத்தைப் புதிய முறையில் நடத்தும்நோக்கமாக புதுமுறைகளைக்கைக்கொள்கின்றனர். மேற்படி அரசினர் ஓர் வியாபாரப் பிரதிநிதியை இந்தியாவில் இருக்கும்படி அனுப்பப்போகின்றனர். அவர் அயர்லந்துவாசிகட்கு வேண்டிய பொருள்களை இந்தியரிடம் பெற்று அனுப்புதற்கும், இந்தியர்க்குத் தேவையான பொருள்களை அயர்லந்திலிருந்து வரவழைத்தற்கும்பெரும் உபகாரியாவர். முதன்முதலாக இவர் இந்தியாவிலிருந்து அயர்லாந்துக்குத் தேயிலை அனுப்பும்விஷயமாக வேண்டிய முயற்சிகளைக் கையாள்வர். இருநாடுகளும் விசுவாசத்துடன் வியாபாரத்தை நடத்தின் பெருநன்மையை அடையக்கூடும்.

### ஸ்ரீமதி கமலாநேரு

பேர்லின் நகரில் சத்திரவைத்திய சிகிச்சைபெறும் ஸ்ரீமதி கமலாநேருவின் ஆரோக்கியம் மிகவும் திருத்தமடைந்து வருவதைக்கேட்டு ஆநந்தமடைகின்றோம். சத்திரவைத்தியம் செய்த வைத்தியராகும் Dr. அன்வறிக்றென்பவர் 8 வாரங்களுள் பூரணசுகம் ஏற்படுமெனக் கூறியுள்ளார். வயிற்றில் புதிதாக ஏற்பட்ட ஓர் வளர்ச்சியே இம்மாதினை இதுவரைவருத்தியதாகக் கூறுகின்றனர். அவ் வளர்ச்சிகள்வெட்டப்பட்டுக் காரத்தால் சுடப்பட்டனவாகக் கூறப்படுகிறது. இனிச் சிறிதும் பயமின்றாம். சத்திர வைத்தியம்செய்த ஷ வைத்தியர் அடுத்தவாரம் அமரிக்கா செல்கின்றார்.

### குறித்துக்கொள்ளுங்கள்

(பண்டாரவளைப் பொலிஸ்கோட்டில்)

நீதிபதி: பரிசோதகர் உன்னைப் பிடித்தபோது நீசாதுவாகநின்றாய்?

எதிரி: இல்லை, நான் நினைத்திருந்தால் அவருக்கு அடித்தடியில் மதவுக்கு மேலாய் வீழ்ந்திருப்பார். ஆனால்........

* * *

(ஒருவீட்டில்)

தமையன்: எனது மகன் நிலைதவறுதவன், நின்றால் ஒரேநிலை.

சகோதரி: அண்ணா! இது கிடையாத பொருத்தம். எனது மகளும் இருந்தால் ஒரே இரை.

### ஆந்திரதேசத்தில் கதரபிவிருத்தி

இந்தியாவில் பொதுவாக எல்லா மாகாணங்களிலும் கதரபிவிருத்தியெய்திவருவதைக்கண்டு நாம் சந்தோஷமடையவேண்டியிருக்கிறது. சிற்சில இடங்களில் பணக்கஷ்டம் காரணமாக விலையுயர்ந்த கதர் ஆடைக்குப் பதிலாக வேறுவித வஸ்திரங்கள் பாவிக்கத் தொடங்கியுள்ளாரெனவும் அறிகிறோம். எப்படியாயினும் கதருக்குப் பொதுவாக மதிப்புக் கூடிக்கொண்டே வருகின்றதென்போம். பொதுவாகக் கூறின், இந்தியநாடானது உண்மைச் சுதந்தரத்தைப் பெறவேண்டின் பொருளாதாரநிலையில் உறுதியடைவது அவசியம். ஆந்திரதேசத்தில் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான கதர்ப்புடவை நெசவு செய்யப்பட்டு விலைப்பட்டுளதாக அறிவிக்கப்படுகிறது. இதனால்கமக்காரராவோர் நேரேயடைந்த இலாபம் 40000ரூபாவுக்கு மேலாகுமாம்.

### லாகூரில் கலகம்

சென்றவாரம் லாகூரில் ஓர் மகமதிய பள்ளிவாசல் சீக்கியரால் இடிக்கப்பட்டதன் காரணமாக எழுந்த கலகம் நாளுக்குநாள் கூடி மிகப் பெருகியதும் அரசினர், பொலிசாரினதும் பிறிட்டிஷ் பட்டாளத்தாரினதும் உதவியைக்கொண்டு கலகத்தை அடக்கிவிட்டனர். பொலிசார் உத்தரவை மீறி ஊர்வலமாகச் சென்றவர்மீது குண்டுப்பிரயோகஞ் செய்யப்பட்டதால் 15 பேர்வரையில் இறந்தனராகவும் பலர் காயமடைந்தனராகவுங் கூறப்படுகின்றது. அரசினர் அநேக தடை உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார். ஐந்துபேருக்குமேல் கூட்ட[illegible]ச் செல்லக்கூடாதெனப் பிறப்பித்த உத்தரவை அநேக மகமதியர் மீறியதால் அவர்கள் கைதிகளாக்கப்பெற்று நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டனர். பத்திரிகைகள் இவ்விஷயங்களைச் குறித்து விபரமாகப் புதினங்கள் பிரசுரிக்கப்படாதெனவும் உத்தரவிட்டுள்ளார். பொதுவாக இப்போது லாகூர் நகரம் சமாதானமடைந்துளதாகக் காணப்படினும் அரசினர்சாக்கிரதையாகவேயிருக்கின்றனர். பிறிட்டிஷ் துருப்புகள் 5 பகுதியாக அந்நகரில் இப்போதுநிற்பாட்டப்பட்டிருக்கிறதாக அறிகிறோம்.

### ஈழகேசரி ஆண்டுமடல் மதிப்புரை.

('செந்தமிழ்' –தொகுதி 32. பக்கம் 258.)

ஈழகேசரி ஆண்டுமடல்:—இஃது ஈழகேசரி என்னும் வாரப் பத்திரிகையின் அங்கமாக வெளியிடப்பெற்றது; யுவ ஆண்டிற்குரியது. தமிழறிஞர் பலர் எழுதிய கட்டுரைகளும் பாக்களும் இதில் அடங்கியுள்ளன. ஆறுமுகநாவலர், சி. வை. தாமோதரம்பிள்ளை, அ. குமாரசாமிப்புலவர் முதலிய பல பெரியாரின் நிழலுருவப் படங்களும் பிற பல சித்திரங்களும் இம்மடலினை அலங்கரிக்கின்றன. ஈழநாட்டின் பழங்காலப் பெருமையும், இக்காலம் அஃது அடைதற்குரிய முன்னேற்றத்தின் தன்மையும் இப்புத்தகத்தால் நன்கு விளங்குவனவாம். பொதுவாக அறிவு வளர்ச்சிக்குரிய பல துறைப்பட்ட விஷயங்களும் இதன்கண் மலிந்து காணப்படுவதால், இஃது யாவரும் வாங்கி வாசித்தற்குரியதே. மிகவும் அகலமானவடிவில் வழுவழுப்பான தடித்த காகிதத்தில் நூறு பக்கமுடையதாய்க் கண்ணைக் கவரும்வண்ணம் அச்சிடப்பட்ட இப்புத்தகத்தின் விலை சதம் 50. வேண்டுவோர், 'ஈழகேசரிநிலையம்', சுன்னாகம், யாழ்ப்பாணம். என்ற விலாசத்திற் பெறலாம்

வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுமையோன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னுகம்:
யுவ ஆடி ௰௩ (கஙஉ)

# வரவு செலவுத் திட்டம்.

அடுத்த வருட வரவு செலவுத் திட்டம் தற்போது அரசாங்க சபையின் பதில் தலைவராக (Acting Leader) க் கடமை பார்க்கும் கௌரவ சேனநாயக்கா அவர்களால் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அத்திட்டத்தைக்குறித்து அவர் இரண்டு மணித்தியாலமாக விருத்தியுரைப் பிரசங்கஞ் செய்தனர். இத்திட்டத்தைக் குறித்துப் பொதுவாக நோக்குங்கால், உண்மைத் தேசவிருத்திக்குப் பெருந் துணையான விஷயங்கட்குப் பணம் விடப்படாதிருப்பினும், சிற்சில அம்சங்கள் பொதுசனங்கட்குப் பெரும் நன்மையையும் ஆறுதலையும் அளிக்குமென்பதில் ஐயமின்று. சென்ற சில வருடங்களாகப் பண நெருக்கடி ஏற்பட்டுப் பொருளாதார நிலை மிகக் கேவலமான நிலையி லிருந்தபடியால், அரசிறைவருமானங் குறைவதாயிற்று. வருவாயை எப்படியாயினும் பெறக்கருதி அரசினர் பொதுசனங்கட்கு அதிக இன்னலை உண்டுபண்ணக்கூடிய வரிகளை விதித்ததுமுண்டு. இதுகாரணமாகத் தேசத்தில் அதிருப்தி யேற்பட்டதும் யாவருமறிவர். இப்போது பணநிலை ஓரளவுக்குப் பழையநிலையை யடைந்துளதாகையின் அநியாயமான எத்தனையோ வரிகளைக் குறைத்தும் முற்றாக நீக்கியுமுள்ளார். இது பெரும் நன்மைக்குரிய விஷயமே.

இலங்கைக்குள் இறக்கப்படும் எத்தனையோபொருள்களில் இதுகாறும் விதிக்கப்பட்டவரி குறைக்கப்படவேண்டுமென வரவுசெலவுத் திட்டத்தில் காட்டப்பட்டிருக்கிறது. அப்படியாயின் ஏழைச் சனங்கள் அதிக நன்மையை அடைய இடமுண்டு. இறக்குமதியாகும் பொருள்கள் எவற்றினும் இங்கிலாந்து, இந்தியா வென்னு மிடங்களிலிருந்து இறக்கப்படும் பருத்திப் புடவை, பட்டுப் புடவைகளின் தீர்வைவரி குறைக்கப்பட்டதும் ஏழைகட்குப் பெரும் ஆறுதலையளிக்கும். பருத்திப் புடவையின் வரி நூற்றுக்குப் பத்திலிருந்து ஐந்தாகவும், பட்டுப் புடவையின் வரி நூற்றுக்கு இருபதிலிருந்து பதினைந்தாகவும் குறைக்கப்பட்டுளது. மேலும் கடதாசி, இரும்பு, அச்சுக்கூடச் சாமான்கள், கொப்பிகள் என்பவற்றிலும் தீர்வை வரி குறைக்கப்பட்டிருப்பது பொது சனங்கட்குச் சந்தோஷத்தை விளக்குமென்பதில் ஐயமின்று.

இப் புதிய வரவுசெலவுத் திட்டத்தில் காணப்படும் இன்னொரு பெருநன்மையை நாம் எடுத்துக்காட்டுவதும் அவசியம். சென்ற இருபதுவருடக்காலமாக விதிக்கப்பட்டு வந்த ஒரு கொடியவரியுளது. அது யாதென்பதை யாவருமறிவர். ஒருவர் தமது ஆஸ்தியைத் தமது பிள்ளைகட்கோ வேறு யாருக்கோ எழுதிக்கொடாது இறந்துவிடின், அவரது ஆஸ்தியின் பெறுமதியில் ஒரு பாகம் அரசினர்க்கு வரியாகக்கொடுக்கப்படவேண்டுமென்பதே. எழுதிக்கொடுத்தபின்னரும் மூன்றுவருடம் சீவியாது இறப்பின் இந்த வரி கொடுத்தே தீரவேண்டும். இவ்வரியின் கொடுமையால் பாதிக்கப்படாதோர் இல்லையென்றே சொல்லலாம். இவ்வரியை அடுத்தடுத்துக் கொடுத்து வறுமையடைந்த குடும்பங்களும் பலவுள. பொதுவாக வரும்படி யதிகமில்லா ஆஸ்தியில் வரி கொடுப்பதாயின் அதனை விற்றே கொடுக்கவேண்டும். இந்தக் கொடியவரியும் இந்த வரவு செலவுத்திட்டத்தில் நிற்பாட்டப்படுவதாகப் பிரேரிக்கப்படுவது யாவர்க்கும் பெருஞ் சந்தோஷத்தை விளைக்கும்.

பலவித நன்மைகளை யுடையதாகத்தோன்றும்இத்திட்டத்தில் சிலகுறைகள் இருப்பதையும் நோக்குவது அவசியம். இலங்கைவாசிகளின் உணவுப் பொருள்கள் வேறுநாடுகளிலிருந்து அதிகமாகவருகின்றனவே. அவற்றில் விதிக்கப்படும் வரி குறைக்கப்படாதிருப்பதற்குக் காரணம் யாதென விளங்கவில்லை. நெல், அரிசி, பாலாகாரம், பழங்கள் அதிகமாகப்புறநாடுகளிலிருந்து இறக்குமதியாகின்றதே. இவைகளில் விதிக்கப்படும் வரியைக்குறைத்தால் இலங்கையில் இவைகளைவிருத்திபண்ணும் முயற்சி குறைந்துவிடுமெனக் கமத்தொழில் மந்திரியார் எண்ணினர் போலும். இந்த வரிகளை அளவுக்குமேலாக விதிக்கப்படின் பெரும் நட்டம்வருமென இன்னும் மந்திரியார் அறியாதிருப்பது பெருந் துக்கமே. மேலும் கல்விவிருத்திக்கும், தொழில் அபிவிருத்திக்கும் அரசினர் அதிகபணம் செலவுசெய்ய அக்கறைகொள்ளா திருப்பதைக்கண்டு நாம் அதிகம் சலிப்படையவேண்டியதாகின்றது. சர்வகலாசாலையைப் பற்றிய பேச்சும் நின்றுவிட்டது. சர்வகலாசாலைக் கல்லூரிக்கென விடப்பட்ட பணமும் சுருக்கப்பட்டது. இவ்வித செயல்கள் தேசவிருத்தியை நாடுவோர்க்குப் பெரும் திகைப்பை உண்டாக்குமென்பதில் ஐயமின்று. தேசப் புனருத்தாரண விஷயங்களில் முயற்சிப்படாதிருப்பதும் அதற்குவேண்டிய விருத்திக்குப்பணம்செலவுசெய்யாதிருப்பதும் எப்படிப் பொதுசனங்களால் நோக்கப்படுமென்பதை மந்திரிமார் அறியாரா? எப்படியாயினும் வரவு செலவுத் திட்டம் ஓரளவுக்காயினும் சிறிது நன்மை பயப்பதாயிருப்பது போற்றப்பட வேண்டியதே. இப்பிரேரணைகள் யாவும் அரசாங்க சபையில் நன்கு விவாதிக்கப்பட்டே முடிவாகுமென்பது எமது கருத்து. அப்போது, ஏற்பட்ட குறைகளை அரசாங்கசபை அங்கத்தவர் நிவிர்த்தி செய்வதில் கண்ணுங் கருத்துமாகநிற்பாரென நம்புகிறோம்.

---

## நேர்வேதனமும் ஆசிரியர்களும்

ஆசிரியர்க்கு நேர்வேதனம் கொடுக்கும் விஷயத்தில் அரசினர் காலத்துக்குக் காலம் நோக்கினை மாற்றி நிற்பதை நாம் ஆதரிக்கவியலாதாகின்றது. இதுவரையும் வித்தியாசாலைகளை நடாத்திவந்த அதிபர்கள் தமது கடமையைச் சரியீனமாக நடாத்திவந்தார்களென்பதை அரசினர் நன்கறிந்தமையாலன்றோ, சுயபாஷா, இருபாஷா வித்தியாசாலைகளிற் கல்விகற்பிக்கும் ஆசிரியர்க்கு நேரே சம்பளங் கொடுக்க முன்வந்தனர். இந்த அரிய மிகப் பரோபகாரமான செய்கையை ஆரம்பித்த அரசினர்க்கு ஆசிரிய உலகம் பெரிதும் கடமைப்பட்டுளது. வித்தியாசாலைகளை நடாத்தும் அதிபர்கள்மீது அவநம்பிக்கை கொண்ட அரசினர், மேலும் அலங்கோலங்கள் நிலைபெற இடங்கொடுப்பின், அது யாவர்க்கும் விரோதமாகுமே. ஆனால் மதசபையினர், கல்விக்கழகத்தினர் என்னும் கூட்டத்தினரால் நடாத்தப்படும் வித்தியாசாலைகட்கு அரசினர் முன்போல் வருடாவருடம் உதவிப் பணம் கொடுப்பதென முடிவுசெய்தனர். அச் சபையினர் தமது விருப்பத்தைக் காட்டின், அவர்களின் வித்தியாசாலைகளில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்க்கும் மாதவீதம் சம்பளங் கொடுக்கத் தயாரெனவும் அறிவித்தனர். ஆனால், சபையினர் அதை விரும்பினாரல்லர். இப்போது அச் சபைகட்கு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை உதவிப்பணம் கொடுக்கவேண்டுமென அரசாங்கசபையினர் முடிவு செய்துவிட்டனர். மேற்கூறிய சபையினர் வெளித்தோற்றத்தில் ஆசிரியர்களை மிக மரியாதையாகச் சம்பள விஷயத்தில் நடத்துகின்றனரேயாயினும் உண்மையில் இவர்கட்கிடையில் ஆசிரியர் அடையும் கஷ்டங்களை ஆசிரியரன்றி வேறொருவரும் அறியார். தாம் படுங் கஷ்டத்தை ஆசிரியர்கள் எடுத்துரைப்பின் தமது நிலைக்கு ஆபத்தேற்படுமோவென அச்சமுற்று மௌனஞ் சாதிப்பின், அம்மௌனத்தைக்கொண்டு அவர்கள் நிலை நன்றாயிருக்கின்றதென நாம் முடிவுசெய்யவியலாது. ஆகையால், நாம் சொல்வதொன்றுளது. நேர்வேதனங் கொடுக்கப்படின் அது ஆசிரியர் கையில் சேரச்செய்வதே முறை. அவ்வாறன்றி வித்தியாசாலை அதிபர் (அவர் எச் சபையால் நியமிக்கப்படினுஞ் சரி) மூலமாகக் கொடுப்பதை நாம் முற்றாகக் கண்டிக்கிறோம். இப்போது மூன்றுமாதத்துக் கொருதரம் கொடுக்கப்படும் உதவிநன்கொடைப் பணம் இன்னும் சிலவாண்டினுள் மாதவீதம் கொடுக்கப்படவேண்டுமென முடிவுசெய்யப்படலாமே. மேலும் தனித்தனி யதிபர்களின் கீழ் உள்ள வித்தியாசாலைகளும் போலிச்சபையினரின் பள்ளிக்கூடங்களாக வர முயலுமே. மதசபையினர், வித்தியாசபையினர் என்போரின் பரிபாலனத்தின் கீழ் ஆசிரியர் தாம் திருப்தியடைந்துளராகப் பெறின் நாம் கூறக்கூடியதொன்றுமில்லை. ஆனால் அவர்கள் உண்மையில் அதிருப்தியடையின் அதை வெளியிட்டுத் தமது குறைகளை எடுத்துரைப்பின், அரசினர் வேண்டியதைச் செய்வாரென்பதே எமது அபிப்பிராயம்.

## மல்லாகம் கோடு

சிலநாட்களின்முன் நீதிபரிபாலன விஷயமாக விசாரணை நடாத்தும் பொருட்டு நியமிக்கப்பட்ட சபையார் யாழ்ப்பாணத்தில் விசாரணை நடத்தியபொழுது, அவர்கள் முன் சாட்சியங்கூறிய ஒரு பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தர் "மல்லாகம் கோடு பெயரளவில்தானிருக்கிறது" எனக் கூறினர். ஆனால் சென்ற 22-ந் தேதியன்று மல்லாகத்திலுள்ள நீதிஸ்தலத்தைத் தரிசித்தோர் எவரும் அதிசயமடையாதிரார் என்பதே எமது அபிப்பிராயம். பல நூற்றுக்கணக்கான ஆடவரும் பெண்களும் மோட்டோர்வண்டி-மாட்டுவண்டிகளும் கோட்டுவெளவில் காணப்பட்டன. இரு நீதிபதிகளால் இரு இடங்களில் விசாரணை செய்யப்பட்டும் எத்தனையோ வழக்குகள் தவணையிடப்பட்டன. இவ்வாறு சிறு குற்றங்களையும் பெரிதாகக் கருதி வழக்குத்தொடருவோர் பல தவணைகளில் கோட்டுக்குச்சென்று நாள்முழுவதும் காத்திருந்தும் விசாரணையின்றித் தவணையிடப்படுவதை நினைந்தும், தவணைக்குத் தவணை அப்புக்காத்துப் பிரக்கிராசிகளுக்கும் அவர்கள் வரும் வாகனங்களுக்கும் பணங் கொடுத்தும், வீடு திரும்புகையில் மனவருத்தமுடையராய்க் கோட்டின் பலாபலன் இதுதானெனக் கூறிச் செல்கின்றதைக் காணலாம். விஷயம் இவ்வாறாக "மல்லாகங் கோடு பேரளவில் தான் இருக்கிறது" என்ற கூற்று எவ்வளவு பொருத்தமானதாயிருக்கிறதென்பதை எவரும் உணர்ந்து கொள்ளலாம். நிற்க,

நாட்டில் இத்துணைக் குற்றங்கள் அதிகரிப்பதற்குரிய காரணம் யாதென்பதை அறிந்து அதற்குரிய வழிவகைகளைக் காலத்தில் செய்யாவிடின், மல்லாகம் பொலிஸ்கோட்டுடன் நில்லாது இன்னும் பல கோடுகள் தேவைப்படும்போலத் தெரிகிறது. ஏழைகளும் அறிவிலிகளுமாகிய சனங்கள் கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கும் பணம் இவ்வாறு அநியாயமாய்ச் செலவழிக்கப்படுதல் அந்தோ! பரிதாபம்!! பரிதாபம்!!! செலவின்றிக் கிராமச்சங்க மூலமாகத் தீர்க்கப்படக்கூடிய எத்தனையோ சிறிய குற்றங்களுக்குக்கூடப் பெருந்தொகைப் பணம் செலவுசெய்யப்படுகிறது. இத்தகைய குற்றங்கள் நிகழாவண்ணம் பொதுசனங்களுக்குப் புத்திகூறி, அவர்களை நன்னிலைப்படுத்த அறிவிற் சிறந்த ஆன்றோர் முன்வருதல்வேண்டும்.

## கதிர்காமத்தில் மகாநாடு

இவ்வாண்டு கதிர்காம யாத்திரைக்குச் சென்றவர்கள் சார்பில் கதிர்காமத்தில் ஓர் மகாநாடு கூட்டப்பட்டதாகவும், அம் மகாநாட்டில் கதிர்காமக் கோயில் பரிபாலன விஷயமாக ஓர் நிர்வாகசபை அமைக்கப்படவேண்டுமென்றும், அச்சபைக்கு 9 மாகாணங்களிலிருந்து 9 இந்து சங்கத்தினரும் 4 பௌத்த அங்கத்தினரும் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டுமென்றும் ஓர் தீர்மானம் நிறைவேறியதாகவும் அறிகின்றேம்.

பெரும்பாலான இந்துசமயிகளின் வணக்கத்துக்குரியதான இவ்வாலயம் இதுவரை கண்டியிலுள்ள ஒரு பௌத்த சங்கத்தாரின் பிரதிநிதிகளாலேயே பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. இதன் வருவாய் எவ்வகையில் செலவு செய்யப்படுகின்றதென்பதும், மற்றும் ஆலயத்தில் செய்யப்படும் திருப்பணிகள் முதலியவை எவ்வாறு நடைபெறுகின்றதென்பதும் எவராலும் அறியமுடியாதிருக்கிறது. அப்படியிருந்தும் ஆயிரக்கணக்கான இந்து யாத்திரீகர்களால் காணிக்கையாகவும் நேர்த்தியாகவும் ஏராளமான பணமும் பொருள்களும் வருடாவருடம் கொடுக்கப்படுகின்றனவே. இதன் பெறுபேறென்ன?

இந்தியாவில் பெரும்பாலான பௌத்தர்களின் வணக்கத்துக்குரிய "புத்தகாயா" என்னும் ஆலயம் ஓர் மகந்துவினல் பரிபாலிக்கப்பட்டுவருகிறது. இவ்வாலயத்தைப் பௌத்தர்கள் தம்வசப்படுத்தப் பெருமுயற்சி செய்துநிற்கையில், இலங்கையில் பௌத்தர் பரிபாலனத்திலுள்ள கதிர்காம ஆலயம் இந்துக்கள் பரிபாலனத்தில் வரவேண்டுமென்பதும், அதற்காகக் கிளர்ச்சிசெய்யப்படவேண்டுவதும் நியாயமே.

மகாநாட்டாரின் மேற்படிதீர்மானத்தை நாம் ஆதரிக்கின்றேம். ஆயினும், நாட்டில் பொருளாதாரநிலை சீர்குன்றி, வறுமையும் நோயும் தலைதூக்கிநிற்கும் இக்காலத்தில், சமயங்களின்பேரால் செய்யப்படும் அர்த்தமற்ற வீண்செலவுகளிலும் ஆரவாரங்களிலும் நாட்டின் செல்வத்தைப் பாழாக்குவது மடமைத்தனமென்றே கூறவேண்டும். இன்று நமதுநாட்டில் தொழில்பஞ்சம், உத்தியோகமின்மை முதலியவற்றைக்குறித்து மகாநாடுகளில் கூச்சலிடுகின்றார்கள். பத்திரிகைகளில் பத்தி பத்தியாய்

# அரசாங்கபணவருட (1935-36) வரவு செலவுத் திட்டம்.

## பிரதம அங்கத்தவரின் வியாக்கியானம்.

### அநியாயத்தீர்வைவரிகளில் இறக்கம். || 90 இலட்சம் எதிர்பார்க்கும் வருமானவரி.

## இந்திய - இலங்கை வியாபாரக் குறிப்பு.

(கோழும்பு நிருபர்.)

அரசாங்கசபை,கொழும்பு, 25.

இன்று அரசாங்கசபையில் திரு. டீ. எஸ். சேனநாயக்கா (சபையின் தற்காலிக பிரதான அங்கத்தினர்) 1935–36ம் வருட வரவு செலவு திட்டத்தைச் சமர்ப்பித்தார். சென்ற நான்குவருடங்களிலும் இக்கடமையைப் பிரதான அங்கத்தினர் சேர் டீ. பீ. ஜயதிலகா செய்துவந்தார். ஆனல் அவர் ஏகாதிபத்தியப் பார்லிமெண்டரி சங்கக்கூட்டம் சம்பந்தமாக இங்கிலாந்துசென்றிருக்கிறபடியால் அவருடைய கடமையை இவ்வருடம் திரு. சேனநாயக்கா செய்யவேண்டியிருந்தது.

திரு. சேனநாயக்கா வரவு செலவு திட்டத்தைப்பற்றி இரண்டுமணி நேரத்திற்கு மேல் பேசினர். இவருடைய பேச்சு முந்தியவருட வரவு செலவு திட்டப் பேச்சுகளைக்காட்டிலும் பலவிஷயங்களில் முக்கியமானதாகவிருக்கிறது. உதாரணமாக முதன்முறையாக இவ்வருடந்தான் இலங்கையின் பணநிலைமையைப்பற்றி விரிவான விபரங்கள் தெரிவிக்கப்பட்டன. பொதுசனங்களின் வரிச்சுமையைக் குறைக்கும் பல பிரேரணைகளும் இவ்வருட வரவு செலவு திட்டத்தில் அடங்கியிருக்கின்றன.

இறந்தவர்களின் நிலச்சொத்துகளின் மீது விதிக்கப்படும் வரி (Death duties-பூதல்வரி) அடுத்த வருடத்திலிருந்து நீங்கிவிடும். 1936-ம் வருட நீர்ப்பாசன வரிகளை ஒழித்துவிடவும் மந்திரிகள் தீர்மானித்திருக்கிறார்கள்.

இறக்குமதித்தீர்வைகள் சம்பந்தமாகச் சிலபொருள்களின் தீர்வையைக் குறைக்கவும் சிலபொருள்களின் தீர்வையை நீக்கவும் பிரேரணைகள் கொண்டுவரப்படும். விவசாயக் கருவிகள், பருத்திநூல் துணிகள், பஞ்சு, பட்டு, செயற்கைப்பட்டு, தையல் யந்திரம், கடதாசி, அச்சு, அலுமினியத்தகடு, இரும்பு, உருக்கு, கம்பி, கொப்பிப்புத்தகம், ஈயத்தகடு, மெழுகு முதலியவையே இப்பொருள்களில் முக்கியமானவை.

இப்பொழுது இருந்துவருவதுபோலப் புதிய தீர்வைத் திட்டத்திலும் ஏகாதிபத்திய நாடுகளிலிருந்துவரும் பொருள்கள்மீது குறைந்த தீர்வைகளும் மற்றநாடுகளின் பொருள்கள்மீது கூடியதீர்வைகளும் இருந்துவரும். உதாரணமாகப் பருத்தித் துணிகள் விஷயத்தில் பிரிட்டிஷ் துணிகள்மீது தற்பொழுது இருந்துவரும் 10 வீதத் தீர்வை 5 வீதத் தீர்வையாகக் குறைக்கப்படவேண்டுமென்றும் அன்னியநாட்டுத் துணிகள்மீது இருந்துவரும் 10 வீதத் தீர்வை அப்படியே இருந்துவரவேண்டுமென்றும் வரவு செலவு திட்டத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இறக்குமதித் தீர்வைகளைக் குறைப்பதனுலும் அரசாங்க வருமானத்தில் 8 லட்சம் ரூபா குறையும்.

தேயிலைமீது இருந்துவரும் ஏற்றுமதித்தீர்வையுங் குறைக்கப்படும். இதனுல் 4லட்சம் ரூபாய்வருமானக்குறைவுஏற்படும்

1935-36-ம் வருட வரவு செலவு விபரம் வருமாறு;-

எதிர்பார்க்கப்படும் வரவு ரூபா 103,000,000. எதிர்பார்க்கப்படும் செலவு ரூபா 110,000,000. அதிகமாகத் தேவைப்படும் 7,000,000 ரூபாயையும் சேமநிதியிலிருந்து எடுத்துச் செலவுசெய்ய மந்திரி சபையினர் உத்தேசித்திருக்கிறார்கள். இவ்வளவு தொகையை எடுத்த பின்னரும் 22,000,000 ரூபாய் மிகுதிஇருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய வருடத்தில் வருமான வரியிலிருந்துமட்டும் 9,000,000 ரூபாய் கிடைக்குமென மந்திரிகள் எதிர்பார்க்கிறார்கள். இத்தொகை இவ்வருடத் தொகையைக்காட்டிலும் 15 லட்சம் ரூபாய் கூடியதாகவிருக்கிறது.

"இலங்கையில் வருமான வரியையே பிரதான வரியாக்க வேண்டுமென்றும் மந்திரி சபையினர் தீர்மானித்திருக்கிறார்கள்" என்று திரு சேனநாயக்கர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:— "மலேரியாக் காய்ச்சல் இலங்கையைவிட்டுச் சீக்கிரத்தில் போகும்என்று தெரியவில்லை. எங்களுடைய அதிகாரத்தில் எவ்வளவு பணம் இருக்கிறதோ அவ்வளவும் அவசியமாயிருந்தால், இந்தக் காய்ச்சலை ஒழிப்பதில் செலவுசெய்யப்படும். சென்ற காலத்தில் சம்பளங்கள்மீதும் கட்டிடங்கள்மீதும் பணம் அனேகமாகச் செலவுசெய்யப்பட்டு வந்தது. வருங்காலத்தில் இந்நாட்டினரின் வாழ்க்கைநிலைமையை மேம்படுத்துவதிலும் அவர்களுடைய சுகாதாரத்தை அபிவிருத்திசெய்வதிலும் அவர்களுடைய வருமானத்தை அதிகப்படுத்துவதிலும் அரசாங்கப் பணம் செலவுசெய்யப்படும்"

இந்திய-இலங்கை வர்த்தகத்தைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது, அவர் "சீவனம் சத்துக்காக இந்தியா சென்றிருக்கும ஒவ்வொரு இலங்கையருக்கும் பதிலாக இந்தியாவிலிருந்து குறைந்தது பதினயிரம்பேர் இங்குவந்திருக்கிறார்கள். இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் நாம் அனுப்பும் ஒவ்வொரு ரூபாய் பெறுமதியுள்ள சரக்குகளுக்குப் பதிலாக நாம் அந்நாடுகளிலிருந்து 7 ரூபாய் பெறுமதியுள்ள சரக்குகளை வாங்கிவருகிறோம். இலங்கைக்கு வரும்படி சில இந்தியப் பிரதிநிதிகளை அழைத்திருக்கிறோம். அவர்கள் இங்குவந்து தறபோதைய நிலைமையைப் பரிசீலனைசெய்வார்களானல் இந்தியா, தற்பொழுது காட்டிவரும் சலுகையைக்காட்டிலும அதிக சலுகையை நமது பொருள்களுக்குக் காட்டுமென்பது நிச்சயம்" என்று கூறினர்.

ஒருசுப்பிறீம்கோட்டுநீதியாசரும் ஏழு சிவில்சேவிஸ் உத்தியோகத்தரும் 96 கிளெரிக்கல் உத்தியோகத்தர்களும் பத்துப் பெரியகோட்டு நீதிபதிகளும் ஒன்பது கிராமக்கோட்டுத் தலைவர்களும் 33 டக்டர்களும் 15 அப்போதிகரிகளும் 5 சுகாதாரத்தாதிகளும் 5 சுகாதாரப் பரிசோதகர்களும் புதிதாக நியமிக்கப்படுவார்கள்.

கமம் செய்வதற்காகப் புதிய பகுதிகளிற்போய்க் குடியேறியிருக்குங் குடியானவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாயும் கமக்காரருக்குப் பரிசுகள் வழங்குவதற்காக 22400 ரூபாயும் செலவுசெய்யப்படும்.

வைத்திய வசதிகளை அதிகப்படுத்துவதற்கும் பணம் செலவுசெய்யப்படும்.

குறிப்பு--1935-36-ம் வருடம்என்று மேலே குறிப்பிட்டிருப்பது 1935 ஒக்டோபர் மாதந்துவங்கி 1936 செப்டம்பர் மாதம் வரையுள்ள ஒரு வருடத்தைக் குறிக்கும். இதை அரசாங்கத்தின் பண வருடம் என்று கூறுவார்கள்.

---

# அபிஸீனியாவில்யுத்தாரம்பம்

## மூன்றுவது வீரனுக முசோலியின் யோசனை!

## கறுப்பரைச் சீர்திருத்தக் கங்கணம் கட்டிநிற்கும் வெள்ளையர்

### இத்தாலிய துருப்புகளின் யுத்த வெறி

அபிஸீனியாவுக்கும் இத்தாலிக்குமிடையில் யுத்தம் ஏற்படும்நாள் எப்போதெனச் சொல்லமுடியா திருக்கின்றது. இத்தாலியர் செய்யும் ஆரம்பத்தையும் இத்தாலியின் அரசியற்றலைவராகும் முசோலினியின் யுத்ததனுவையும் கேட்டு யாவரும் அச்சமடைய வேண்டிய தாகின்றது. நாளைக்கோ அன்றேல் அடுத்தநாளோ யுத்தம் ஏற்படும்நாளென எண்ணவும் வேண்டியதாகின்றது. தமக்கு உதவிசெய்யாதவர் எல்லோரும் தமக்குவிரோதியென்பது இத்தாலியர் கருத்தாகின்றது;

* * *

யப்பானியரும் பிறிட்டிஷாரும் ஆயுதங்களை அபிஸீனியர்க்குக் கொடுக்கும்படி கப்பலில் ஏற்றிச்சென்றால் அதற்கு மறுமொழி இத்தாலிய பீரங்கிகள் சொல்லுமென்று முசோலினி கூறுகின்றார். அபிஸீனியாவுக்கு உதவிசெய்ய யப்பானியர் வருவாரோஎன இத்தாலியர் பயப்படுகின்றனர். அபிஸீனியாவில் பருத்தி, கோப்பி முதலியன பயிரிடுவதற்கென அபிஸீனிய அரசினர் யப்பானுக்கு 2 லட்சம் ஏக்கர் நிலம் கொடுத்துள்ளார். இதுவும் இத்தாலியர்க்குப் பிடிக்கவில்லை.

* * *

சர்வதேச சங்கத்தின் கூட்டம் இந்த மாதம் 31-ந் திகதி கூடும். அப்போது அபிஸீனியா விஷயம் விவாதிக்கப்படும். இவ்விஷயத்தையிட்டுப் பிறிட்டிஷாரும் பிரான்சியரும் ஒரேவிதமான அபிப்பிராயத்துடன் வேலைசெய்யவேண்டுமென எண்ணமுடையாராயினும் அந்த ஒற்றுமையை இன்னு மடைந்தாரில்லை. சர்வதேச சங்கத்தின் பெருமையைக் காப்பாற்றவேண்டுமென்ற எண்ணம் மாத்திரம் இருநாடுகளையும் பீடித்துளது. அப்படிச் செய்வதற்கு ஒற்றுமையே பெரிதாகும்.

### நேரிற் கண்டவர் கூறும் விபரம்

யுத்தத்தின் செலவுக்காக அபிஸீனியாவின் மந்திரியாராகும் திரு. மாட்டின் என்பவர் இங்கிலாந்தினிடமிருந்து 20 லட்சம் பவுண் கடனெடுக்க முயற்சிசெய்கிறார். கடன் கொடுப்பது பிறிட்டிஷ் அரசினரன்று; ஊரவரே. இதையிட்டும் இத்தாலிக்குத் துவேஷமுண்டாகிறது. பிறிட்டிஷார் அபிஸீனியாவின் கட்சியில் நிற்பதாக இத்தாலியர் குறைகூறுகின்றனர். அபிஸீனியாவிற்குச் சென்று இத்தாலியர்க்கு எதிராக யுத்தஞ் செய்பத் தமக்கு விருப்பமென்று நூற்றுக்கணக்கான அயர்லந்து வாலிபர், லண்டனிலுள்ள அபிஸீனிய தூதராகும் மாட்டின் என்பவர்க்குக் கடிதம் எழுதியுள்ளனர். அநேகர் சம்பளமின்றி யுத்தஞ் செய்பவுஞ் சம்மதமாம்.

* * *

ருஷிய தேசத்து மந்திரியாராகும் திரு. லிற்விநொப் என்பவர் இப்போது றோம்நகரில் வைகின்றனர். இவர் முசோலினியுடன் சந்தித்துப் பேசுங்கால், அபிஸீனிய விஷயமாகவும் பேசக்கூடுமென எண்ணப்படுகிறது. யார் என்ன சொன்னலும் ஏகாதிபத்தியத்தைப் பெருப்பிக்கும் நோக்கமுடைய முசோலினி கேட்பாரா? முதல் ஜூலியஸ்சீஜர், பின் நெப்போலியன், அதற்குப் பின் முசோலினியின் பெயர் நிலைபெறுமாம். அவ்விதம் நிலைபெறுவதற்கு மகா யுத்தத்தை இவர் நடாத்தி முடிக்கவேண்டும். கறுப்பர்களைச் சீர்திருத்தும் பாக்கியம் ஐரோப்பியர்க்குத்தானுண்டாம். அபிஸீனியாவின் கறுப்பர்களைத் தான் சீர்திருத்த முயலும்போது மற்றையோர் முன்வந்து தடைசெய்வதா? என்கிறார் முசோலினி.

* * *

றோம் நகரில் பத்திரிகைகள் யப்பானியர்க்கு மாறாக எழுதிவந்தமையால் பொதுவாக யாவரும் யப்பானியர்மாட்டுத் துவேஷம் பாராட்ட முற்பட்டுவிட்டனர். றோம்நகரில் வசிக்கும் யப்பானிய தூதரின் இருப்பிடம் பொலிஸ் பட்டாளத்தினரால் இரவும் பகலும் காவல் புரியப்படுகின்றது. 1904-ம் வருடம் ருஷியருடன் யப்பானியர் யுத்தம் ஆரம்பிப்பதற்குக் காரணமாயிருந்த ஒரு சபை—'பிளாக்டிறாக்கன் சபை' யப்பானில் உண்டு. அச்சபையே இப்போது இத்தாலியர்க்கு மாறாக நிற்கின்றது. இச்சபை முசோலினியின் போக்கை முற்றாகக் கண்டித்து, அவருக்கு ஒரு தந்திச் செய்தியை அனுப்பியுளது. அபிஸீனியாவுக்கு அனுப்பிய பட்டாளத்தைத் திருப்பி அழைக்கும்படி மேற்படி சங்கம் வேண்டுகிறது. மேலும், அபிஸீனியா விஷயத்தில் சமாதானத்தை நாட்டும்படியும் குறித்த சபை யப்பானிய அரசினரைக் கேட்கிறது.

* * *

இத்தாலிய துருப்புக்களின் ஆனந்தத்தை என்னென்று சொல்லுவதென இந்தியப்பிரயாணிஒருவர் கூறுகிறார். இவர் லண்டனிலிருந்து வரும்வழியில் மசோவாத் துறைமுகத்தில் இத்தாலியதுருப்புக்கள் இறக்கப்படுவதை நேரிற் கண்டனராம். யுத்தம் ஆர் தலைகுத்திக்கொண்டு நின்றாலும் புரட்டாதி மாதத்தில் ஆரம்பமாகுமென்று இத்தாலிய உத்தியோகத்தர் சொன்னராம். இத்தாலிய போர்வீரரின் யுத்த வெறியை அடக்குவது கஷ்டமாம்.

* * *

பிரான்சுதேசத்து அந்நியநாட்டு மந்திரியாராகும் லவல் என்பவர் பிறிட்டிஷாருடன் இன்னுஞ் சேர்ந்து சமாதானத்தை நாட்ட முயற்சி செய்யவுமில்லை. அல்லது இத்தாலியர்க்கு மாறாக எதாவது சொன்னருமில்லை. ஆனல் இடைவிடாது சர்வதேச சங்கத்தின் கௌரவம் பங்கமடையாது காப்பாற்றப்பட வேண்டுமெனகிறார். இப்போது இவர், பிறிட்டிஷ், இத்தாலிய, அபிஸீனிய தூதருடன் கலந்து பேசின வண்ணமாக நிற்கிறார். ஆனல் இன்னது செய்யவேண்டுமென்று சொல்கின்றாரில்லை. ஜெனிவா சென்று சர்வதேச சங்கத்திற்றான் எல்லாம் எடுத்துரைப்பாராம். தமது முயற்சியால் சமாதானம் ஏற்படுமென இவர்க்கு நம்பிக்கை உண்டாம். அதுதான் தேவை.

---

எழுதுகிறார்கள். ஆனல், தேவாலயங்கள் என்று கூறிக்கொண்டு—மக்களைப் பாழ்படுத்தும்—ஆபாசமான— தாசிகள் நடனம்—வாணவேடிக்கை முதலியவைகளில் செலவாகும் பணத்தைக்கொண்டு எத்தனை தொழிற்சாலைகளை நடத்தலாம். எத்தனைபேர் அதில் உத்தியோகம் செய்யலாம் என்பதை உணர்ந்துபாருங்கள். கோயிலென்று கட்டடமே இல்லாத ஒரு மரத்தடியில் 14 கூட்டம் பெரிய மேளமும் 4 கூட்டம் சின்ன மேளமும் ஆடுகின்றனவே. கோயில்கள்மாத்திரமல்ல இக்காலத்திலே வீடுகளிலும்—புனிதமாகக் கருதப்படும் மணவினைகளிலும்—எட்டுச் செலவு—அந்தியேட்டிச் செலவுகளிலும் தாசிகள் நடனமும் வாணவேடிக்கையும் நடைபெறுகின்றன. இனிமேல் மரணச்சடங்கிலும் தாசிகள் நடனம் நடக்குமோ என எண்ணவேண்டியிருக்கிறது. என்? அங்கேயும் சனக்கூட்டம் தேவைதான்.

## சிறந்த சங்கீதவித்துவானின் பிரிவு

வேதாரணியத்திலிருந்து வந்து வண்ணார்பண்ணையிலுள்ள குருக்கள் மடத்தில் சென்ற நாற்பது வருடமாக வாழ்ந்துவந்தவரும் சைவாசிரிய வகுப்பைச் சேர்ந்தவரும் சங்கீதத்தில் பெருஞானம் படைத்து இலங்கை இந்தியா வென்னு மிரு இடங்களிலும் அழியாப்புகழை நாட்டியவரும் ஆகிய ஸ்ரீமத்.மு. அய்யாச்சாமிக் குருக்கள் அவர்கள் சென்ற ஆனிமீ ககஉ (25-6-35) செவ்வாய்க்கிழமை சாயந்தரம் நாலுமணியளவில் வேதாரணியத்தில் தமது இல்லத்தில் சிவபதமடைந்துவிட்டனரெனக் கேட்டு மிக விசனமடைந்தாம். இவர் பிரிவு சங்கீத உலகத்துக்குப் பேரிழவையாகும். யாழ்ப்பாணத்தில் இவரை யறியாதார் இல்லையெனலாம். இவரிடம் சங்கீதங் கற்றுப் பயிற்சி பெற்றோரும், சங்கீத விஷயங்களில் தமக்கு ஏற்பட்ட சந்தேகங்களைத் தெளிந்துகொண்டோரும் பலராவர். சங்கீதப் போட்டிகள் கச்சேரிகள் நடக்குங் காலங்களில் இவர் சமூகம் பொதுவாக நாடப்பட்டதென்பதும் உண்மையாகும். இவர் சமயபக்தி, கல்வியறிவு, என்பவற்றிலும் மேம்பட்டவர். ஒழுக்கத்திலும் விழுப்பமடைந்த இவ்வாசாரிய திலகர் தமது 66-வது வயதில் பிரிந்தமை சங்கீதத்துக்கும் யாழ்ப்பாணத்துக்கும் பெரும் நட்டமென்றே கூறுவாம். இவரது பிரிவால் எமக்கேற்பட்ட துக்கத்தை இவரது குடும்பத்தார்க்கும் பந்துக்களுக்குந் தெரிவிக்கின்றோம்.

---

பெரியோர் செய்தற்கரியவைகளைச் செய்வார்கள், சிறியோர் செய்தற்கரியவைகளைச் செய்யார்கள்.

# யாழ்ப்பாண ஐக்கிய மத்திய வங்கி அறிக்கை

—:o:—

[ஷெ வங்கியின் மகாசபைக் கூட்டத்தில், வங்கித் தலைவர், முகாந்திரம் திரு. V. பொன்னம்பலம் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.]

அன்பர்களே,

சொற்ப காலத்துக்குமுன் உங்களுக்கு அனுப்பப்பட்ட வருடாந்த அறிக்கையையும், பரிசோதகரின் ஒப்பமிடப்பட்ட வரவுசெலவுக் கணக்கையும் நீங்கள் கவனமாய்ப் பார்த்திருப்பீர்களென்று நான் நம்புகிறேன். உங்களுக்கு நன்கு தெரிந்த விஷயங்களை நான் திருப்பிக் கூறுவது மிகையாகும். வருடாந்த அறிக்கையையும், வரவு செலவுக் கணக்கையும் நீங்கள் அங்கீகரிக்கும்படி நான் பிரேரணை கொண்டுவருமுன், உங்கள் அனுமதியுடன் சில குறிப்புகள் கூற விரும்புகிறேன்.

இந்த மத்திய வங்கியின் ஆறும் ஆண்டு முடிந்து ஏழாம் ஆண்டு தொடங்கியிருக்கிறது. இவ்வங்கி நன்னிலையடையும் பொருட்டு, இவ்வங்கியின் காரியங்களைப் பரிபாலிப்பதில், வங்கியின் அக்கிராசனராகிய என்னுடன் ஒத்துழைத்த கர்மகர்த்தாக்கள், அங்கத்தவர்கள் எல்லோருக்கும் என்னுடைய மனமார்ந்த வந்தனம் உரியதாகுக. நான் இவ் வங்கியின் அக்கிராசனராக 4 வருடங்கள் இருந்திருக்கிறேன். என்மேல் நீங்கள் வைத்த நம்பிக்கையாலேயே அடுத்தடுத்து இப்பதவிக்குத் தெரிந்தீர்கள் என்பது எனக்கு மிகவுஞ் சந்தோஷத்தைக் கொடுக்கின்றது.

## அங்கத்துவம் :

1931-ம் ஆண்டில் 128 அங்கத்தவர்களும், இவ்வறிக்கைக்குரிய ஆண்டில் 226 அங்கத்தவர்களுமுண்டு. 20 தனிப்பங்காளரும், 78 சங்கப் பங்காளரும் கூடியிருக்கின்றனர். இது வங்கியின் வளர்ச்சி திருப்திகரமென்பதைக் காட்டுவதுடன், ஒத்துழைப்பு முறையால் எங்கள் நாட்டுக்கு வரும் நன்மைகள் எவ்வளவென்பதையும் தெளிவாகக் காட்டுகின்றது.

## வைப்புப் பணம் :

சென்றவருடக் கணக்கின்படி தனி அங்கத்தவராற் கட்டப்பட்ட வைப்புப் பணத்தொகை ரூபா 139,010-60. ஸ்தாபனங்களாற் கட்டப்பட்ட தொகை ரூபா 119,069-68. இவ்வறிக்கைக்குரிய வருடத்தில் தனி அங்கத்தவரின் வைப்புப் பணம் ரூபா 136,471-49. ஸ்தாபனங்களால் வைக்கப்பட்ட வைப்புப் பணம் ரூபா 124,736-27. தேவைக்கு மிஞ்சிய வைப்புப் பணம் வங்கியிலிருப்பதால், புதிதாக வைப்புப்பணத்தை நாங்கள் அதிகமாய் ஏற்றுக்கொள்ள முடியாமலிருக்கிறது.

## நிலையற்ற வைப்புப் பணம் :

இரண்டாவது ஆண்டில் ஒரு சங்கந்தான் இவ் வங்கியில் நிலையற்ற வைப்புக் கணக்கு வைத்திருந்தது. இப்போது 21 சங்கங்களால் ரூபா 12,267-18 நிலையற்ற வைப்பில் வைக்கப்பட்டிருக்கிறது.

## கடன் கொடுத்தல் :

வருடாவருடம் சங்கங்களின் தேவைகளுக்குத் தக்க பணம் கொடுத்தல் அதிகரித்து வருகிறது. வங்கி தொடங்கிய இரண்டாவது வருடத்தில் 182 கடன்களில் கொடுத்த ரூபா 162,838-50. சென்ற வருடத்தில் 443 கடன்களில் ரூபா 232,632-23 கொடுக்கப்பட்டிருக்கிறது.

## தொழிலுக்குதவும் பணம் :

வங்கி, தொழில்செய்வதற்கு உதவும் பணம் காலத்துக்குக்காலம் அதிகரித்துக் கொண்டு வருகிறது. வங்கி தொடங்கிய 4-வது வருடத்தில் ரூபா 515,816-41 ம், சென்ற வருடத்தில் ரூபா 794,700-44 ம் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டு வருடத்துக்குள் இத்தொகை ஏறக்குறைய 280,000 ரூபா வரையில் கூடியிருக்கிறது. இவற்றிலிருந்து வங்கியில் எவ்வளவு கூடிய வேலைகள் நடைபெற்று வருகின்றனவென்பதை நீங்கள் அறியலாம்.

## லாபம் :

எல்லாச் செலவுகளும் நீக்கி மிஞ்சிய லாபம் ரூபா 4800-65. இதை எப்படிப் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்பதைக் கர்மகர்த்தாக்கள் உங்களுக்கு விளக்கியிருக்கிறார்கள்.

## பொதுக்குறிப்பு :

இவ்வங்கியின் மனேஜருக்கு அரசாங்கம் ஓர் கௌரவபட்டம் கொடுத்ததைப்பற்றி அறிக்கைப்பத்திரத்திற் சொல்லியிருக்கிறது. என்றாலும் நானும் சில குறிப்புகள் சொல்ல விரும்புகின்றேன். நான் இந்த வங்கி துவங்கிய காலத்திலிருந்து ஸ்ரீமான் முத்தையாவுடன் வங்கியின் அலுவலாக அதிக நெருக்கமாய்ப் பழகியிருக்கிறேன். இப்படி ஒருவர் மனேஜராய் கிடைத்தது வங்கியின் அதிஷ்டமென்று சொல்லுவேன். இவ்வளவு ஊக்கமாய் வேலைசெய்யக்கூடிய ஒருவரைத் தேடக் கிடையாது. அவருக்கு முகாந்திரப் பட்டங் கிடைத்தது எங்களுக்கு ஆனந்தமென்பதை உங்கள் பேரால் அவருக்கு அறிவிக்கின்றேன்.

இதைவிட இலங்கையில் ஒத்துழைப்புக்காக உழைத்த கமெல், மேபின் துரைமார் இருவரும் சென்றவருஷம் எங்களை விட்டுப் பிரிந்த விஷயம் உங்களுக்குத் தெரியும். .........லூசற்துரை திரும்பியும் வந்திருக்கிறார். அவர் சென்ற இடங்களில் ஒத்துழைப்பு முறைகளில் அதிகம் திருத்தமான புதிய முறைகளைப்படித்து வந்திருக்கிறார். உதவிப் பதிவுகாரர் ஸ்ரீமான் இரகுநாதன் அவர்கள் செய்த உதவிக்காக நாங்கள் நன்றிகூறவேண்டியது. கடைசியாக எங்களுடைய கௌரவ காரியதரிசி திருவாளர் அருளம்பலம் அவர்களுக்கும் நன்றிகூறவேண்டியது என்கடமையாகும்.

# பலதும்

**திரு. எச். ஏ. பீ. சந்திரசேகரா, கே. ஸீ.**— இவர் குணமடைந்து வைத்தியசாலையை விட்டு வெளியேறிவிட்டார். நிச்சயமாக வரும்பொதுத்தேர்தலில் யாழ்ப்பாணத்தெரிவுப்பகுதிக்கு அரசாங்கசபைப் பிரதிநிதியாகப் போட்டிசெய்வாராம்.

**திரு. சு. நடேசன்**—இவர் அரசாங்கசபையில் தற்போது கல்விப்பகுதி நிர்வாகசபைக்கு மந்திரியார் பிரேரித்ததின்பேரில் மாற்றப்பட்டிருக்கிறார்.

**மலேரியா**—அரசாங்கசபை அங்கத்தவர்களாகும் திருவாளர்கள் வீ. எஸ். டீ. விக்கிரமசிங்கா அவர்களும், ஆர். எஸ். தென்னக்கோன் அவர்களும் மலேரியாவால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள்.

**ஆடி அமவாசை**—வருகிற திங்கட்கிழமை (29-7-35) ஆடி அமாவாசையாதலால் அரசினர் விடுதலைநாளாகக் கவனிக்கப்படும் ஞாயிற்றுக்கிழமை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தேர் உற்சவமாகும்.

**திரு. C. இராசரத்தினம்**—யாழ்ப்பாணம் கச்சேரியில் கடமைபார்த்த இவர் தற்போது சிலாப டிஸ்திறிக்கோட்டுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

**திரு. W. E. பாபர்**—இவர் தற்போது திரு. ஸ்ரான்லி ஒபயசேகரா அவர்கள் பதவியினின்றும் நீங்கியது காரணமாகப் புதிய சுப்பிறீங்கோட்டுக் குற்றம் விசாரணை செய்யும் நீதியரசராக நியமனம்பெற்றிருக்கிறார்.

16-ல் 93—16 மணித்தியாலத்தில் ஓர் இந்தியன் சால் ஓட்டமாக 93 மைல் தூரம் ஓடினனும்.

சீனதேசத்து வெள்ளப்பெருக்கு—இப்பிரளயத்தால் 100,000 சனங்கள் இறந்துவிட்டார்களாம்.

**கிராமச்சங்கத் தலைவர்:-**

அல்லைப்பிட்டி: திரு. K. கைலாசபிள்ளை அவர்கள். வேலணை: திரு. இளவ்பாலசிங்கம் அவர்கள். புங்குடுதீவு: திரு. V. பசுபதிப்பிள்ளை அவர்கள். நயினாதீவு: திரு. M. வயித்திலிங்கம் அவர்கள். அனலைதீவு: திரு. சின்னப்பா அவர்கள். காரைதீவு: திரு. A. கனகசபை அவர்கள். நெடுந்தீவு: திரு. கொடிவேலு அவர்கள்.

# கலம்பகம்

மரணதண்டனை விதிக்கப்பெற்ற கைதிகள் தூக்கிலிடுவதற்குமுன் "பீடி" குடிக்கலாமெனச் சென்னை அரசினர் அனுமதியளித்திருக்கின்றனராம்.

o o o

பீ. ஏ. பரீட்சையில் தேறிய திரு. டி. எச். ராமநாத ஐயர் என்பவர் கொச்சிப் பொலிஸ் பகுதியில் பொலிஸ் உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டிருக்கிறாராம்.

o o o

இத்தாலியக் குடியேற்ற நாடுகளில் வெய்யிலின் உஷ்ணத்தால் 70 இத்தாலியர் உயிர்துறந்தனரென்றும் 2000 இத்தாலியர் வேலைசெய்வதற்கு உபயோகமற்றவர்களாகி விட்டனரென்றும் கூறப்படுகிறது.

o o

ஒக்ஸ்போட் நகரில் நடைபெறவிருக்கும் அகில உலகக் கல்விமகாநாட்டுக்கு இந்திய அரசினரின் பிரதிநிதியாக சேர் ஜோன் ஆண்டர்சன் என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறாராம்.

o o

இலங்கையில் சென்ற 1934-ம் ஆண்டு முடிவுடன் 824 பதிவுசெய்யப்பட்ட டாக்டர்கள் இருக்கிறார்களாம்.

o o o

சர்வதேச வாலிபக் கிறிஸ்தவர் சங்க நிருவாகசபையார் அடுத்த மகாநாட்டை இந்தியாவில் கூட்டுவதென முடிவுசெய்திருக்கின்றனராம்.

o o o

லண்டனில்நடைபெறவிருக்கும் கோடைகாலக் கலாபவனக் காட்சியில் இவ்வருடம் இலங்கை முதன்முதலாகக் கலந்துகொள்ளுமெனத் தெரிகிறது. லண்டனிலுள்ள இலங்கை வர்த்தகக் கமிஷனரின் புதல்வரான திரு. ஜஸ்டின் பீரிஸ் என்பவர் வரைந்திருக்கும் சித்திரங்கள் மேற்படி காட்சியில் வைக்கப்பட்டிருக்கின்றனவாம்.

o o o

அரசரின் பரிசு சம்பந்தமாக றக்பி என்னுமிடத்தில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகப் போட்டியில் 99 ஆண்களும் ஒரு பெண்ணும் கலந்துகொண்டனராம்.

o o o

மழையின்மைகாரணமாக தியத்தலவா என்னுமிடத்தில் தண்ணீர்ப்பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதாம்.

o o o

ஹைதரபாத் சமஸ்தான் பூராவிலுள்ள இந்து ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த விக்கிரகங்கள் யாவும் களவாடப்பட்டு விட்டனவாம்.

o o

காங்கேனியாவைச்சேர்ந்த பஹலமன்ன என்னுமிடத்தில் இளந்தாரிதேவாலகிரி உனகாஸ்வெலை என்னும் ஒருவர் கொலைசெய்யப்பட்டுப் பிரேதமாக வீட்டு விறாந்தையிற்கிடக்கக் காணப்பட்டார். இதுசம்பந்தமாக இளந்தாரிதேவா ஜயநேரிஸ் என்பவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறாராம்.

o o o

கொழும்புத்துறைமுகத்திலுள்ள ஒரு படகில் வேலைசெய்துவந்த ஒருவரின் மரணவிசாரணை சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. அவரது இருதயம் தேங்காய்ப் பருமனளவாகக் காணப்பட்டதால் அதைப் பாதுகாத்து வைப்பதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படுகின்றனவாம்.

o o o

பகதூர்புரி என்னுங் கிராமத்தில் நடைபெற்ற விவாக விருந்தில் சாப்பிட்ட 70 பேர் உயிர்துறந்தனர். ஓர் மரத்தின்கீழ் பருப்பை வேகவைத்தபோது, அதற்குள் ஒரு விஷப்பாம்பு விழுந்து இறந்ததே மரணத்துக்கு காரணமெனக் கூறப்படுகிறதாம்.

o o o

ஏராளமான பட்டாக்கத்திகள் செய்து அனுப்பும்படி ஒசாகா வியாபாரச் சங்கத்திற்கு அபிசீனியாவிலிருந்து அறிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

o o o

அகில இந்தியப் பத்திரிகைகாரரின் மகாநாடு ஆகஸ்டுமாதம் 3-ம் 4-ம் தேதிகளில் கல்கத்தாவில் நடைபெறுமாம்.

o o o

கம்பளையைச் சேர்ந்த ஜேக்கோவில் பீரிஸ் என்பவர் சட்ட விரோதமாகச் சாராயம் விற்பனைசெய்தாரெனக் குற்றஞ் சாட்டப்பட்டு 500 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றாராம்.

சலிகாதி என்னுங் கிராமத்திலுள்ள செல்வந்தரான திரு. தீஷ சந்திர மஜூம்தார் என்பவரை வழிமறித்து அவரது கண்களைப் பெயர்த்தும், தோலை உரித்தும், தலையை வெட்டியும், கொலை செய்தார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தவர்களில் 1-ம் எதிரியாகிய ஜப்பார் ஷேக் என்பவருக்கு மரணதண்டனையும், வேறு இருவருக்கு 10 வருடவீதச் சிறைத்தண்டனையும், இன்னொருவருக்கு 7 வருடச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பெற்றதாம்.

o o o

கொட்டவாவைச் சேர்ந்த டொன் மார்த்தேலிஸ் என்பவரும், அவரது மருகராகிய டொன் விமலசேன என்னும்சிறுவனும் தங்கள் வீடுகளில் திருட்டுச் சைக்கிள்களை வைத்திருந்தார்களெனக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பெற்றிருக்கின்றனராம்.

o o o

வருகிற அக்டோபர்மாதம் 4-ம் 5-ம் தேதிகளில் கொழும்பு றோயல் கல்லூரியின் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்படுமாம். o o o

சென்ற திங்கட்கிழமை இரவு கொழும்பிலிருந்து வதுளைக்குச் சென்ற புகைரதத்திற் பிரயாணஞ்செய்த ஓர் ஆங்கிலப்பெண்ணின் 30 ரூபா அடங்கிய பணப்பை காணமற் போய்விட்டதாம்.

o o o

லாகூரைச் சேர்ந்த மாலர்கோட்லா என்னுமிடத்தில் ஓர் இந்து ஆலயத்தில் தீபாராதனை நடக்கும்போது உண்டாகும் வாத்திய ஓசையால், பக்கத்திலுள்ள மசூதியில் வணக்கஞ் செய்வதற்கு இடையூறு ஏற்படுகின்றதெனக் கூறி 5000 முஸ்லிம்கள்வரை சேர்ந்து கலகஞ் செய்தனர். இவர்களில் 1000 பேர்வரையில் கைதுசெய்யப்பட்டனர். ஒரு முஸ்லிம் பொலிசாரின் குதிரையால் மிதிக்கப்பட்டு உயிர் துறந்தாராம். o o o

கொழும்பு—ஹவ்லக் டவுனில் சென்ற சனிக்கிழமை ஏற்பட்ட சச்சரவுகாரணமாக, டாக்டர் வீ. ஆர். ஷேக்மன் என்பவரிடம் வேலைபார்த்துவந்த ஜேம்ஸ் என்னும் வாலிபன் கத்தியினால் குத்தப்பட்டு அடுத்தநாள் வைத்தியசாலையில் உயிர்துறந்தானும்.

o o o

நீதிவிசாரணைச் சபையினர்முன் சாட்சியங்கொடுத்த ஒருவர், பெயரைக்குறிப்பிடாது சில நீதிபதிகள், கைலஞ்சம் வாங்குகிறார்களென்றும் இன்னும் பலவிதமாகவும் குறைகூறியதால், கடன்பட்ட – கைலஞ்சம்பெற்ற நீதிபதிகளின்பெயரைக் குறித்தனுப்பினால் தான் அவர்களை விசாரணைசெய்வதாகச் சட்டத்தலைவர் குறித்த சாட்சியங் கூறியவருக்குத் தெரிவித்திருக்கிறாராம்.

o o o

சென்ற 20-ந் தேதி பம்பாயிலிருந்து 100 மைல் தூரத்தில் சிறு பூமி அதிர்ச்சி காணப்பட்டதாம். இவ்விடத்தில் 1924-ம் ஆண்டிலும் 1934-ம் ஆண்டிலும் இவ்வித பூமி அதிர்ச்சி ஏற்பட்டதாம்.

o o o

சென்ற 20-ந் தேதி கொழும்பு யூனியன் பிளேசில் பொறளையிலுள்ள பஸ் கண்டக்டராகிய ஆர். எம். சைமன் என்பவர் தனது மோட்டார் பஸ்ஸில் குறிக்கப்பட்ட அளவுக்கு மேலதிகமாக 15 பேரை ஏற்றினாரெனக் குற்றஞ் சாட்டப்பட்டு 40 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றாராம்.

o o o

சூயஸ் கணவாய் வழியாக ஆபிரிக்காவிற்கு 120,000 இத்தாலியத் துருப்புகள் அனுப்பப்பட்டிருக்கின்றனவாம்.

o o o

இத்தாலியில் இறக்குமதி செய்யப்படும் ஜப்பானியத் துணிகளுக்கு இனிமேல் அதிகமான இறக்குமதிவரி விதிக்கப்படுமாம்.

o o o

பிரான்சுதேசத்தில் சம்பளம் பிடிப்பதை எதிர்த்து உயர்தர உத்தியோகஸ்தர்கள் ஆர்ப்பாட்டஞ்செய்ததால் 1000 பேர் வரையில் கைதுசெய்யப்பட்டிருக்கின்றனராம். o o

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின், வகைதெரிவான் கட்டே யுலகு.

சரித்திரப்பகுதி

# "இலங்கைச் சரித்திரக் கதைகள்"

[சுன்னுகம் மயிலணிச் சைவ வித்தியாசாலை ஆசிரியர் திரு. இ. தர்மலிங்கம் அவர்கள் எழுதியது.]

(பதிப்புரிமை ஆசிரியர்க்கே உரியது)

## III. விஜயன் இலங்கைக்கு அரசனுதல்

நீர்வள நிலவளங்களால் சிறந்து விளங்கும் இந்த இலங்கைத்தீவானது, அக்காலத்தில் பெருங் காடாயிருந்தது. இதன் வடபகுதியில் நாகரென்ருேர் சாதியினர் வசித்தனர். அவர்கள் சர்ப்பங்களை வணங்கிவந்தமையால் அப்பெயர் பெற்றனர். தென்பகுதியில் இயக்கர் என்று இன்னேர் சாதியினர் வசித்தனர். அவர்கள் இராக்கதகுலத்தைச் சேர்ந்தவர்கள். கருநிறமுடையவர்கள். விரும்பியபோது விரும்பிய உருவம்பெறக் கூடியவர்கள். நரமாமிசத்தையே உணவாகக் கொள்பவர்கள்.

இயக்கசாதியாரில் ஒருவகுப்பினருக்குக் குவேனி என்ற ஓர் பெண் தலைவியாக இருந்தாள். அவள் ஒரு அழகிய தாமரைத் தடாகத்துக்கருகேயுள்ள குகையில் சீவித்துவந்தாள். அவள் தன் தூதுவர்கள்மூலம் நரைப்பிடித்து உண்டுவருவது வழக்கம். தூதுவர்களும் பலப்பல வடிவங்களுடன் கடற்கரைக்குச் செல்வார்கள். அங்கு வழிதப்பிவரும் கடற்பிரயாணிகளை மயக்கிக் குவேனியிடம் அழைத்துச்செல்வார்கள்.

ஒருநாள் தூதுவனொருவன் நாயுருவெடுத்துக்கொண்டு விஜயன் முதலாயினேர் தங்கியிருந்த இடத்துக்குச் சென்ருன். பலநாட்களாகப் பட்டினி இருந்த அவர்கள் நாயைக்கண்டதும் மனமகிழ்ந்தனர். நாய் அங்கேவந்தபடியால் சமீபத்தில் சனங்கள் குடியிருக்கவேண்டுமென எண்ணினர். ஆகையின் விஜயன் தன் தோழர்களில் ஒருவனை அந்நாய்க்குப் பின் சென்று சனங்களிருக்குமிடத்தை அறிந்து உணவுபெற்று மீளும்படியாகக் கூறினுன். அவனும் நாயைத் தொடர்ந்துசென்ருன்.

அந்த நாய் குவேனி இருக்கும் குளக்கரைக்குச் சென்றது. நாயின்பின்னே சென்றவன் குளத்தினழகைக்கண்டு மயங்கினுன். தன் ஆபாசத்தைத் தீர்த்துக்கொள்வதற்கு அதிலிறங்கி ஸ்நானம் செய்தான். பின் அங்கு வளர்ந்த தாமரையின் கிழங்குகள் பலவற்றையுண்டு தண்ணீருமருந்திக் கரையேறினுன். இப்படியிருக்குஞ் சமயத்தில் குவேனி என்னும் அந்த இயக்கப்பெண் அவனைப் பிடித்துச்சென்று அடைத்துவைத்தாள்.

உணவுதேடச்சென்ற தன்தோழன் அதிகநேரமாயும் மீண்டுவரவில்லையே என விஜயனும் மற்றவர்களும் விசனப்பட்டார்கள். தாம் ஒருபோதுமறியாத அந்நியநாட்டில் அவனுக்கென்ன நிகழ்ந்ததோ என ஐயுற்று அவனைத் தேடுவதற்காக ஒருவன் புறப்பட்டான். அவன் தன் தோழனினதும் நாயினதும் அடிச்சுவட்டைப் பின்பற்றிச் சென்ருன். கடைசியாக அவனும் குளக்கரையை அடைந்தான். குளத்தில் அவனுமிறங்கி நீராடித் தாமரைக் கிழங்குகளையுண்டு பசியாறினுன். அந்தநேரத்தில் குவேனி அவ்விடம்வந்து அவனையும் பிடித்துக் குகைக்குள் அடைத்துவைத்தாள். இப்படியே ஒருவரை ஒருவர் தேடிச்சென்று எழுநூறுபேரும் குவேனியின் கைப்பட்டனர்.

தன் தோழர்களில் ஒருவரும் திரும்பிவராமையைக்குறித்து விஜயன் பலவாருக நினைந்து புலம்பினுன். பின் ஒருவாறு மனத்தெளிந்து அவர்களைத் தேடப் புறப்பட்டான். அவனும் குளக்கரையை யடைந்தான்.

விஜயன் அதிகம் அழகுவாய்ந்தவன். கண்டோர் மனதைக் கவருந் தன்மை உடையவன். அவனின் அழகைக்கண்ட குவேனி அவனில் மோகங்கொண்டாள். உடனே தன் அவலட்சண உருவத்தைவிட்டு ஓர் அழகிய கன்னிகையைப்போல் உருவங் கொண்டாள்.

கன்னிகையாக உருவங்கொண்ட குவேனி விஜயனின் முன்புவந்தாள். வந்து தன்னை விவாகஞ்செய்துகொள்ளும்படியாக இரந்துகேட்டாள். அப்படி விவாகஞ்செய்தால் அவனுடைய தோழர்களை மீட்டுக்கொடுப்பதாகவும், அத்தேசத்துக்கு அவனை அரசனுக்குவதாகவும் வாக்குப்பண்ணினுள். அவள் தன்னுயிர்த் தோழர்களை மீட்டுக்கொடுப்பதாகச் சொல்லிய மாத்திரத்தே விஜயனும் அவளின் எண்ணத்துக்கிசைந்தான்.

பின்பு குவேனி அவ்வெழுநூறு பேரையுங் குகையிலிருந்து வெளிப்படுத்தி விஜயன்முன் கொண்டுபோய் விட்டாள். விஜயன் தன் தோழரைக் கண்டதும் பேருவகைகொண்டான். குவேனியின் இராச்சியத்திற்கு விஜயன் அரசனுனன். தோழர்கள் அமைச்சர்களாயினர்.

சிலகாலஞ்செல்லக் குவேனியின் சூட்சியினுல் இயக்கரின் தலைவர்களெல்லோரையும் விஜயன் கொன்று இலங்கை முழுவதற்கும் அரசனுனன். குவேனிக்கு ஒரு ஆணும் ஒரு பெண்ணுமாக இருபிள்ளைகள் பிறந்தார்கள்.

இப்படியாக, விஜயன் அரசியற்றிவரும் நாளில் ஒருநாள் பின்வருமாறு ஆலோசிக்கலாயினன். "மக்களிலெல்லாம் அரசன் மேம்பட்டவன். யானும் ஒரு அரசகுமாரன். என்னே என் நிலைமை! இழிகுலத்தவளான ஒரு பெண்ணை என் மனைவியாகக்கொண்டேன். அந்தோ! என் உயரிய குலத்துக்கு இழிவு தேடிவிட்டேனே. இப்பொழுதே இப்பெண்ணை நான் துரத்திவிடுகின்றேன். இனி ஒருகணமும் அவளை என் தேவியாக வைத்திருக்கமாட்டேன்."

இப்படியாக ஆலோசித்துக்கொண்டு தன் அரண்மனைக்குச் சென்ருன். அங்கு குவேனியைப்பார்த்து; "பெண்ணே! உன்னைத் தேவியாகவைத்துக்கொள்ள என் மனம் ஒருப்படவில்லை. நீயோ இழிகுலத்தவளான இயக்கப்பெண். நானே ஒரு அரசன். ஆதலின் இனிஒருபோதும் உன்னை என்னுடன் வைத்துக்கொள்ளமாட்டேன். இந்நிமிடமே என் அரண்மனையை விட்டுச் சென்றுவிடு" எனக்கூறினுன்.

குவேனி பலவாறு இரந்துநின்ருள். நின்றும் என்ன பயன்? விஜயன் தன் எண்ணத்தை மாற்றினுனல்லன். ஆகையினுல் குவேனி தன் பிள்ளைகளுடன் அரண்மனையை விட்டுப் புலம்பிக்கொண்டு சென்ருள். சென்ற அவர்கள் காட்டிலே தங்கிக் கந்தமூலங்களையும் காய் கனிகளையும் உண்டு சீவித்துவந்தார்கள்.

குவேனியினதும் பிள்ளைகளினதும் செய்தி இவ்வாறிருக்க; விஜயன் பாண்டிய மன்னனுக்குத் தூதனுப்பி அவன் மகளாகிய விஜபாயியை வரவழைத்து விவாகஞ்செய்தான். அவளுடன் வேறு எழுநூறு பெண்களையுமழைப்பித்துத் தன் தோழர்களுக்கு மணம் முடித்துவைத்தான். பின் பல ஆண்டுகளாக நீதி தவருது அரசியற்றிப் பிள்ளையில்லாது காலன்கைப்பட்டான். பிள்ளையில்லாதிறக்கவே இந்தியாவிலிருந்த அவன் தம்பியின் மகன் பந்துவாசன் இலங்கைக்கு அரசனுனன். (தொடரும்)

## திருவனந்தபுரத்தில் அதிசயமான வைத்தியர்

மத்திய திருவனந்தபுரத்தில் காடக்கல் என்னுமிடத்தில் ஓர் அதிசயமான வைத்தியர் சிலமாதங்களாகச் சிகிச்சைசெய்துவருகிருராம். ஓரிடத்தில் ஓலையால் வேயப்பெற்ற நிழலில் ஓர் கல்வியறிவில்லாத பெண் நிற்கிருளாம், இந்தப் பெண்ணிடத்தில், விரும்பியவர்கள் ஒருரூபா கொடுத்தால் அங்கு வந்திருப்பவர் என்ன விஷயமாக வந்திருக்கிருர் எனவும், அதற்கேற்ற புத்திமதிகளும் ஓர் அசரீரி வாக்கால் கூறப்படுகிறதாம். அந்த வாக்கு யாரிடத்திருந்து வருகிறதென்பது அறியமுடியாதிருக்கிறதாம். அருகாமையில் ஒருவருமில்லையாம் இதைத் தரிசிப்பவர்களில் அநேகர் நோயாளராம். இறந்த ஓர் வைத்தியரின் ஆவியே இவ்விதமாகக் கண்களுக்குப் புலப்படாது கூறிவருகின்றதென்பதே இதைத் தரிசிப்போரின் நம்பிக்கையாம். சென்றகிழமை பத்திரிகை விஷயமாக ஒருவர் கதைக்கவிரும்பியபோது பத்திரிகை முயற்சி சித்தியாகுமென்று வாக்குக் கிடைத்ததாம்.

## அல்வாய் தெற்கு ஹரிஜன வாலிப சங்கத்தின் ஆண்டு நிறைவுவிழா.

நிகழும் யுவஞூ ஆடிமீ 1ம் 2ம் 3ம் தேதிகளில்,ஷெவிழாஇச்சங்கத்தாரது அல்வாய் தெற்கு விக்நேஸ்வர வாசிகசாலையில் சிறப்புற நடைபெற்றது. அங்குவந்த அன்பர்களுக்குச் சந்தனம் பன்னீர் முதலியன வழங்கப்பட்டன.(16-7-35) செவ்வாய்க்கிழமை இரவு 7-30 மணியளவில் கரவெட்டி திருவாளர் க.மயில்வாகன பண்டிதரவர்களின் தலைமையில் மேலைப்புலோலி வித்துவான் திரு.நடராசபிள்ளை அவர்களால்"இன்ப துன்பங்கள்" என்னும் பொருள்பற்றியும், வதிரி சி. வல்லிபுரம ஆசிரியா அவர்களால் "எடிசனும் வாசிகசாலையும்" என்னும் பொருள் பற்றியும் சிறந்த சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

(17-7-35) புதன்கிழமை மாலைப் பதியுறை அந்தணர் குலதிலகர் மகாவித்துவான நவநீத கிருஷ்ணபாரதியார் அவர்கள் தலைமையில் திருவாளர் ம. வே. மகாலிங்கசிவம் பண்டிதர் அவர்கள் "அருட்பா" என்னும் பொருள் பற்றியும், தலைவர் அவர்கள் "சமயவாழ்வு" என்பது பற்றியும் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர்.

(18-7-35) வியாழக்கிழமை வதிரி திரு. கா. சூரன் அவர்கள் தலைமையில், அல்வாய்தெற்கு திரு. மு. செல்லையா உபாத்தியாயர் அவர்களால், தலைவர்கள், சொற்பொழிவாளர்கள் முதலியோர்க்கு நன்றி கூறப்பட்டது. அரிய வாழ்த்துப்பாக்கள் படிக்கப்பட்டன. 3-ம் நாள் அல்வாய் வடக்கு திரு. க. முருகேசு ஆசிரியர், வதிரி திரு. சி. வல்லிபுரம் ஆசிரியர், திரு. தா. சா. தம்பிமுத்து ஆசிரியர், திரு. பெ. அண்ணுசாமி ஆசிரியர் ஆகியவர்கள் குறிப்புரை கூறத தேவாரபாராயணத்துடன் விழா இனிது நிறைவுற்றது. —கடிதம்.


பாருங்கள் என்ன அற்புதமான மேனி!





ஏன் உங்கள் மேனியையும் அவவிதம் அழகு செய்யக்கூடாது?

மிருதுவான மேனியே அழகாயிருக்குமென்பது படக்காட்சியிற் தோன்றும் பெண்களுக்குத் தெரியும். முகத்தின் அழகு மேனியின் அழகைப் பொறுத்தது. தங்களுடைய வதனத்தைப் பரிபூரணமாக்குவதற்கு ஸினிமா மாதர்கள் நாள்தோறும் லக்ஸ் டோயிலெட் ஸோப்பையே உபயோகிக்கிருர்கள். உண்மையில் 713 கியாதிபெற்ற ஸினிமா பெண்களில் 705 பேர் இந்த நறுமண ஸோப்பையே உபயோகிக்கிருர்கள்.

உங்களது மேனியையும் இம்மாதிரியாகக் கவனிக்கவேண்டும். இன்றே லக்ஸ் டோயிலெட் ஸோப்பை உபயோகிக்கத் தொடங்குங்கள்.

உங்களது வியாபாரியிடத்திற் கிடைக்கும்.




LUX
TOILET SOAP

X-LTS. 314-50    LEVER BROTHERS LIMITED, PORT SUNLIGHT, ENGLAND

சிறுவர் பகுதி

# சேர். பிரான்சிஸ் டிறேக்

சி. த.

**சேர்** பிரான்சிஸ் டிறேக் என்பவர் இங்கிலாந்து தேசத்திற் கீர்த்தி வாய்ந்து விளங்கிய தளபதியாயிருந்தார். ஆறாவது எட்வேட் அரசர் காலத்துப் பிற்காலத்திலே இவர் ஓர் சிறு பையனாக விளங்கினார். இவருடைய தந்தையார் கடற்படைவீரர்களுக்கு, "ஜெபம்" வாசிக்கு முத்தியோகத்தமர்ந்திருந்தார். தகப்பனாரோடு கப்பலிலேயே சதா தங்கியிருந்தமையால் இவருக்குச் சிறு வயதிலேயே யுத்தப்பிரியம் ஏற்பட்டுவிட்டது. மேரி ராணி சிம்மாசனமேறியதும் இவருடைய தகப்பனார் தனது பதவியையிழந்தார். ஆகவே பிரான்சிஸ் டிரேக் என்பவர் பிரான்சோடும், ஒல்லாந்தோடும் வியாபாரஞ்செய்த ஒரு கப்பலிலே வேலையிலமர்ந்தார். அந்த வேலை மிகவும் கடுமையாயிருந்தது. ஆனாலும் கப்பல் வாழ்க்கை டிரேக் என்பவருக்கு நல்ல தேசபலத்தைக் கொடுத்தது. எலிசபெத்ராணி சிம்மாசனமேறியதும், டிரேக்கினுடைய தகப்பன் கென்ற் மாகாணத்திலுள்ள ஒரு சிறிய கிராமத்துக்குக் குருவாக நியமிக்கப்பட்டனர். டிரேக்கினுடைய எசமானும் இறந்துபோனார். கப்பலும் டிரேக்கினுடைய கைவசம் வந்தது. இந்தக்கப்பல்மூலம் சிறிதுகாலம் டிரேக் வியாபாரம் நடாத்தினார். ஆனால் ஸ்பானிய தேசத்துமன்னன் தனது நாட்டுத் துறைமுகங்களிலே ஆங்கிலேயருடைய கப்பல்கள் வராதபடி தடுக்க, டிரேக், ஜோன்ஹோக்கின்ஸ் என்பவரின்கீழ் வேலைக்கமர்ந்து, ஒரு துணிகரமான கடல்சஞ்சாரியாகவும், அடிமை வர்த்தகனாகவும் ஆனார்.

ஒருமுறை ஹோக்கின்ஸ் என்பவருடைய கப்பல்கள், ஒரு புயற்காற்றினால், மெச்சிக்கோக் குடாக்கடலிலுள்ள ஸ்பானியருக்குச் சொந்தமான ஒரு துறைமுகத்திற்குள்ளே தள்ளப்பட்டன. ஸ்பானியர் அக்கப்பல்களைத்தாக்கி, அரைவாசிக்குமேற்பட்ட கப்பல்களை நாசமாக்கினர். அன்று தொடக்கம் ஹோக்கின்சும் டிரேக்கும் ஸ்பானியர்மீது கொஞ்சமாவது இரக்கம் வைப்பதில்லையென்று மனவுறுதி கொண்டனர்.

டிரேக்கினுடைய சீவியம் முழுவதும் துணிகரச்செயல்கள் நிரம்பியவை. அவை முழுவதையும் தொகுத்துக் கூறின் அவை ஓர் பெரும் புத்தகமாகும். அச்செயல்களுள் இரண்டொன்றை ஈண்டுதருவாம்.

1572-ம் ஆண்டு டிரேக் என்பவர் பிளிமத் துறைமுகத்தினின்றும், இரண்டு கப்பல்களுடனும், நன்றாகப் பயிற்றப்பட்ட எழுபத்துமூன்று வீரரோடும் புறப்பட்டார். இங்ஙனம் புறப்பட்டதன் நோக்கம்யாதெனின், அமரிக்க கடற்கரையிலே ஸ்பானியருக்குச் சொந்தமானதோர் துறைமுகத்தைப் பிடிப்பதேயாம். அங்கு ஸ்பானியர் தமது நாட்டுக்குக் கொண்டு போகும்பொருட்டு பொன் சேர்த்து வைத்திருந்தார். இந்தப் பொன்னை யபகரிப்பதும் டிரேக்கினுடைய நோக்கமாகவிருந்தது.

ஆறுவாரம் பிரயாணஞ் செய்தபின்பு டிரேக் அமரிக்ககடற்கரையை யடைந்தார். அங்கேயவர் ரூன்ஸ் என்னும் இன்னொருவரைச் சந்தித்தார். எல்லாம் ஆயத்தமானதும் கப்பல்களெல்லாம் அத்துறைமுகத்தை நோக்கிச்சென்றன. சென்று சிறிதுதூரத்திலே தங்கிநின்றன. சந்திர வெளிச்சத்தினுதவியைக்கொண்டு கப்பல்கள் கரையைநோக்கிக் கிட்டிச்சென்றன. கப்பல்கள் கரையைக் கிட்டியதும், கப்பலிலிருந்த வீரர்கள் யாவரும் கரையிலிறங்கிப் பீரங்கிகள் சேர்த்துவைக்கப்பட்ட இடத்துக்குப் போய்ப் பீரங்கிகள் எல்லாவற்றையும் கடலுக்குள்ளே யுருட்டிவிட்டார்கள். பின்பு டிரேக் தன்னுடைய ஆட்களை இரு பிரிவாகப் பிரித்து, தீவர்த்தி வெளிச்சத்தோடும், யுத்தப்பறை முழக்கத்தோடும் வீதிவழி அணிவகுத்துச்சென்றார். நகரத்தின் மத்தியிலே ஸ்பானிய பட்டாளம் ஒன்று இவர்களையெதிர்த்தது. துப்பாக்கிக் குண்டுகளையும் அம்புகளையும் சொரிந்துகொண்டு ஆங்கிலேயர் ஸ்பானியரைத் தாக்கி, வாளினாலும் ஈட்டியினாலும் அவர்களைத் தோற்று ஓடச்செய்தனர். பின்பு டிரேக்கும் அவரது சகாக்களும் தேசாதிபதியினுடைய அரண்மனையை யடைந்தனர். அங்கே 10 அடி அகலமும், 12 அடி உயரமும் 70 அடி நீளமுமுடைய வெள்ளிச் சலாகைக்குவியலைக் கண்டார்கள். ஆனால் வேறெவ்விடத்தோ பொன்னிருக்கும் என்பது டிரேக்குக்குத் தெரியும். ஆகவே இந்த வெள்ளிக்குவியலை எடுக்காது பொன்னை நாடிச் செல்வாராயினர்.

திடீரென ஒரு பெரும் புயலும் மழையும் வந்து வில் நாண்களையும் துப்பாக்கிகளையும் நனைத்து உபயோகமற்றதாக்கிவிட்டன. ஸ்பானியர் தங்கள் திரவியத்தைக் காப்பாற்றும்பொருட்டு வந்தனர். தனது சைனியத்தை நடாத்திக்கொண்டு சென்ற டிரேக் காலில் ஓர் காயமடைந்ததனால் கீழே விழுந்தார். உடனே அவரது யுத்தவீரர்கள் அவரை வள்ளத்தில் ஏற்றிச் சென்றனர். இம்முறை டிரேக் அனுகூலமடையவில்லையாயினும், பிந்திய முறைகளில் அனுகூலமடைந்தார். ஸ்பானியர் இவருக்கு மிகவும் பயந்தார்கள். இப்படியே பலவிடங்களுக்கும் சென்று டிரேக் பொன் சேகரித்துக்கொண்டு இங்கிலாந்துக்குத் திரும்பினார்.

உலகத்தைச்சுற்றி யாத்திரை செய்த ஆங்கிலேயருள் டிரேக் என்பவரே முதலானவர். இவ்வுலகச் சுற்றுப்பிரயாணத்தில் இவர் அடைந்த வெற்றிகள், தோல்விகள், விபத்துக்கள் முதலியவற்றை விரித்தெழுதப்புகின் அது ஒரு பெரு நூலாகும். ஸ்பானிய தேசத்து மன்னன் ஆங்கிலேயரைத் தாக்குதற்கெனத் தயாரித்த "ஆமடா" என்னும் கப்பற்படையை இந்த டிரேக் என்பவரே நாசமாக்கினார். இது நிகழ்ந்தது 1880-ம் ௵ என்ப. பின்பு இவருக்கு எலிசபெத் அரசியால் "நைற்" பட்டம் வழங்கப்பட்டது. பிற்காலம் இவர் பிளிமத் நகரிற் தேசாதிபதியாயிருந்தார். அங்ஙனம் இருந்த காலத்தில் நாட்டுக்கு நன்மை பயக்கும் காரியங்கள் பல செய்துவந்தனர்.

பின்னுமொருமுறை, தனது பழைய நண்பனாகிய ஹோக்கின்ஸ் என்பவரோடு, அமரிக்காவுக்கு, ஒரு திரவியக் கப்பலைப் பிடிப்பதற்கு டிரேக் போக நேர்ந்தது. இவர்கள் அங்கு போவதற்கிடையில், அக்கப்பல் அவ்விடத்தை விட்டு நகர்ந்து விட்டது. எனவே யிவர்கள் துறைமுகங்களைப் பிடிக்க முயன்றனர். ஆனால் இம்முறை துறைமுகங்கள் நன்கு அரண் செய்யப்பட்டிருந்தமையால் ஆங்கிலேயருடைய முயற்சி பலிக்கவில்லை. பின்பு ஹோக்கின்ஸ் என்பவர் சுரநோய் கண்டிறந்தனர். டிரேக் என்வருக்கும் சுரநோய்கண்டது. 1589-ம் ஆண்டு மாசிமாதம் 8-ந் திகதி டிரேக் மண்ணுலகவாழ்வை நீத்தனர்.

டிரேக் என்பவர் இங்கிலாந்துக்கு அருஞ்சேவைகள் பலவும் புரிந்தார். புரொட்டெஸ்டான்டு மதத்தினர்க்கு விரோதமாக உபயோகிக்கவிருந்தபணத்தை ஸ்பானியரிடமிருந்துதான் பிடுங்கியது கடவுளுக்குகந்த தொண்டென அவர் கருதினார். டிரேக் புரொட்டெஸ்டான்டு மதத்தைச் சார்ந்தவர். கோயில்களை யிடிக்க இவர் ஒருபோதும் சம்மதங் கொடுத்திலர். தான் வெற்றிகொண்டவர்களை ஒருபோதும் கொன்றிலர். ஒரு ஸ்திரீயையாவது நிராயுதபாணியையாவது கொலைசெய்யப்படாதெனத் தனது ஆட்களுக்குக் கடும் பிரமாணம் விதித்திருந்தனர்.

ஸ்பானியர் இவரைப் பகைத்திருந்தபோதிலும், இவரது துணிவையும் கெட்டித்தனத்தையும் வியந்தார்கள். அக்காலத்திலே ஐரோப்பாவிலே சுத்தருணியமாயிருந்த சீவதயை யிவரிடத்தே காணப்பட்டமையினால் இவரை ஸ்பானியர் பெரிதும் மதித்தார்கள். தாய்நாட்டன்பு, சீவகாருண்ணியம், அறப்போர்புரியுமியல்பு, இராசவிசுவாசம்முதலிய சுகுணங்கள் இவர்மாட்டுப் பெரிதும் அமைந்து விளங்கின. அஞ்சாமை யிவரிடத்து ஒரு அணிகலனாக விளங்கிற்று. யுத்த தந்திரத்திற் சிறந்த ஞானமும் அனுபவமுமுடையராய் விளங்கினர்.


விலை நிதானம்! நயம் சரக்கு!

எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கெங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்
மூ. குமாரசாமிப்பிள்ளை கடையில்

நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,
கயிற்றுவகைகளும், நூல், வாளியும்
பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்

விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.

திறம் இங்கிலீஷ்மேக்குடைகளும், யப்பான்குடைகளும்
குறைந்த விலையில் ஏராளமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம்
தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மூ. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்.

(22) 19-2-34.


## மணித்திரள்.

### வெற்றியும் தோல்வியும்

ஒருவன் வெற்றியடையத் தொடங்கினால் வெற்றியே வந்துகொண்டிருக்குமென எண்ணுவது பிழையாகும். தோல்வியடைந்தே வெற்றிபெற வேண்டும். மனிதர் பெற்ற அனுபவங்களெல்லாம் பல்முறை தோல்வியடைந்து பெற்றவைகளே. நுண்ணறிவுள்ளோர் விட்டபிழைகள் அவர்கள் தமது கடமைகளை மிகத் திறமையுடன் பார்க்கச் செய்த தூண்டுகோல்களாகும். மேலும் அவர்கள் பிழைகள் விட்டுத் திருத்தினமையால் மிக்க சாக்கிரதையாகவும், அடக்கமுடையராகவுமுளர்.

* * *

### சிறிதாயினும்

நன்னோக்கத்துடன் உரியமுறையில் நாம் செய்யும் சிறிய தொண்டுகளும் பெரிய நன்மைகளாகும். "இது ஓர் அற்பகாரியமென்று அசட்டை பண்ணிச் சிறு விஷயங்களைக் கவனியாது விடுவதால் பெருந்தீமைகள் நமக்கு வந்தெய்துகின்றன. சிறிய நன்மைகளையும் நாம் விழிப்பாக விருந்து காலம் வாய்த்த போது செய்யவேண்டும். சிறியபிராணிகட்கும் தீங்கிழைக்காது நாம் எவ்வளவு சாவதானமாக இருக்கவேண்டும்.

* * *

### வார்த்தைகள்

நாம் பேசும் வார்த்தைகள் விசேஷமற்ற அற்பகாரியங்களல்ல. அவைகள் கண்களும் பற்களுமுடைய உயிருடைய பிராணிகள். நாம் பேசும் வார்த்தைகள் எங்கள் எண்ணங்களின் தீர்ப்புகள். எமது சன்மார்க்கத்தைக் காப்பாற்ற வேண்டில் நாம் பேசும் வார்த்தைகள் களங்கமற்றனவாக வேண்டும். பிழையாகவும், வரையறுப்பில்லாமலும் பேசுவது பெரிய குற்றமென்பது ஒருவாறாக, அது ஆத்மாவினையும் மாசுடையதாக்குகின்றது.


## NOTICE OF SALE.

### விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 641 ம் இலக்க வழக்கில் 1935ம் ௵ ஆடிமீ 17-ந் திகதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1935ம் ௵ ஆவணிமீ 21-ந௳ புதன்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

தும்பளை 1. சின்னத்தம்பி-வயித்திலிங்கமும், 2. பெண் செல்லமுத்துவும் வழக்காளிகள்.

வல்லுவேட்டித்துறை 1. நாகமுத்து-கனககுந்தரமும், 2. பெண் சிவகாமிப்பிள்ளையும் எதிராளிகள்.

ஆதனங்கள்

1. வல்லுவெட்டித்துறை இறை முதிரைக்கட்டையடி நிலபபரப்பு $12\frac{1}{2}$. இதில் $\frac{1}{8}$ பங்குக்கு அளவின்படி சிந்தமான நிலப்பரப்பு 1. குளி $11\frac{6}{32}$ல் 1ம் நெம்பர்த் துண்டுக்கு சிந்தமான குளி $13\frac{1}{2}$. எல்லைகிழக்கு கணபதிப்பிள்ளை பெண் தேவகுஞ்சாத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு சபாபதிப்பிள்ளை-மயில்வாகனத்துக்குடைய ஆதனம். மேற்கு சுப்பிரமணியம் பெண் முத்துவுக்குடைய ஆதனம். தெற்கு ஒழுங்கை முகப்புமகணபதிப்பிள்ளை பெண் தேவகுஞ்சாத்துக்குடைய ஆதனமும், இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் தென்னைகள் கல்வீடு அடுக்களை முழுவதும்.

2. மேற்சொல்லிய ஆதனத்தில் 4-ம் நெம்பர்த் துண்டுக்குக் குளி $5\frac{1}{4}$. எல்லைகிழக்கும் வடக்கும் ஒழுங்கை. மேறகு கைஒழுங்கை. தெற்கு கணபதிப்பிள்ளை பெண் தேவகுஞ்சாத்துக்குடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் தென்னைகள் மாமரங்கள் முழுவதும்.

புலோலிகிழக்கு
பருத்தித்துறை
20–7–35

S. C. Kanagasabai,
கொம்மிஷனர்.

(14) 28-7-35


குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி, கணமேயுங் காத்த லரிது.

## ஐயவினுவுக்கு விடை

[திரு. சி. வல்லிபுரம், தேவரையாளிச் சைவவித்தியாசாலை, வதிரி.]

சென்ற 21-7-35-ல் வெளிவந்த ஈழகேசரியில் இடைக்காடு திரு. சு. நாராயணபிள்ளை அவர்கள் எழுதிய ஐயவினுக்களைக் கண்டோம். நுணுக்கத்துள்மேல் நுணுக்கம்வாய்ந்த அவை, ஐயவினுக்களாகத் தோன்றவில்லை. எனினும் அவர்கள் எழுதியவாறு ஐயவினுக்களாகவே வைத்து ஆராய்வாம்.

குறித்த உரையாசிரியர்கள் இருவர் கருத்திலும் பொருண்முடிபு வேறுபாடு சிறிதே உளதெனினும், பின்னை அவர்கள் கருத்துமாறு பெரிது மமைந்த சொன்முடிபு வேறுபாட்டால் வித்துவான் அவர்களின் உரையைக் கற்ற மாணுக்கர்கள் உவமைத்தொகை என்று கொள்ளுந் தொடரைப் பண்டிதர் அவர்களின் உரையைக் கற்ற மாணுக்கர்கள் பண்புத்தொகை என்றே கொள்வார்கள்.

பின்னை அவர்கள் ஆராய்ச்சிக்கெடுத்த நான்கு தொடர்களில் வித்துவான் அவர்கள் கருத்தின்படி முதலாவது எழுவாய்த் தொடர். இடையிரண்டும் உவமைத்தொகை. நான்காவது பண்புத்தொகை. பண்டிதர் அவர்கள் கருத்தின்படி நான்கும் பண்புத்தொகை. இவற்றுள் நான்காம் தொடரிலே இருவர் கருத்தும் ஒத்திருத்தல் வெளிப்படை. இடைநின்ற உவமைத்தொகை இரண்டினையும் "பின்மொழி நிலையலாகிய உவமைத்தொகை" என்றே வித்துவான் அவர்கள் கூறுதலின், அவை உருவக முமாமென்பது அவர்களுக்கும் கருத்தேயாம், ஆகவே அவற்றினும் இருவர்க்கும் கருத்தொற்றுமை யுண்டு. எனவே "மனமலர்" எனனும் ஒரு தொடரிலேயே அவர்கள் இருவரும் மாறுபட்டுள்ளனரென்பது பெறுப்படும்.

உவமையிலும் பார்க்க உருவகத்தின் கண்ணேயே உபமேயப்பொருட்குச் சிறப்புக் கூடுதலால், அப்பொருடு இனிதுணர்ந்து உவமையாகவும், உருவகமாகவுங் கொள்ளக்கிடக்கும் "கைத்தலமலர்" "கண்மலர்" என்னும் இரு தொடர்களையும் உருவகம் என்று கூறிய பண்டிதர் அவர்கள் உரை சிறந்து விளங்குதலுங் காண்க.

இனி தாம் உருவகமெனக்கூறிய நான்கு தொடரினையும் "தலைதடுமாற்ற உவமையின்பாற்படுத்தினுமாம்" எனப் பண்டிதர் அவர்கள் பட்சாந்தரமாகக் காட்டியபடி முதன் மூன்று தொடருந் தலைதடுமாற்ற உவமையாகக்கொள்ள இடந்தராமைபற்றி "கருணைநீர" என்னுந்தொடர் அவ்வாறுகொள இடந்தராமையால் அவை இழுக்காக, என்னை! எமது யாழ்ப்பாணத்திலே "மதுரைப் பண்டிதர்" முதலாம் பெரும் பட்டங்களைப் பெற்றவர் பலர் குடத்துள் விளக்கென இருப்பவும் ஆண்டிற் சிறியரும் ஆக்கும் வன்மையிற் பெரியருமாகிய எமது பண்டிதர் அவர்கள் குன்றிலிட்ட விளக்கென நின்று ஆசிரியவுலகத்தும் பத்திரிகை உலகத்துஞ் சுகமுறுதலால், சோவினல் நோக்கு இச்சிறு பிழையானது மதிக்கண் மறுவெனக் கொள்ளப்படுமேயன்றி என்னப்படாதாகலின.

"கருணைநீர" என்பதற்கு வித்துவான் அவர்களின உரையிலே ,"அருளாகியநீர" எனக் கூறப்பட்டிருப்பவும் அஃது உருவகமன்றென்னுந் தங்கொள்கைக்கேற்ப "அருள்மயமாகியநீர" என வித்துவான் அவர்கள் கூறியதாகக் குறித்த பிள்ளை அவர்கள் எழுதிவிட்டு அத்தொடரின்கண் உருவகவணியில்லை என மறுத்தனர், இம்மறுப்புப் பொருந்தும்மேற் கொள்க.

2-ம் வினுவின் (அ) என்னும் பிரிவில், "கைத்தலமலா; கண்மலா: இவை உவமைத்தொகையா? பண்புத்தொகையா?" என வினுவியவர்தாமே (ஆ) என்னும் பிரிவில் "இத்தொடர்களில அமைந்த அணி உவமையணியா? உருகவணியா?" எனவும் வினுவல் கடாவன்மையறிக.

## கிராதார்ச்சுனீயம்.

1936-ம் ஆண்டிற்குரிய
ஸிரேட்டபாடசாலைத்
கிராதாப்பத்திர வகுப்பிற்குரியது.

விலை சதம் 60.

தனலக்குமி புத்தகசாலை,
சுன்னுகம்

கதைப்பகுதி.

# உத்தம மனைவி.

(போன். குமாரவேற்பிள்ளை.)

(௪)

ஒரு ஞாயிற்றுக்கிழமை நடுப்பகல்; ஏரம்பமூர்த்தி இருவரை அழைத்துக்கொண்டு தம் இல்லம் புக்கனர். இருவரில் ஒருவர் பிரசித்த நொத்தாரிசு அருளம்பலபிள்ளை, மற்றவர் ஆலூர் மாணிக்கமுதலியார். ஏரம்பமூர்த்தி உள்ளே நுழைய இவர்கள் இருவரும் வெளிவிறுந்தையில் உள்ள மேசையின் அருகேயிருந்தனர். நொத்தாரிசு அருளம்பலபிள்ளை ஏதோ எழுத்துவேலை செய்யத் துவங்கினர்.

உள்ளே சென்ற ஏரம்பமூர்த்தி தன் மனைவி மனோன்மணியை அழைத்து, "நீ உன்னுலியன்ற உதவியைச் செய்வதாகச் சொன்னுயல்லவா? அதனை இன்று செய்ய ஏதாவது தடையுண்டா?" என்றுர்.

"உச்சிமீது வானிடிந்து வீழ்வதாயினும் சொன்னசொற் றவறேன்" என்றுள் மற்றொருத்தியை மணக்கத் தான் உடன்படலே தன்னுலியன்ற உதவியெனக் கருதியுள்ள மனோன்மணி.

"உங்களூரில் உனக்குள்ள நிலம் முழுவதையும் அவ்வூர் மாணிக்கமுதலியாருக்கு விலைபாகக் கொடுக்க நிச்சயித்துவிட்டேன். அவரும் நொத்தாரிசும் வந்திருக்கின்றனர்" என்றுர் ஏரம்பமூர்த்தி.

"அன்ப, என்னே உங்களியல்பு. நீங்கள் இபற்றும் செயல்கள் யாவும் அறிவுக்குப் புறம்பானவைகளாயிருக்கின்றன. நம்மிருவரையும் பிணைக்க வந்த பொருளைப் பிரித்தலுக்குப் பயன்படுத்துவது முறையாகுமா? "என் மகள் ஒருவித துன்பமுமின்றிச் சுதந்திரமாக வாழட்டும்" என்னும் கருத்தொடு, என் தந்தைதாயர் எனக்களித்த பொருளை, நீங்கள் உங்களுக்குத் தருமாறு கேட்பது, என்னை நாளும் வறுமை நாயொடுபோரச் செய்யத்தானே" என்றுள் மனோன்மணி.

"நீ வறுமைத் துன்பத்தால் வாட யான் பார்த்திருப்பேனென்ன நீ நினைக்கின்றனையா?" என்றுர் ஏரம்பமூர்த்தி.

"யான் ஒருத்தியின் நாயகனிடம் இரந்துண்டு வாழவேண்டுமென நீங்கள் விரும்புகின்றீர்களா?" என்றுள் மனோன்மணி.

"மனோன்மணி, மாணிக்கமுதலியாருக்கு எழுதப்படும் அறுதி யுறுதியில் உன் கையொப்பத்தை இடுகின்றுயா? இல்லையா?" என்றுர் ஏரம்பமூர்த்தி.

"முடியாது" என்றுள் மனோன்மணி.

"முடியாது என்று துணிவுடன் சொல்ல உனக்குக் கற்பித்தவாரார்" என்று கூறியவண்ணம் மனோன்மணியின் மலர் வதனம் கன்றுமாறு நாலைந்து அறைகொடுத்தார் ஏரம்பமூர்த்தி. அவ்வடிகளைத் தாங்கமுடியாதவளாய்த் தாவிப்படரக் கொழுகொம்பிலாத தனிக்கொடிபோல் துவண்டு வீழ்ந்தாள் மனோன்மணி.

அடியோசையையும், மனோன்மணி தன்னை மறந்து ஓவெனக் கதறிய குரலோசையையும செவியுற்ற நொத்தாரிசு அருளம்பலபிள்ளை, உள்ளே ஓடிச்சென்று ஏரம்பமூர்த்தியின் முன்னர் நின்று, "கற்றறிந்து உத்தியோகவாழ்க்கை நடத்தும் நீர், மூடர்கள் போல், இங்ஙனம் அடாதசெயல் செய்பலாமா? உம்மைப்போன்ற ஆடவர்கள் மிகுந்ததாலல்லவா பெண்கள் சமஉரிமை நாடி நிற்கின்றுர்கள்" எனப் பலபல பேசினுர். மனோன்மணியும் அறிவு தெருண்டு எழுந்திருந்தாள். அருளம்பலபிள்ளை அவளை நோக்கி, "பெண்மணியே, பத்தினிப் பெண்டிர் குழுவைச் சேர்ந்தவராகிய நீவிர் இங்ஙனம் செய்யலாமா? கற்பெனப்படுவது சொற்றிறம்பாமையன்றே? தன்னுயகன் விரும்புவதைச் செய்வதுதான் பெண்களுக்கு அழகு. கற்புடையாள் என்னும் பெயரை உதறித் தள்ளாதே. உன் நாயகன் கட்டளைப்படி நட" என்றுர்.

"பத்தினி எனவும் கற்பெனவும் சொல்லிப் பெண்ணுலகத்தைப் பாழாக்கியகாலம் பறந்துவிட்டது. பத்தினிப் பெண்கள் மூட ஆடவர்களின் சொற்படி நடக்கவேண்டும் என்பது பண்டைப் பெரியோர்க்குக் கருத்தன்று. நம் நாட்டைப் பாழாக்குபவர்களில் கைக்கூலிவேண்டும், உத்தியோகத்தர்களே தலையாயவர்கள். பேதைப் பெண்ணின் வாயில் மண்ணிட வந்து நிற்கும் மதியற்றவரே! என் முன்னிலையில் நில்லாது ஓடிப்போவீராக" என்றுள் மனோன்மணி.

ஏரம்பமூர்த்தி அவர்கள் இருவரையும் "நாளைக்காலை தவருது வருகுதிர்" எனக் கூறியனுப்பினர்.

அன்றிரவு பன்னிரண்டுமணியளவில் ஏரம்பமூர்த்தி திடீரெனப் படுக்கையினின்றும் எழுந்து மனோன்மணியைத் தட்டியெழுப்பி, "அடியே, இறுதியாகக் கேட்கின்றேன். கையொப்பம் வைக்கின்றுயா? இல்லையா?" என்றுர்.

"முடியாது" என்றுள் மனோன்மணி.

"முடியாது எனக்கூறிய வாயே சற்றுநேரத்தில் வெட்கமின்றி முடியும் எனக் காணுதி" எனக் கூறியவராய், மனோன்மணியைக் கரத்தைப் பற்றியிழுத்து, ஆங்குள்ள தூணென்றிற் பிணித்தார் ஏரம்பமூர்த்தி. மனோன்மணி இனி நடப்பதைக் காணும் ஆவலுடையளாய்ப் பேசாது நின்றுள். ஏரம்பமூர்த்தி ஒரு எழுதுகோலை அவள் கரத்தில் கொடுத்து, உறுதியை நீட்டிக் கையொப்பம் இடுமாறு பன்முறை வற்புறுத்தினர்.

"முடியாது" என்னும் சொல்லையே மீட்டும் மீட்டும் ஓதினுள் மனோன்மணி.

"முடியாது என இன்னும் ஒருமுறை கூறுவாயானுல் உண்மையாகவே உன் வாயைக் கிழித்திடுவேன்" எனச் சொல்லிப் பளபளவென மின்னும் அரிவாள் ஒன்றைத் தன் மடியினின்றும் எடுத்தார் ஏரம்பமூர்த்தி.

மனோன்மணி தன் செம்பவளவாய்திறந்து "முடியாது" என்னும் சொல்லையே வெளியே எடுத்தாள்.

உன் நெஞ்சம் விஞ்சிய வஞ்சமுடையதாதலினன்றே அஞ்சுதலற்றிருக்கின்றது. அதன் பயனை இன்னே பார் எனக் கூறி அடுக்களையுட் புகுந்த ஏரம்பமூர்த்தி சற்றுநேரத்தில் பழுக்கக் காய்ச்சிய கத்தியுடன் மனோன்மணியின் முன்னிலையிற் றோன்றினுர். தோன்றியவர் "முடியுமா? முடியாதா?" என்றுர். பழைய மந்திரத்தையே உச்சரித்தாள் மனோன்மணி. உடனே அவர் அவளின் வலக்கர மணிக்கட்டில் பொறிகளைச் சிதறிக்கொண்டிருந்த கத்தியால் சுட்டனர். தழலிடை வீழ்ந்த புழுவெனத் துள்ளிக் குதித்துப் பதைத்துச் சுருண்டாள் மனோன்மணி.

"இப்போது முடியுமா? முடியாதா? என்றுர் ஏரம்பமூர்த்தி.

"முடியும் முடியும் கையொப்பமிட யான் எண்ணிய நேரம் வந்துவிட்டது" என்றுள் மனோன்மணி.

பின்னரும் அவள், "என்னுடன் ஐந்தாண்டு உறைந்து என் உயிரும் உன்னுயிரும் ஒன்றெனக் கூறிய நாயக, நீங்கள் என்மீது வைத்துள்ள அன்பு எவ்வளவு நிறையுள்ளது என்பதைச் சுத்தமாய் அறியவே என் பொருளைத் துணைபாகக்கொண்டேன். என் சிறு பொருளைப் பொருளாக மதிக்குமியல்பு எனக்கின்று. தாள்களைத் தாருங்கள் கையொப்பமிடுகின்றேன் எனச் சொல்லி உறுதியில் தன் கையொப்பத்தை இட்டாள் மனோன்மணி.

ஏரம்பமூர்த்தி ஆனந்தத்தோடு வேறலுவலிற் புகுந்தார். மனோன்மணி அந்நள்ளிரவிலே தாய்வீடு செல்லுதற்குரிய ஆயத்தங்களைச் செய்தாள்.

(தொடரும்.)

எல்லோரும்
நட்க்ஷேத்திர
(ஸ்ட்டார்) அடையாளமுள்ள
உருக்கினுற் தயாரிக்கப்பெற்ற





பாத்திரங்களையே
வாங்குகிறுர்கள்

இதனை வாங்குவது:
இதன் பெயருக்கும் மதிப்புக்குமன்று. ஆனுல்,
இதன் நெடுங்காலப் பாவிப்புக்கும்
உயர்தரமான வேலைப்பாட்டிற்குமே!!

இலங்கையில் எவ்விடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

எல்லா விதமான இரும்பு, பித்தளைச்சாமான்களும் ஜர்மன் உள்ளூர் கைவாளிகளும், கேத்தல், தோசைக்கல் முதலிய மற்றும் இதர சாமான்களும் கிடைக்கும். விலை சகாயம்.

(178) 5-8-34—8-35.

இறக்குமதி தனி ஆட்களும் வியாபாரிகளும்:
அ. மு. சீ. சீனிமுகம்மது தம்பி அன் பிறதர்ஸ்,
122, மூன்றும் குறுக்குத்தெரு,
கொழும்பு.

முனிவர்கள் கோபமானது கோபிக்கப்பட்டவராலே தடுத்தல் கூடாது.

# திருவள்ளுவர் திருநாள்.

(காரைநகர் சைவமகாசபையின் வாசிகசாலையில், மேற்படி நாயனாரவர்களின் திருநாட் கொண்டாட்டத்தில் அக்கிராசனம் வகித்த, மானிப்பாய் இந்துக் கல்லூரிப் பிரதமஆசிரியர் ஸ்ரீமான். வி. வீரசிங்கம் B.A., அவர்கள் நிகழ்த்திய பேருரையின் பொழிப்பு.)

சபையோர்களே!

இச்சங்கத்தின் கூட்டமொன்றிற் பங்குபற்றுவதற்கு இப்பொழுது இரண்டாவது முறையாக வந்திருக்கின்றேன். முன்னொருமுறை வந்தகாலத்தில் இந்த வாசிகசாலை அதிகம் முன்னேற்றத்திற்குரிய நிலையிலிருந்தது. ஆனால் இப்பொழுது இவ்வாசிகசாலையின் அங்கத்தினர் சொற்ப ஆர்வங் குறைந்தவராகக் காணப்படுகின்றனர். ஓர் வாசிகசாலையானது ஓர் கிராமத்தின் வெளிச்சமாயிருக்கிறது. காரைநகர் வாசிகளாகிய நீவிர் ஓர் வாசிகசாலையைத் தாபித்து உமது நாட்டுக்குத் தொண்டு புரிவதனாற் புகழை அடைகின்றீர்கள். ஆகையால் மேலும் மேலும் உன்னதநிலையை அடையத்தக்க வழிவகைகளைப் புரிந்து வாசிகசாலையை முன்னேற்றமடையச்செய்வதற்கு இறைவன் உமக்குத் திருவருள்புரிவாராக.

நாட்டின் முன்னேற்றத்துக்குரிய கிரியைகளை முதலாவதாய்ச் செய்வதில் இக்காரைநகர் வாசிகளே சிரேட்டமடைந்திருக்கின்றார்கள். உதாரணமாக, மதுவிலக்குச்சங்கத்தை முதற்றாபித்தவர் இக் காரைநகர்வாசிகளேயாவர். வியாபார பலிதங்களை அடைவதிலும் 'முதன்மை வாய்ந்தவராய்க் காண்கின்றோம். நேற்றைய தினம் "வாக்காளர் சங்கம்" என்றோர் சங்கமும் நிறுவினீர்கள். நான் இவ்விடத்துக்கு இன்று 4 மணியளவில் வந்தேன். இக்கூட்டம் தொடங்குவதற்குச் சொற்ப நேரம் இருக்கிறதென்பதை யறிந்து துறைமுகப்பக்கமாய்ச் சென்றுகொண்டிருந்தேன். சென்றுகொண்டிருக்கும் மார்க்கத்தில் ஓர் பெரியவரைச் சந்தித்தேன். அவரோடு சில விஷயங்களைப் பேசிகிற்கையில், இந்தக் காரைநகர்வாசிகளுக்குள் இப்போ பொறாமை குடிகொள்ளுகின்றதென்பதாக அவர் சொன்னார். அங்ஙனம் பொறாமைபோன்ற சதாவானது உமக்குட் குடிகொள்ளாவண்ணம் பாதுகாத்து எல்லோரும் ஒத்துழைக்கும் நெறியைப் பின்பற்றி ஒழுகவேண்டும்.

இன்றையதினம் இச் சைவமகாசபையின் திருவள்ளுவர் திருநாட் கொண்டாட்ட தினமாகும். திருவள்ளுவ நாயனாரவர்களின் திருநாளைக் கொண்டாடுவதிலும் நீவிரே முன்னுக்கு நிற்கிறீர்கள். திருமயிலாப்பூர், சென்னை முதலிய விடங்களிலேயே இத்திருநாள் மிகுந்த ஆர்வத்தோடு கொண்டாடப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் அனேகவிடங்களி லித்திருநாள் கொண்டாடப்படுவதாக யான் அறியவில்லை. ஆனாற் காரைநகர்வாசிகள் இதைக்கொண்டாடுவதனால், ஒவ்வொரு விஷயத்திலும் அவர்கள் முதன்முதற் கையிடுவது வெளிப்படையாகின்றது.

திருவள்ளுவர் திருநாளென்பது யாது? நாம் வழக்கமாகச் சமயகுரவர் நால்வர் முத்தியடைந்த தினங்களில் அவரின் குருபூசைகளை நடத்துகின்றோம்.† மேலைத்தேசவாசிகள் எப்பொழுதும் தமது பிறந்த தினங்களையே திருநாளாக்கிக் கொண்டாடுவார்கள். நாங்கள் ஒருவர் முத்தியடைந்த தினத்தையே கொண்டாடுகின்றோம். அவர்க்கும் எமக்கும் இடையேயுள்ள பேதம் யாதெனின், அவர்கள் இச்சையை வளர்க்கிறார்கள், நாம் இச்சையை அறுக்கத் தெண்டிக்கிறோம்.

இத்தகைய திருநாட் கொண்டாட்டம் உலகமுழுவதிலும் நடைபெறுகின்றது. ஆங்கில நாட்டவர் சில தினங்களுக்கு முன்னரேயே ஷேக்ஸ்பியருடைய (Williams Shakespeare) திருநாளைக் கொண்டாடினார்கள். எதற்காக ஷேக்ஸ்பியரின் திருநாளைக் கொண்டாடினார்களென்று கேட்போமாயின், அவர் ஆங்கிலநாட்டின் நாடக மகாகவியாசிரியரென்று விடையிறுப்பார்கள். இங்ஙனம் "வாஷிங்டன்", "லின்கொன்" (Washington, Lincoln) முதலியோருடைய திருநாட்களையும் கொண்டாடுவார்கள். இக்கொண்டாட்டங்கள் வாலிபருக்கு எப்பொழுதும் ஓர் மனக்கிளர்ச்சியை உண்டுபண்ணுகின்றன. தாமும் இத்தகைய பெரியாராய் விளங்குவதற்குத் தெண்டிப்பார்கள். வாஷிங்டன் திருநாட் கொண்டாட்டத்திற் பங்குபற்றுகின்ற ஓர் அமெரிக்க வாலிபனின் நோக்கம் அந்நாட்டுப் பிரஜாதிபதி (President) யாய் வருவதற்கான இலக்கை உடையதாகும்.

இதுநிற்க, இப்போ திருவள்ளுவ நாயனாரவர்களைக் குறித்துச் சிந்திப்போம். இவருடைய தந்தையைப் பகவனென்றும் தாயை ஆதியென்றும் அழைப்பர். இவருடன் பிறந்தாரைக் கபிலர், ஒளவை, உறுவை யாதிய நாமங்களாலழைப்பர். இவருடைய தந்தை தாயர், சகோதரரைப்பற்றிய சரித்திரக் குறிப்புக்கள் உண்மையோ வென்பதைக் குறித்து அடியேனாற் கூறமுடியாது. ஏனெனில் இவருடைய சரித்திரத்தின் பிறப்பைப்பற்றிய குறிப்புக்களிற் சந்தேகங்களுமிருக்கின்றன.

இவருடைய தொழிலை வள்ளுவருக்குரிய தொழிலென்று கூறுவர். அதாவது சிலை நெசவுபண்ணும் தொழில். இதைக்குறித்தும் வெளிப்படையான ஆதாரங் கிடையாது. வள்ளுவ குலத்தைச் சேர்ந்தவனொருவனே சிலை நெசவுசெய்ய வேண்டும். இவர் வள்ளுவர்குலத்தைச் சேர்ந்தவரென்பதைத் தாபிப்பதுதான் எங்ஙனம்! வள்ளுவனென்று அரசனின் முரசறையும் பிரசித்தகாரனுக்கும் பெயருண்டு. வள்ளுவனுக்கு வல்லமையையுடையவனென்றும் பொருளுண்டு. வள்ளுவர் என்ற ஓர் குடியின் பெயருமுண்டு. இனி வள்ளுவர் என்பது நாயனாரவர்களின் இடுகுறிப் பெயராயுமிருக்கலாம். ஆகையால் திருவள்ளுவர் இக்குலத்தினர் என்று உறுதியாய்க் கூறித் தாபிப்பதற்குப் போதிய ஆதாரமில்லை. வள்ளுவர் சேரியிலிருந்து வளர்ந்தனரென்று ஓர் சரித்திரங்கூறினும் அதற்கும் ஆதாரமேது?

இவர் பின்பற்றிய மார்க்கம் யாதென்பதை ஆராய்வோம். ஒவ்வோர் மார்க்கத்தினரும் தந்தம் சமயத்தையே திருவள்ளுவர் கைக்கொண்டொழுகினாரென்று கூறுவர். கிறீஸ்த சமயத்தவர் இவரைக் கிறீஸ்தவரென்று கூறுகின்றனர். ஆதாரமாய் 'தோமாஸ்' (Thomas) என்ற கிறீஸ்துவின் சீடர்களில் ஒருவர் இந்திய நாட்டுக்கு வந்து கிறீஸ்தமதத்தைப் பரப்பினாரென்றும் அங்ஙனம் பரப்பிய மதத்திலெடுபட்டுத் திருவள்ளுவரும் அம்மதத்தைத் தழுவினாரென்றும் கனம். பெஸ்க்கி (Father Beschi) என்னும் பாதிரியார்கூறினர். சமணமதத்தினர் "மலர்மிசையேகினான்", "எண்குணத்தான்", "பகவன்" ஆதிய தமது தெய்வப்பெயர்கள் திருக்குறளில் விரவியிருப்பதால் அவர் சமணராயிருந்தாரென்பர். பௌத்தமதத்தினர் 'நீத்தார்பெருமை' யைக்கூறும் அத்தியாயப்பொழிப்பை ஆதாரமாய்க்கொண்டு அவர் பௌத்தமதந் தழுவினாரென்பர். சைவரும் பல ஆதாரங்களைக்கொண்டு அவர் சைவமதத்தினர் என்று தாபிப்பர். ஆனால் அவர் எந்த மதத்தினர் என்பதை உறுதியாய்த் தாபிப்பதற்கு எம்மிடத்திற் போதிய ஆதாரமில்லை. திருக்குறள் போதிக்கும் நற்போதனைகள் யாவும் எல்லா மதத்தினர்க்கும் எல்லாக்காலத்திலும் பொருத்தமாயிருக்கின்றனவென்பதுமாத்திரம் உண்மை. ஆகையால் ஒவ்வோர் மதத்தினரும் திருவள்ளுவர் தந்தம் மார்க்கத்துக் குரியவரென்று சாதிக்கின்றனர். (தொடரும்)

†திருவள்ளுவர் முத்தியடைந்த தினம் யாதென எவருமறிந்திலர். இத்திருநாள் சுயேச்சையான முறையில் நியமிக்கப்பட்டதாகும். ஆனால் அவர் முத்தியடைந்த நாளை அறிவோமாயின் அந்நாளையே நிச்சயமாகக் கொண்டாடுவோம்.

# மறுப்புறுப்பு மூரண்.

(மீசாலைதெற்கு அமரிக்கன் மிஷன் பாடசாலைச் சிரேட்டவகுப்பு மாணவன் ந. பரமானந்தன்)

யுவ௵ ஆனி௴ ௧௮ சனிக்கிழமை பிரசுரமாய 'ஞானசித்தி' ௨-ம் புத்தகம் ௯-ம் இலக்கப் பத்திரிகையில் "சு. சோமசுந்தரம், அறிவாதித்தோதய இராப்பாடசாலை மாணவன்" என்னும் பெயருடனொருவர் தோற்றிச் சிரேட்ட பாடசாலைத் தராதரப்பத்திரவகுப்பிற்கு இப்போ நியமிக்கப்பட்டிருக்கும் இலக்கியப்பாடப்புத்தகமாகிய "தமிழ்மணிமாலை" என்னும் தொகைநூற்குத் தும்பளைப் பண்டிதர் ஸ்ரீ கிருஷ்ணபிள்ளை என்பார் எழுதிய உரையிலுள்ள வழுக்களை எடுத்துக்காட்டி மறுத்து மெய்ப்பொருள் காட்டிச் செல்வாராயினர். அவர்மேற்கொண்ட முயற்சி தற்கால ஆசிரியருலகிற்கு இன்றியமையாது வேண்டப்படுவதொன்றாகலின் நன்முயற்சியேயாகும். ஆதலின் அவர்க்கு நன்றி கூறல் எம்மனோர் கடனாகும்.

ஆயினும் அதில் தெய்வயானை அம்மை திருமணப்படலத்துப் "பொன்னக மதனிடை" என்னும் முதலையுடைய செய்யுளில் 'பொன்னகமதனிடை' என்னுஞ் சொற்றொடர்க்கு ஷை மாணவன் "பொன்னையுடைய இமயகிரியினிடத்து" என இயைபாப்பொருளொன்றிடர்ப்படக்கொண்டு அதைத் தாபிப்பான் பல மேற்கோள்களும் மிகைபடக்காட்டி அவ்வளவினமையாது "இன்னுமிவைகளை யறியுமாற்றலில்லாதவர்கள் பொன்னகம் என்றதற்கு மேருமலையென்று பொருள்கூறி மகிழ்வர்" என இயைபுடைப்பொருளாய "மேருமலையினிடத்து" என்னும் பொருள்கொள்வோரைக் கொன்னே பழித்துஞ் செல்கின்றனர். இமயமலையினிடத்து என்னும் பொருள் இயைபில்பொருளாதலையும் மேருமலையினிடத்து என்னும்பொருளே இயைபுடைப் பொருளாதலையும் காட்டுவல்.

சுப்பிரமணியப் பெருமானுக்குச் சத்தியாகிய தெய்வயானை யம்மையாரும், வள்ளியம்மையாரும் முன்னர் விஷ்ணுவின் புதல்வியரா யவதரித்து அமுதவல்லி சுந்தரி என்னும் பெயருடன் சுப்பிரமணியப்பெருமானை மணக்கக்கருதி அப்பெருமான் றிருவவதாரஞ் செய்தருளிய சரவணப்பொய்கையிற் றவஞ்செய்தருளினர். அக்காலைச் சுப்பிரமணியப் பெருமான் அவர் முன் றோன்றி "அமுதவல்லியே நீ இந்திரன்பாங்கர்ச்சென்று அவன் மகளாயிருக்குதி; சுந்தரியே நீ பூமியில் சிவமுனிவருக்குப் புதல்வியாகத்தோன்றி வேடர்மகளாக வளர்குதி; மேலாண்டு நும்மை மணஞ்செய்துகொள்ளுவோமென்று கூறி மறைந்தருளினார். அவர் வாக்கின்வண்ணமே அமுதவல்லி ஓர் சிறுமியினுருவங்கொண்டு இந்திரனிடஞ்சென்று நான் உன்னுடன் பிறந்த உபேந்திரனுடைய மகளாவேன்; என்னைக் காப்பாற்றுதி; என்றுகூற இந்திரன் தனது ஐராவதயானையை யழைத்து "நீ இவளைக் கொண்டுசென்று மேருமலையினிடை இந்திராணியோடும் வைத்துப்போற்றுதி; இவளால் எமக்கு மேற்பெருஞ் சிறப்புண்டாகும்" எனக்கூற ஐராவதமும் அவ்வாறே மேருவிற் கொடு சென்றுய்த்துப் போற்றிற்று. ஐராவதயானையால் போற்றப்பட்டமையால் தெய்வயானையம்மையார் எனப் பெயர் பெற்ற அவரும், அம்மேருமலையின் கண்ணே சுப்பிரமணியப் பெருமானைத் தியானித்துத் தவஞ் செய்துகொண்டிருந்தார். மேல் சுப்பிரமணியப்பெருமான் சூரபன்மனாதியோரைச் சங்கரித்தபின் அவ்வம்மையாரை மேருவினின்றுமழைத்துத் திருப்பரங்குன்றத்திற் சுப்பிரமணியப் பெருமானுக்குத் திருமணஞ் செய்து கொடுத்தான் என்பது சரித்திரம்.

ஆதலின் தெய்வயானையம்மையாரென்னும்பெயருடைய இப்பிற் றவஞ்செய்தது மேருமலையிலாதலானும், சரவண தடாகத்துத் தவஞ் செய்தது அமுதவல்லி என்னும் பெயருடைய முற்பிறப்பிலாதலானும், அமுதவல்லிதான் சரவணப் பொய்கையிற்றவஞ் செய்த அக்கோலத்துடன் இந்திரனையடையவில்லையாதலானும், ஆண்டுப் "பின்னகமயிர் முடிப்பிணைபற் சூழலை" நீக்கியது அமுதவல்லியம்மையார்க்கன்றித் தெய்வயானையம்மையார்க்காதலானும் "பின்னகமயிர் முடிப்பிணையற்சூழல்" மேருமலையிற்றவஞ் செய்தபோதேயுண்டாயதாகல் வேண்டுமாதலானும் பொன்னகம் என்பதற்கு மேரு என இலேசிற் பொருள் கோடலை விடுத்து பொன்னையுடைய இமயமலைச் சாரலிலுள்ள சரவணப் பொய்கையில் என வலிந்து பொருள் கோடல் எவ்வாற்றானும் பொருந்தாமை காண்க.

அமுதவல்லியம்மையார் சரவணப்பொய்கையிற் றவஞ் செய்த அக்கோலம் விடுத்து ஓர் குழவி ரூபத்துடன் இந்திரனை யடைந்தார் என்பதற்குப் பிரமாணம்

"ஏகு மெல்லையி லமுதமா மென்கொடியென்பாள், பாக சாதனன் றுன்னமோர் குழவியாய்ப் படர்ந்து, மாக மன்னநின்னுடன்வரு முபேந்திரன் மகள்யா, ளுகையா லெனைப் போற்றுதி தந்தையென் றடைந்தாள்"

விடைபெறு படலம் ௭-ம் செய்யுள்.

தெய்வயானை யம்மையார் மேருமலையில் சுப்பிரமணியப்பெருமானை நினைந்து தவஞ் செய்திருந்தனர் என்பதற்குப் பிரமாணம்.

"கொவ்வை போலிதழ்க் கன்னியை மனோவதி கொடுபோ, யவ்வியானையே போற்றிய தனையகாரணத் தாற், றெய்வயானையென் றொரு பெயரெய்தியே சிறிது, நொவ்வு றாது வீற்றிருந்தனள் குமரனை நுவன்றே"

விடைபெறுபடலம் ௪௦-ம் செய்யுள்,

மனோவதி மேருவிலுள்ளது.

# Notice of Sale

## விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 7355-ம் இலக்கவழக்கில் 1935-ம் ஹூ ஆடிமீ 11உயைக் கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழேவிபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1935-ம் ஹூ ஆவணிமீ 17உ சனிக்கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### விபரம்.

தனக்காறகுறிச்சி 1. சின்னப்பு சிவகுருவும், 2. பெண் செல்லாச்சியும் வழக்காளிகள்.

ஷெயூர் 1. வல்லிபுரம் கணபதிப்பிள்ளையும், 2. பெண் சிவகாமனும் எதிராளிகள்.

### ஆதனங்கள்.

1. தனக்காறகுறிச்சியிறை தெக்கணை குடியிருப்பு நிலப்பரப்பு 4. எல்லை கிழக்கு ஒழுங்கை. வடக்கு 2-ம் ஆதனம். மேற்கு கணபதிப்பிள்ளைபெண் தெய்வானைக்குடைய ஆதனம். தெற்கு கணபதிப்பிள்ளைபெண் சிவகாமனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் வான்பயிர்கள் செய்பயிர்கள் கொட்டில் வீடுகளடங்கலிற் சொரியலாய் $\frac{3}{8}$ பங்கும்.

2. வல்லுவெட்டித்துறை இறை. பீத்தோட்டம் நிலப்பரப்பு $9\frac{3}{4}$. எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கைகள். மேற்கு கணபதிப்பிள்ளைபெண் தெய்வானைக்குடைய ஆதனம். தெற்கு 1-ம் ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் தென்னைகள் வேம்புகள் கிணறு அடங்கலிற் சொரியலாய் $\frac{2}{3}$ பங்கும்.

3. தனக்காறகுறிச்சியிறை கரந்தகேணி நிலப்பரப்பு $55\frac{1}{2}$. ஷெதோட்டம் 5. இவைகளில் ஆட்சிப்படி $\frac{1}{4}$ பங்கில் $\frac{1}{5}$ பங்குக்கு நிலப்பரப்பு 3. குளி 2. எல்லை கிழக்கு பத்தர் வேலுப்பிள்ளைக்குடைய ஆதனம். வடக்கும் தெற்கும் வேலுப்பிள்ளை பெண் முத்தாச்சிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு வேலுப்பிள்ளை பொன்னுச்சாமிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம்முழுவதும் முழுக்காணிக்குட்பட இருக்கும் கிணறுகளில் பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

4. ஷெஇறை கரந்தகேணி நிலப்பரப்பு $55\frac{1}{2}$. தோட்டம் 5. இவைகளில் ஆட்சிப்படி $\frac{3}{16}$ பங்கு. நிலப்பரப்பு 11 குளி 14-ல் வடக்குப்புறமாக நிலப்பரப்பு 6. எல்லைகிழக்கு சபாபதிபெண் மூத்தபிள்ளைக்குடைய ஆதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு முத்து மூத்ததம்பிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு கணபதிப்பிள்ளைபெண் சிவகாமனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் முழுவதும் முழுக்காணிக்குட்பட இருக்கும் கிணறுகளில் பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

5. ஷெ இறை காந்தகேணி நிலப்பரப்பு 36. குளி $15\frac{2}{3}\frac{2}{5}$. இதில் 1-ம் துண்டு நிலப்பரப்பு 4 குளி $1\frac{1}{2}$. எல்லை கிழக்கும் மேற்கும் கணபதிப்பிள்ளைபெண் சிவகாமனுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கும் தெற்கும் ஒழுங்கைகள். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் தென்னை முழுவதும் வடக்கெல்லையிலிருக்கும் கிணற்றிலிதற்குரிய பங்கும்.

6. ஷெ இறை அடைவில் நிலப்பரப்பு 15. ஷெ நிலப்பரப்பு 2. எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கைகள். வடக்கு சோமன் பெண் இலட்சுமிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு சுப்பர் மூத்ததம்பியின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் அடங்கலிற் சொரியலாய் $\frac{1}{3}$ பங்கும்.

புலோலிகிழக்கு பருத்தித்துறை 15-7-35. } S. C. Kanagasabai, கொம்மிஷனர்.

(15) 28-7-35—1

## கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலை

ஸ்ரீமான் அ. பொன்னையா அதிபர் அவர்களின் பிரிவுபசாரக் கொண்டாட்டம், ஞாபகநிதி என்பவற்றை நிர்வகித்து நடத்தும்படி மாணவர் சங்கத்தவரால் நியோகிக்கப்பட்ட கருமகர்த்தாக்கள், சென்ற 20-ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்குக் கூடிப் பின்வருந் தீர்மானங்களை நிர்ணயித்தனர். பழைய மாணவர் சிலர் குறித்த விஷயங்களுக்காய் அனுப்பும் பணம் இன்னும் வந்து சேராமையாலும், வேறு சில தடைகளாலும் பிரிவுபசாரக் கொண்டாட்டத்தை ஆவணிமீ 31-ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் நடாத்தவும், மாணவர் சங்கத்திற் சேரும் பணத்தின் ஓர்பகுதியும், தமிழ்க்கல்வி அபிவிருத்தியின்பொருட்டு உபயோகித்தற்காய்ச் சேர்க்கப்படும் ஞாபகார்த்தநிதிப் பணமும் குறித்த அதிபர் திரு. பொன்னையா அவர்களின் விருப்பிற்கிசையக் குறித்த விஷயத்துக்காய் இடப்படல்வேண்டுமென்றும், சேகரிக்கக்கூடிய பணத்தைச் சேர்த்துப் பிரிவுபசாரக்கொண்டாட்ட நிகழ்ச்சிகளின் பின்னர் கூடிய சீக்கிரத்தில் அதைப்பற்றிய சகல விபரங்களுமடங்கிய அறிக்கையொன்று, ஞாபகார்த்த நிதிக் கௌரவ காரியதரிசியாகிய, மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. வீ. விரசிங்கம் அவர்களால் வெளிப்படுத்தப்படல் வேண்டுமென்றும் தீர்மானித்தனர்.

ஆவணிமீ 24-ந் தேதி சனிக்கிழமை கருமகர்த்தாக்கள் சபை கூடி, வரவு செலவுக் கணக்குகளைப் பார்வையிட்டுப் பிரிவுபசாரக் கொண்டாட்ட வைபவங்களை ஆவணிமீ 31-ந் தேதி நடாத்துதற்கேற்ற ஒழுங்குகளைச் செய்வதெனவுந் தீர்மானித்தனர்.

மாணவர் சங்கத்தினர், அதன் காரியதரிசியாகிய திரு. க. ஆறுமுகம் ஆசிரியர், அரசினர் வித்தியாசாலை, கோப்பாய். என்னும் விலாசத்துக்கும், ஞாபகார்த்த நிதிக்காய்ப் பணம் உபகரிப்பவர், ஞாபகார்த்தநிதிக் கௌரவ காரியதரிசி திரு. வீ. வீரசிங்கம், இந்துக்கல்லூரி அதிபர், மானிப்பாய். என்னும் விலாசத்துக்கும் அனுப்பும்படி தயவாய்க் கேட்டுக்கொள்ளுகின்றோம். —கடித.

## மோட்டார் பஸ்ஸில் கத்தி வீச்சு

சென்ற 23-7-35 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5-மணியளவில் பண்ணைத்துறையிலிருந்து வேலணைக்குச் செல்லும் பஸ்வண்டி வங்களாவடியில் வந்து நின்றதும், வண்டியிலிருந்த கார்த்திகேசு — கந்தையா என்பவரது கத்தி வீச்சினல் சாரதியாகிய முருகேசு என்பவருக்குச் சிறு காயமுண்டாகியதாகவும், அதனல் பயங்கொண்ட பிரயாணிகள் பஸ்வண்டியைவிட்டிறங்கியதாகவும் இறங்கும்பொழுது புங்குடுதீவு நாகநாதர் முத்துக்குமாரு என்பவரின் கையிலிருந்த கைச்சங்கிலியையும் குறித்த கந்தையா என்பவர் கத்தியினல் அறுத்து எடுத்துக்கொண்டு சென்றுவிட்டதாகவும் கூறப்படுகின்றது.

## மனைவியைக்கவர்ந்தபுருடன்

### சிறைவாசமும் அபராதமும்

ஸ்ரீமதி ரோஸாலி ஜோன்ஸ் என்னும பெண்ணை, அவளது விருப்புக்கு மாருகக் கடத்திச் சென்ருர்களெனக் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த அவளது கணவராகிய திரு. எவ. டபிள்யு. ஜோன்ஸ் என்பவர்மீதும், வேறு இருவர்மீதும் கொழும்புப் பெரியகோட்டில் தொடரப்பட்டிருந்த வழக்கில் பின்வருமாறு தீர்ப்புக் கூறப்பட்டது. 1-ம் எதிரிக்கு 1-ம் குற்றச்சாட்டிற்கு 750 ரூபா அபராதமும் கோடுகலையும்வரை சிறையும். அபராதத்தொகையில் 300 ரூபா வழக்காளிக்குச் சேரவேண்டும். அபராதமிறுக்கத் தவறினல் 3 மாதக் கடுங்காவற்றண்டனை. 2-ம் குற்றச்சாட்டுக்கு கோடுகலையும்வரை சிறைத்தண்டனையும் இரண்டுவருடங்களுக்கு நன்னடத்தைப்பிணையும். 3 -ம் 4-ம் குற்றச்சாட்டுகளுக்கு கோடுகலையும்வரை சிறைத்தண்டனை. சிறைத்தண்டனை ஒரேகாலத்தில் அனுபவிக்கவேண்டும. 2-ம் 3-ம் எதிரிகளுக்கு 1-ம் குற்றச்சாட்டுக்கு கோடுகலையும்வரை சிறைத்தண்டனையும் 100 ரூபா வீதம் அபராதமும். அபராதம் இறுக்கத் தவறினல் ஒருமாதக் கடுஞ்சிறைத்தண்டனை, 2-வது, 3-வது, 4-வது குற்றச்சாட்டுகளுக்கு கோடுகலையும்வரை சிறைத்தண்டனை. சிறைத்தண்டனை ஒரேகாலத்தில்அனுபவிக்கவேண்டும்

## எள்ளு வியாபாரியிடம் கொள்ளை.

சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று மானிப்பாயைச்சேர்ந்த சரவணமுத்து—கணபதிப்பிள்ளை என்னும் எள்ளு வியாபாரி தனது பற்றுவரவுகாரராகிய கதிரவேலு பெண் பொன்னுச்சியிடம் 60 ரூபாவும், வயிரமுத்துபெண் வள்ளியம்மையிடம் 42 ரூபா 50 சதமும் பெற்றுக்கொண்டு புன்னலைத்தெருவில் வரும்போது அவர்க்கு முன்னல் ஓர் மோட்டார்ரதம்வந்து நின்றது என்றும், S சிவரத்தினம், S. நடராசா, V, கந்தசாமி, P. இராசரத்தினம், A. சுப்பிரமணியம் என்பவர்கள் அவ்விரதத்துக்குள் இருந்தனர் என்றும், சிவரத்தினம், நடராசா, கந்தசாமி என்பவர்கள் இரதத்தினின்றும் இறங்க, 2-ம் எதிரி (நடராசா) கணபதிப்பிள்ளையை எள்ளுவியாபாரியை)க் கட்டிப்பிடித்து மடியிற்குள் இருந்த பணப்பையைப் பறித்து மோட்டாரிரதத்துக்குள் எறிந்தார் என்றும், கணபதிப்பிள்ளை சத்தமிட, கந்தசாமி "பொத்தடா வாய்" என்று அவரை அடித்தார் என்றுங் கூறப்படுகிறது. இதற்கிடையில் மோட்டாரிரதம் புறப்படக் கந்தசாமி தன்னுடைய கூட்டாளிமார் இருவரையும் விடுத்து மோட்டாரிலேறிச் சென்றுவிட்டாராம்.

குடிவெறியுடன் சிவரத்தினம் நடராசா என்பவர்கள் தெருவில் நின்றனர் என்று அறியக்கிடக்கின்றது.

இது விஷயமாகச் சண்டிருப்பாய்ப் பொலிஸ்விதானை ஸ்ரீ சோமசுந்தரம் அவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் முறைப்பாடு செய்தார். நீதிபதி முறைப்பாட்டினை ஏற்றுக்கொண்டு எதிரிகளுக்கு விருந்து விடும்படி கட்டளையிட்டார்.—ந.நி.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மு. கந்தையா, கரணவாய் வடக்கு பெண் பொன்னம்மா வழக்காளிகள்

சின்னத்தம்பி கணபதிப்பிள்ளையும் பெண் அன்னப்பிள்ளையும் சின்னையா கைம்பெண் சிவகாமிப்பிள்ளையின் சட்டபூர்வமான பிரதிநிதிகள், கரணவாய் வடக்கு. எதிராளி

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் 7537-ம் இலக்க வழக்கில் 1935ம்ஹூ ஆனிமீ 2-ந் தேதியைக்கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும்காணிகள் 1935ம்ஹூ ஆவணிமீ 3-ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் 3-மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### விபரம்

(1) உடுப்பிட்டியிறை "பச்சந்தை" நிலைப்பரப்பு $8\frac{1}{4}$. இதில் மேற்குப்பக்கமாக $\frac{1}{3}$ பாகம், நிலைப்பரப்பு $2\frac{3}{4}$. கத்தாவத்தைக் குறிச்சியிறை பச்சந்தை நிலைப்பரப்பு இலாச்சம் $3\frac{1}{2}$. இரு பிரிவுகளும் சேர்ந்து நிலைப்பரப்பு $6\frac{1}{4}$. இதில் மேற்குப்பக்கமாக $1\frac{1}{2}$ பரப்பு நீக்கி மிகுதியில் $1\frac{1}{2}$ பரப்பு. அடுத்தாப்போலுள்ள $3\frac{3}{4}$ பரப்பு. எல்லை கிழக்கு ஞானி கந்தையாவுக்கும் சகோதரர்களுக்கும். வடக்கு வயிரவநாதர் சபாரத்தினதத்துக்கும் மறுபேருக்கும். மேற்கு சின்னத்துரை பெண் வள்ளிப்பிள்ளைக்குரிய ஆதனம். தெற்கு வயிரவநாதர் சபாரத்தினத்துக்கும் பெண்சாதிக்குமுரிய ஆதனம். இது முழுவதும் பனைகளும் வடலிகளும்.

(2) பொலிகண்டிக்குறிச்சியிறை "பட்டளசிட்டி" நிலைப்பரப்பு $12\frac{3}{4}$ ஷெ வீடு $\frac{3}{4}$ இதில் வடமேற்குப் பக்கமாக நிலைப்பரப்பு $9\frac{1}{2}$ இதில் வடக்குப்பக்கமாக $2\frac{1}{3}$ பரப்பு நீக்கி, இதற்கடுத்தாப்போல் தெற்குப்பக்கமாக $2\frac{3}{4}$ பரப்பு.

எல்லைகிழக்கு கைஒழுங்கை. வடக்கு கனகசபைபெண் குஞ்சிப்பிள்ளையினுதனம். மேற்கு ஆறுமுகம்பெண் சின்னம்மாவினுதனம். தெற்கு சின்னத்தம்பிபெண் சின்னப்பிள்ளையினுதனம். இதடங்கலும்.

யாழ்ப்பாணம், 1935-ம்ஹூ ஆடிமீ 24உ

C. Kandiah Chettiar, கொம்மிஷனர்.

(16) 28-7-35.


## ஜோதிட விளம்பரம்

ஜாதகம் எழுதுவித்துக்கொள்ள விரும்புவோர் தங்கள் தங்கள் இஷ்டப்படி சுத்தமாகவும் சீக்கிரமாகவும் செய்வித்துக்கொள்ளலாம்.

கிரகஸ்புடம், பாவஸ்புடம், தசவர்க்கம், அஷ்டவர்க்கம், கிரகசமயம், கிரகபலன், அஷ்டவர்க்கபலனும், காலதெசை, பிராணதெசை, சீவதெசை, மனேதெசை, மிருத்துதெசை, இவைகளும், மகாதெசை அந்தரபலனுக எழுதியுங் கொடுப்பதற்கு ரூபா 60.
ஷெஒருதெசைக்கு அந்தரபலனும் மிகுதி புத்திபலனுமெழுத ரூ.35.
ஐந்துவருஷ அந்தரபலனும் மிகுதி புத்திபலனும் எழுத ரூபா 10.
முற்றும் புத்திபலனும் சுருக்கமான பிறபலன்களும் எழுத ரூபா 5.
குறிப்பு எழுத ரூபா 1. விவாகப் பொருத்தம் பார்க்க ரூபா 2.

கோவில், வீடு, கிணறு முதலிய கிருகசம்பந்தமான கருமங்களும் எம்மிடம் செய்வித்துக்கொள்ளலாம்.

ஜாதகம், குறிப்பு, ரேகை முதலியனமூலம் தற்காலம் நடக்கும் பலாபலன் அறிய விரும்புவோர் ரூபா 1 கொடுத்தல்வேண்டும்.

ஜாதகம் எழுதுவித்துக்கொள்ள விரும்புவோர் பிறந்த ஊர், வருஷம், மாதம், தேதி, நேரம், ஆண், பெண் முதலியவற்றின் சரியான விபரத்துடன் மேற்காட்டிய விகிதத்திற் பாதி முற்பணமாக அனுப்பவேண்டும்.

K. Vaithilingam, Astrologer, Urelu, Jaffna.

க. வைத்தியலிங்கம், சோதிடர், ஊரெழு, சுன்னுகம், யாழ்ப்பாணம்.

(188) 9-9-34

# "The EeLAKESARI"

**THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON**


LARGEST CIRCULATION GUARANTEED — BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 } Chunnakam, Jaffna, 28th July 1935, Sunday. { No. 4



## பவுண்மார்க் ஓடுகள்

இப்பொழுதும் விசேடமாக மதிக்கப்படுவதும் பவுண்மார்க் ஓடுகள் இவைகளே.



எப்பொழுதும் நன்கு மதிப்பிடப்படும் அழகு மிளிரும் உன்னத மாளிகைகளில் வேயப்படுவன.

இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பெலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதெனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். **பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.**

இங்ஙனம்

### சி. வீரகத்திப்பிள்ளை அன்டு சன்ஸ்

(இவை விற்குமிடங்கள்)

யாழ்ப்பாணம் { பெரியகடை, பறங்கித்தெரு
பருத்தித்துறை ....
வல்வெட்டித்துறை
காங்கேயன்துறை
} சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ்

காரைநகர் .... .... சி. க. ஆறுமுகம்பிள்ளை
ஊர்காவற்றுறை .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ்

(103) 23-9-34.

அகில இலங்கை

## ஆதாய எலச்சீட்டுக் கம்பனி

**THE LANKA BENEFIT CO.,**
**GRAND BAZAAR, VANNARPONNAI, JAFFNA.**

தலைமைக் காரியாலயம் :
பெரியகடைத்தெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

கிளைக் காரியாலயங்கள்:
சங்கானை, காங்கேசன்துறை, சுன்னாகம்

பின்வரும் வகுப்புகள் இப்போ அமைக்கப்படுகின்றன

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | 4-ம் | வகு. | 1000/- | ரூபா | 40/- | ரூபா வீதம் | 25 | மாதத்திற்கு |
| B | 8-ம் | ,, | 500/- | ,, | 20/- | ,, ,, | 25 | ,, |
| C | 12-ம் | ,, | 250/- | ,, | 10/- | ,, ,, | 25 | ,, |
| D | 7-ம் | ,, | 125/- | ,, | 5/- | ,, ,, | 25 | ,, |
| BMC | 2-ம் | ,, | 250/- | ,, | 10/- | ,, ,, | $12\frac{1}{2}$ | ,, |
| WC | 3-ம் | ,, | 250/- | ,, | 5/- | ,, ,, | 50 | கிழமைகட்கு |
| WD | 4 | ,, | 125/- | ,, | 5/- | ,, ,, | 25 | ,, |
| தினசரி | 6&7ம் | ,, | 100/- | ,, | 1/- | ,, ,, | | |

வேண்டிய விபரங்கட்குக் கீழ்க்காணும்விலாசத்திற்கு எழுதி அறிக.

மனேஜர், அகில இலங்கை ஆதாய எலச்சீட்டுக் கம்பனி
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(175) 5-8-34

## திருநெல்வேலி ஒற்றுமைநிதி
(வரைவுளது)

**அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 500,000**

ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி
**ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்.**

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்
திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.

வேண்டிய இடங்களில்
**கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.**

தேசீயகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும்
ஆதலால்
முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்
**நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.**

இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறோம்
உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும்
சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

**பங்குகளுக்கு முந்துங்கள்**

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும்
சந்தாவுக்கு ஏற்றுக்கோள்ளப்படும்.

வ.சோமசுந்தரம், காரியாதிகாரி.

(203) 18-11-34—11-35

## பவளகாந்தன் அல்லது
## கேசரிவிஜயம்

குறைந்த விலை! நிறைந்த பொருள்!
17 அத்தியாயங்கள் 550 பக்கங்கள்
**விலை ரூபா 2.**

தனலக்ஷ்மி புத்தகசாலை
சுன்னாகம்

## சாலாமிசிரி லேகியம்

இந்த லேகியத்தை நான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுநலத்தைக் கருதியே இப்போது இதைப்பற்றி விளம்பரப் படுத்தினோம்.

இது சாலாமிசிரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாக, பீதானுசாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாணி, நீர்முள்ளி விதை, நாகப்பூ, வங்கபஸ்பம் அப்ரக் பஸ்பம், பவள பஸ்பம், வெள்ளி பஸ்பம், அயக்காந்த செந்தூரம், சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துள் உண்டாயிருக்கும் பக்க வாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டு வந்தால் மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இதன் விலை ராத்தல் ஒன்றுக்கு ரூபா. 20. அரை ராத்தல் ரூபா 10. கால் ராத்தல் ரூபா 5. தாபற்செலவு வேறு.

சிங்கப்பூர், பினாங்கு, முதலிய தொடுவாய் ராச்சியப் பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினால் முன் மணியார்டர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலை.
காத்தான்குடி போஸ்ட், மட்டக்களப்பு, சிலோன்.
Kattankudi P. O. Batticaloa, Ceylon

(25) 21-1-34.



இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்—மயிலிட்டி தெற்கு "திருமகள் நிலய"த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் "தலையாட்டி"யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1935-ம் ஹு ஜூலை மீ 28-ந் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.